24-8-2006

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xiv-xxix |
| 1. **வினாக்கள்—விடைகள்**— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-31 |
| 2. **சிறப்புக் கவன ஈர்ப்பு** — | |
| சென்னை, மூன்றாவது இருப்புப் பாதை அமைக்கும் பணியால் பாதிக்கப்படுவோருக்கு மாற்று இட வசதி அளித்தல் | 31-35 |
| 3. **கவன ஈர்ப்பு**— | |
| சந்தன மரங்கள் வெட்டிக் கடத்தப்படுவதைத் தடுத்தல் | 35-41 |
| 4. **தகவல் கோரல்**— | |
| சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்தை மக்கள் பாதிக்கப்படாதவண்ணம் மேற்கொள்ளுதல் | 42-44 |


53-319—1

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)- | பக்கங்கள்

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2006 | 44-45

6. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 45-168

*மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி | 45,72,79, 144-156

*திரு. செ. கருப்பசாமி | 70,72-82,167

திரு. எம். அன்பழகன் | 83-89

*திருமதி டி. யசோதா | 89-101

திரு. டி. மூர்த்தி | 51, 102-108,161

*திரு. கே. மகேந்திரன் | 55, 108-114,162

*திருமதி பி. பத்மாவதி | 60, 115-121,164

*திரு. கு. செல்வம் | 121-128

திரு. எஸ்.பி. ஜெயராமன் | 128-133

*திரு. இரா. இராமபிரபு | 57, 133-139,163

திருமதி ஆர். பிரேமா | 139-144

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 169



## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மொலாசஸ், சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி–தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227431
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

12. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**13. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**19. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**21. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

**23. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனம் மற்றும் சின்கோனா

**24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25\. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

26\. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

27\. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

28\. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

29\. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

30\. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1\. Chief Minister -- **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2\. Minister for Finance -- **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3\. Minister for Electricity and Rural Industries -- **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4\. Minister for Rural Development and Local Administration -- **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Union, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

5. Minister for Co-operation .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics

6. Minister for Agriculture .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. Minister for Public Works .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. Minister for Higher Education .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. Minister for Transport .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. Minister for Backward Classes .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. Minister for Revenue and Law .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. Minister for Tourism .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

- Tourism and Tourism Development Corporation

13. Minister for Information .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. Minister for Food .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. Minister for Housing and Slum Clearance .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste Land Development

16. Minister for Health .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 17. Minister for Labour | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment |
| 18. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 19. Minister for Handlooms and Textiles | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 20. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thennarasu:** School Education and Archaeology |
| 21. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 22. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 23. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 24. Minister for Highways | .. | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 25. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Home. |
| 26. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 27. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 29. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 30. Minister for Khadi | | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan |

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன்,<br>எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. ரா. கோவிந்தராசு,<br>எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல் | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன்,<br>எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ரா. நர்கராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி,<br>எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அங்கையற்கண்ணி, செல்வி ஆ. .. சங்கராபுரம்
2. அப்துல் பாசித், திரு. எச். .. வாணியம்பாடி
3. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
4. அமரமூர்த்தி, திரு. து. .. அரியலூர்
5. அரி, திரு. கோ. .. திருத்தணி
6. அருண்மொழிதேவன், திரு. ஆ. .. சிதம்பரம்
7. அருள் அன்பரசு, திரு. .. சோளிங்கர்
8. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
9. அன்பரசன், திரு. தா.மோ. .. ஆலந்தூர்
10. அன்பழகன், திரு. எம். .. பழனி (செ.வ.)
11. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
12. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
13. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-I
14. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
15. ஆறுமுகம், திரு. கி. .. செங்கல்பட்டு
16. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
17. இராசசேகரன், திரு. எஸ். .. ஆலங்குடி
18. இராணி, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவ)
19. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
20. இராமசாமி, திரு. கரி. .. திருவாடானை

1. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
2. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
3. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - நகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ் - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அ.ரா. .. ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. .. மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ)
75. சந்திரகாசி, திரு. பா. .. வானூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். .. மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராஜ், திரு. க. .. ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்
85. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)



86. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்
87. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. சு. .. தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. .. விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
91. ஸ்ரீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
95. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்றாம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஜா. .. சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
106. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். .. முசிறி
108. செல்வராஜ், திரு. சு. .. ஸ்ரீவைகுண்டம்

109. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
110. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. .. ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
131. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு



132. துரைசாமி, திரு. வீ.பெ. .. சங்ககிரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி என். .. நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கே.கே.பெ. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |



| | | |
|---|---|---|
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. பூ. | - அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | - மதுரை மத்தி |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர்,
## மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வி.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 8, விய - திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 24, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆக்கமும் கேடும் அதனால் வருதலாற்*
*காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு"*

ஆக்கமும் அழிவும் சொல்லால் ஏற்படும் என்பதால், எந்தவொரு சொல்லிலும் குறைபாடு நேராமல் கவனமாக இருக்க வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா வரிசை என் 81, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**81—**

### மின்மாற்றிகள்

***884—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியிலுள்ள குறைந்த திறனுடைய அனைத்து மின்மாற்றிகளையும் அதிகத் திறனுள்ளவையாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிப்பட்டு தொகுதியில் அமைந்துள்ள ஏகலாபுரம், வெளிகரம், ஜனகாராஜகுப்பம், சிங்கசமுத்திரம் ஆகிய இடங்களில் உள்ள 63 கே.வி.ஏ. மின்மாற்றிகள் அதிக திறனுள்ள 100 கே.வி.ஏ. மின்மாற்றிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், ஜி.சி.எஸ். கண்டிகை, கே.எம்.ஆர். குப்பம், போகூர்கண்டிகை ஆகிய ஊர்களில் உள்ள மின்மாற்றிகளின் திறனை உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இந்த அவையிலே, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் பல நன்மைகளை என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதிக்கு அளித்தார்கள் என்பதைப் பதிவு செய்திருக்கின்றேன். புதிய துணை மின் நிலையங்களை நிறுவி, ஏற்கெனவே இருந்த துணை மின் நிலையங்களின் நிலையை உயர்த்தி அவர்கள் ஆணையிட்டு உதவியிருக்கின்றார்கள். மின்மாற்றிகளைத் திறனுயர்த்தி அமைப்பது குறித்துப் பொதுவாக, துறையிலே estimate போட்டு, பிறகுதான் அதை மாற்றுகின்றார்கள். ஏற்கெனவே இருக்கின்ற அனைத்து மின்மாற்றிகளையும் ஒரேமுகமாக, ஒரே அரசாணைமூலமாக திறனுயர்த்தி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேநேரத்திலே, மின்சார வாரியத்தினுடைய செயல்பாடுகள் மேலும் சிறப்பானடைய, 2003 Bundling Act என்ற மத்திய அரசினுடைய சட்டத்தை, உற்பத்தி, விநியோகம் அதாவது செலுத்துகின்ற பிரிவு, அதேபோல நிர்வகிக்கின்ற maintenance என்று சொல்லப்படுகின்ற அத்தனைப் பிரிவுகளையும் துறையின்மூலமாகவோ அல்லது தனியார்மூலமாகவோ, தனித் தனியாகப் பிரித்து அளிக்கின்ற பணியினை இலாகா செய்யுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன். ஏற்கெனவே மும்பை போன்ற மாநகரங்களிலே, இந்த நிகழ்வை, மத்திய அரசாங்கத்தினுடைய சட்டத்தைக் கொண்டு செயல்படுத்தி இருக்கின்றார்கள். சில மாநிலங்கள்தான் அதை ஏற்க மறுக்கின்றன. நம்முடைய மாநிலம்கூட அந்தச் சட்டத்தினை அமல் செய்யாமல், ஆறு மாதம், ஆறு மாதம் என்று நீட்டித்து வருகின்றது.



ஆகவே, மத்திய அரசினுடைய, மின் துறை சம்பந்தப்பட்ட சட்டத்தினை நம்முடைய அரசு செயல்படுத்துமா என்றுதங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமன் அவர்கள், Distribution, Transmission, Generation ஆகிய 3 பிரிவுகளையும் தனித் தனியாகப் பிரித்துத் தனியாருக்குக் கொடுக்கப்படுமா அல்லது மின் வாரியமே நடத்துமா; ஏனென்றால், 2003-லே மத்திய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்டத்தின்படி அப்படிச் செய்ய வேண்டுமென்ற ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதே, இந்த அரசு என்ன செய்யப்போகிறது என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி சென்றிருந்தபோது, அவரோடு செல்லக்கூடிய வாய்ப்பும் பெற்ற காரணத்தால், அப்போதே மத்திய மின் துறை அமைச்சர் மாண்புமிகு ஷிண்டே அவர்கள், இதே கேள்வியைக் கேட்டார்கள். இந்தியாவிலே 2003 ஆம் ஆண்டு மின் வாரியச் சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம், இந்தியாவிலே பல மாநிலங்கள் Distribution, Transmission, Generation மூன்றையும் தனித் தனியாகப் பிரிப்பதற்கு ஒப்புதல் தந்திருக்கின்றன; நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, "நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம்; இதைப்பற்றிச் சிந்தித்து முடிவெடுக்க 6 மாத காலம் அவகாசம் கொடுங்கள்" என்று சொல்லிவிட்டு, "இந்தப் பிரச்சினையை நாங்கள் அமல்படுத்த வேண்டுமானால், தமிழ்நாட்டிலே தொழிலாளர்கள் மத்தியிலே பெரிய குழப்பம் ஏற்படும்; எனவே, பக்கத்திலே இருக்கக்கூடிய கேரள மாநிலத்தில் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவார்களேயானால், அதற்குப் பிறகு, தமிழ்நாடு அரசாங்கமும் இதைப்பற்றிப் பரிசீலிக்கும்" என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறோம். அதையே மாண்புமிகு உறுப்பினருக்குப் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் தினமும் மின்சாரம் சரியாகப் போகாத காரணத்தினால் இரண்டு மூன்று transformer-கள் சரியாக இயங்காமல்

பழுதாகிவிடுகின்றன. அவற்றை மாற்றுவதற்கு அதிகாரிகளை அணுகுகின்றபொழுது, எங்களிடம் போதுமான transformer-கள் இருப்பு இல்லாத காரணத்தினால், அவற்றைச் சரிசெய்து மாற்றுவதற்கு ஒருவார காலம் ஆகும் என்ற நிலையினைக் கூறுகின்றார்கள். அவற்றைச் சரிசெய்து, கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில் ஐந்து transformer-களுக்குமேல் இருப்பு இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல, தேனி by pass சாலை, மிகவும் இருள் சூழ்ந்த பகுதியாகும். அங்கு தேனி நகர்மன்றத்தின் வாயிலாக 30 விளக்குகள் அமைப்பதற்கு மின் துறைக்குப் பணம் செலுத்தி, post-கம்பமும் ஊன்றப்பட்டிருக்கின்றது. கடந்த வாரம், வனத் துறை அதிகாரிகள் சென்று, அந்த wire-களை இழுத்து விளக்குகளை மாட்டுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** 15 தினங்களுக்கு முன்புகூட, அந்த by pass சாலையில், இரவு நேரத்தில் தனியார் mill-இல் பணிபுரிந்துவந்த பெண்கள் வேனில் வரும்போது வழிமறித்துக் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றார்கள். மிகவும் இருள் சூழ்ந்த பகுதி, அந்த by pass பகுதி. அந்தச் சாலையில் அனுமதிக்கப்பட்டு ஊன்றப்பட்ட, 30 post-கம்பங்களிலேயும் விளக்குகளை ஏற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், இரண்டு துறைகளிலேயிருந்து கேள்விகளைக் கேட்டிருக்கிறார். ஒன்று, மின்சார வாரியத்தைப் பொறுத்தது. அங்கே transformer-கள் பழுதாகி, அவற்றை அதிகாரிகளை, அவர்களிடத்திலேபோய் அணுகியபோது, ஒரு வார காலத்திலே பழுது பார்க்கப்படும் என்று சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பணியை ஒரு வார காலத்திற்குள் அவர்கள் பழுதுபார்க்காமல் இருப்பார்களேயானால், உடனடியாக எடுக்க வேண்டுமென்று இன்றே அதிகாரிகளிடத்திலே சொல்லி, அந்தப் பணிகளைச் செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும். இரண்டாவது, தெரு விளக்குகள் போடுகின்ற நேரத்தில் ஏற்பட்ட பிரச்சினையைச் சொன்னார். அது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரைச் சார்ந்தது. அந்தத் துறை அமைச்சரிடத்திலே தனியாகக் கேள்வியைத் தொடுத்தால், அவர் அதற்குரிய பதிலைச் சொல்வார்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் தொகுதியிலே போதமலை, கீழமலை, மேலூர், கீழூர் ஆகிய மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய அந்த மலைப் பகுதி, இதுவரை மின்சாரமே கண்டிராத பகுதியாக இருக்கிறது. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, மலைவாழ் மக்கள்மீது பற்றும் பாசமும் கொண்ட அரசு, அங்கே மின்சார வசதி ஏற்படுத்தித் தர முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். இந்தியாவிலேயே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோதுதான், அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென்று ஒரு திட்டமிட்டு 99.5 சதவீதம் கிராமங்கள் மின்மயமாக்கப்பட்டன. இன்னும் சொல்லப்போனால், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதிகளிலேகூட மின்னிணைப்புகள் கொடுக்கப்பட்டன. மிச்சமிருந்த .5 சதவீத கிராமங்களிலே இன்னும 100 சதவீதம்தான் மின்னிணைப்புப் பெறாத கிராமங்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. அந்தக் கிராமங்கள் மலைப் பகுதிகளிலே இருக்கின்ற காரணத்தால், அந்தக் கிராமங்களுக்கு மின்னிணைப்பு கொடுப்பது என்பது பல கோடிக்கணக்கான ரூபாய் செலவிட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைக் கருத்திலேகொண்டு, நம்முடைய மத்திய அரசிலே இருந்துவந்த மரபுசாரா எரிசக்தித் துறை அமைச்சர் அவர்கள், 10 தினங்களுக்கு முன்னாலே முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசும்போது, அப்படிப்பட்ட கிராமங்கள் தமிழகத்திலே எவ்வளவு இருக்கின்றன என்று கேட்டு, 200 கிராமங்கள் இருக்கின்றன என்று சொன்னவுடன், 94 கிராமங்களுக்கு இந்த ஆண்டு மரபுசாரா எரிசக்தித் துறை மூலம் சூரிய வெப்பத்திலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தைப் பயன்படுத்தி மின்னிணைப்பு வழங்கவும், மீதியிருக்கக்கூடிய 106 கிராமங்களுக்கு அடுத்த ஆண்டு மின்னிணைப்பு வழங்கவும் அவர்கள் வாக்குறுதி தந்து, இந்த ஆண்டுக்கான பணத்தை இப்போது அனுப்பி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த மலைவாழ் கிராமங்களுக்கு இந்த ஆண்டே தெரு விளக்குகளும், வீடுகளுக்கு இணைப்பும், மின்சாரமும், சூரிய ஒளியின்மூலம் கிடைக்கின்ற மின்சாரத்தைப் பயன்படுத்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

முற்பகல் 9–40

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதற்குத் தக்க பதிலை, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தைத்தான் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இப்படிப்பட்ட ஒரு நிர்ப்பந்தம் வருவது என்பது, உலக வங்கி, NABARD வங்கியினுடைய நிர்ப்பந்தத்தின் காரணத்தினாலே, தொடர்ந்து பல துறைகளிலே இப்படி வருகிறது. குறிப்பாக, அத்தியாவசியத் தேவைகள் என்ற முறையிலே, இந்த மின் துறை, மக்களுக்கு எல்லாவகையிலும் சேவை செய்யக்கூடிய துறையாக இருக்கிறது. அதுவும், தமிழகத்திலே, எங்கேயும் இல்லாத வகையிலே, விவசாயிகளுக்கான இலவச மின்சாரத் திட்டத்தை வழங்கி, அதைச் சிரமத்தோடு நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவாதத்தை அளித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே, ஒரு விளக்குத் திட்டம், குடிசைகளுக்கு, ஏழைகளுக்குக் கிடைப்பதற்கான அந்த வாய்ப்பு; சிறு தொழில்களைப் பாதுகாப்பதற்குரிய முயற்சி, இப்படித் தொடர்ந்து பல நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறபோது, இந்த உலக வங்கியினுடைய நிர்ப்பந்தம் என்பது, நம்மை அப்படிப்பட்டக் காரியங்களில் ஈடுபடவிடாமல் தடுத்துவிடுகிறது. அமெரிக்காகூட, அவர்கள் நாட்டிலே விவசாயிகளுக்கு, 32 ஆயிரம் டாலர் அளவிற்கு அவர்களுக்கு மானியம் வழங்குகிறார்கள். ஆனால், அதே அமெரிக்கா, இந்தியாவிற்கு, விவசாயத்திற்காகக் கடன் கொடுக்கிறபோது, "மானியம் வழங்கமாட்டோம் என்று உத்தரவாதம் செய்தால்மட்டுமே, கடன் கொடுப்பேன்" என்று சொல்கிறது. அதுதான், மின் துறைக்கும் பொருந்துகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் ஏற்படுகிறபோது, நம்முடைய மத்திய அரசும், அதற்கு இசைவு தெரிவிக்கிற முயற்சிகள் பலவகையிலே இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திற்கு என்று வருகிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய திட்டங்களை நிறைவேற்றுகிறவர்; இப்படிப்பட்ட காரியங்களை ஏற்கமாட்டார் என்ற காரணத்தினாலே, இதைப்பற்றி ஒரு தெளிவான கருத்தை, நம்முடைய மாநிலத்திலிருந்து உருவாக்குவதற்கான



2006 ஆகஸ்ட் 24]

முயற்சிகளை, மத்திய அரசாங்கத்தின்மூலமாக, நமது மாநில அரசாங்கம், NABARD வங்கி, உலக வங்கிகளிடமிருந்து பெறுகிற கடன்களுக்குரிய இந்த விதிமுறைகளைத் தளர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, NABARD வங்கியிடம், கடன் வாங்கும்போது, மத்திய அரசுக்குச் சில நிபந்தனைகளை வகுக்கிறது. ஆனால், மத்திய அரசு, அவற்றை மாநில அரசுகளுக்கு ஆணைகளாகப் பிறப்பித்து, "மின் இணைப்பினை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கக்கூடாது; இலவச மின்சாரம் தரக்கூடாது. அதைப்போல, Bundling – விநியோகத்திலே தனியார்த் துறைக்கோ அல்லது மற்றவர்களுக்கோ கொடுப்பதற்கு முன்வர வேண்டும்" என்றெல்லாம்கூட நிபந்தனைகளை விதித்தாலும்கூட, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கும்போது, அந்தச் செலவை, மாநில அரசாங்கமே எடுத்துக்கொள்வதாக இருந்தால், மத்திய அரசுக்கு ஆட்சேபணை இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான், இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலே மட்டும்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் செலவைத் தமிழக அரசே ஏற்றுக்கொண்டு, நாம் இலவச மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். NABARD வற்புறுத்தினாலும்கூட, மத்திய அரசாங்கம் அதற்கு இணங்கினாலும்கூட, தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இப்படிப்பட்ட திட்டங்களுக்கு அனுமதி வழங்கமாட்டார் என்பதை உறுதியாக, இங்குள்ள உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

82—

## தொழில்நுட்பக் கல்லூரி

***3631—திரு. க. இராஜேந்திரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 24

ஜெயங்கொண்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசுத் துறையில், ஜெயங்கொண்டத்தில், புதிதாக அரசுத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஜெயங்கொண்டம் தொகுதியில், ஜெயங்கொண்டம் ஒன்றியம், தா.பழூர் ஒன்றியம், அதேபோல, ஆண்டிமடம் தொகுதியில் ஆண்டிமடம் ஒன்றியம், செந்துறை ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த மாணவ, மாணவிகள், அரசு மற்றும் தனியார்ப் பொறியியல் கல்லூரிகளுக்குச் செல்ல, சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. ஜெயங்கொண்டம் பகுதி வேகமாக முன்னேறிவரும் பகுதி. ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் தொடங்கப்படவுள்ள நிலையில், அரசுப் பொறியியல் கல்லூரி அல்லது அரசு பாலிடெக்னிக் அல்லது அரசுத் தொழிற்பயிற்சி நிலையம், இவற்றில் ஏதேனும் ஒன்றை அரசு அமைத்துத் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில், இப்போது ஒன்றாக இருக்கிற இந்த மாவட்டத்திலே, மூன்று தொழில் கல்லூரிகள் இருக்கின்றன. தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பாலிடெக்னிக் கல்லூரி, பெரம்பலூர். தந்தை ரோவர் பாலிடெக்னிக் கல்லூரி, பெரம்பலூர், திருமதி எலிசபெத் பாலிடெக்னிக் கல்லூரி, பெரம்பலூர் ஆகிய கல்லூரிகள் இங்கே இயங்கி வருகின்றன. அந்தக் கல்லூரிகளிலேயே, சென்ற ஆண்டு, கிட்டத்தட்ட 135 இடங்கள் காலியாக இருந்தன. ஆகவே, இதைத் தனியார் யாரேனும் தொடங்க முன்வருவார்கள் என்று சொன்னால், அதற்கு இந்த அரசு தாராளமாக அனுமதி அளிக்கும். அரசுத் தரப்பிலே இதை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், 10 கோடி ரூபாய் செலவாகிற காலக்கட்டத்தில், இதுபோன்று அரசுத் தரப்பிலே இவற்றை உருவாக்குவதற்கு வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன.



2006 ஆகஸ்ட் 24]

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி. (குறுக்கீடு) சரி, கொஞ்சம் பொறுங்கள். கொஞ்சம் பொறுங்கள். Wait. திரு. து. அமரமூர்த்தி, உட்காருங்கள். திரு. க. இராஜேந்திரன்.*

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரியலூர் மாவட்டமாகப் பிரித்துள்ளதால், குறிப்பாக, இப்பகுதி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பெருமளவில் வசிக்கின்ற பகுதியாக உள்ளது. மேலும் இந்தப் பகுதியில் இதுவரையில் அரசுக் கல்லூரிகள் இல்லை. அரியலூரில் I.T.I. உள்ளது; அரசு I.T.I. உள்ளது; ஜெயங்கொண்டத்தில் இல்லை. இப்போது, ஜெயங்கொண்டத்தில் J.L.P. வருவதால், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இருப்பதால், அவசியம் தொழில் பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைத்துத் தரவும். அரசுக் கலைக் கல்லூரி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல ஒரு கோடி ரூபாய் பணமும், ஐந்து ஏக்கர் நிலமும் – அங்கு மிகவும் ஏழ்மையான நிலைமையில் உள்ள விவசாயிகள்தான் உள்ளார்கள். அதுவும் குறிப்பாக முந்திரிதான் உள்ளது. ஏக்கருக்கு ஒரு மூட்டைதான் விளைகின்றது. வேறு நெல் பயிரோ அல்லது கரும்புப் பயிரோ எதுவும் இல்லை. கரும்புப் பயிர் பயிரிடுவது என்றாலும்கூட 700 அடி, 800 அடி bore இறக்க வேண்டியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிற்கல்வி சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. க. இராஜேந்திரன்:** ஏழ்மை நிலையில் உள்ள விவசாயிகள் இருக்கிறார்கள். அதனால் அவசியம் அந்த சட்ட விதியைத் தளர்த்தி, அரசுக் கலைக் கல்லூரியையாவது அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**திரு. து. அமரமூர்த்தி:** அரியலூரில் கலைக் கல்லூரி..

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜெயங்கொண்டத்தைச் சேர்ந்தவர். அவருடைய கோரிக்கையிலும் அவர் நிச்சயமாக ஜெயம் கொள்வார்! *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2006 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக எங்களது மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**83—**

## சார்பு நீதிமன்றம்

***1001— திரு. வீர. இளவரசன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்தில் குற்றவியல் நீதிமன்றமும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் இருந்து வருகின்றன. 1969 ஆம் ஆண்டிலேயே திருமங்கலத்தில் இருக்கின்ற மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வெள்ளி விழாக் கொண்டாடிய சிறப்பு உடையது. அங்கே ஏறத்தாழ 110 வழக்கறிஞர்கள், வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அது தவிர, திருமங்கலம் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டிலும், திருமங்கலம் வட்டம், வாடிப்பட்டி வட்டத்தின் ஒரு பகுதி, அதேபோல மதுரை தெற்கு வட்டத்தின் ஒரு பகுதி என்று ஒரு பரந்து விரிந்த அதிகாரப் பரப்பளவைக் கொண்டது. திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். அதுமட்டுமல்லாமல், அங்கே மதுரை மாவட்டத்தையும், விருதுநகர் மாவட்டத்தையும் இணைக்கும் பாலமாக திருமங்கலம் இருந்து வருகிறது.



2006 ஆகஸ்ட் 24]

ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் மேல்முறையீட்டிற்காக மதுரைக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு, திருமங்கலத்தில் இருக்கின்ற வழக்கறிஞர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலும், அதேபோல பொதுமக்களின் வசதியை முன்னிட்டும் திருமங்கலம் நகரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே திருமங்கலத்திலே ஆயிரம் வழக்குகள் நிலுவையிலே இருப்பதாகத் தெரிவித்தார்கள். உயர் நீதிமன்றம் அதிகமான வழக்குகள் நிலுவையிலே இருக்கக்கூடிய நிலையிலேதான் புதிய சார்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்குரிய கருத்துருவை அரசுக்கு அனுப்புகின்றது. உயர் நீதிமன்றத்திலிருந்து இதுவரை அரசிற்குத் திருமங்கலத்திலே சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற கருத்துரு வரவில்லை. அப்படி வந்தவுடன் நிதிநிலைக்கேற்ப அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-2001 ஆம் ஆண்டுகளில், புதிதாக உருவாக்கப்பட்ட வட்டங்களில், குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. அதைப்போல, கழக ஆட்சியில், புதிதாக உருவாக்கப்பட்ட வட்டங்களில் சார்பு நீதிமன்றம் உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, ஒரு வட்டத்திற்கு ஒரு சார்பு நீதிமன்றம் என்பது நிச்சயமாக அரசால் இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோயிலில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் 3 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. இதில் நம்பர்-1 குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை நாகர்கோயிலிலிருந்து மாற்றி கன்னியாகுமரிக்குக் கொண்டு செல்ல, கடந்த அ.தி.மு.க. சர்க்கார் ஆணை பிறப்பித்தது. பொதுவாக, Government Policy என்பது ஒரு தாலுகாவிற்கு ஒரு நீதிமன்றம் இருக்க வேண்டும் என்பதாகும் என்று அறிகிறேன். நாகர்கோயிலும், கன்னியாகுமரியும் ஒரே அகஸ்தீஸ்வரம் தாலுகா பகுதியைச் சேர்ந்ததாகும். எனவே, அரசு உத்தேசித்துள்ள கன்னியாகுமரிக்கு மாற்றும் எண்ணத்தை மாற்றி, தொடர்ந்து மாவட்டத் தலைநகரமான நாகர்கோயிலிலேயே அந்தக் Court-ஐ இயக்கிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கருத்துரு அரசிடம் இருந்தால், மாற்றாமல் இருந்தால் நிச்சயமாக இந்த அரசு மாற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**84—**

## ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

***2178—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரிலுள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களின் கட்டடத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் நகரிலுள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களின் கட்டடத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரில் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களினுடைய கட்டடம், பல்வேறு இட நெருக்கடிகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய வலப்புறத்தில் புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. 5,000-க்கும் மேற்பட்ட மாணவிகள் வருவதால் அதற்கு அருகிலேயே பேருந்து நிலையமும் இருப்பதன் காரணமாக அடிக்கடி போக்குவரத்து நெரிசல் என்பதும் நெருக்கடி என்பதும் ஏற்பட்டு வருகிறது. சென்றமுறை அதிகாரிகள் கூட்டத்தில் சிலர் இந்தக் கட்டடம் மாற்றப்படும் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலேதான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். ஆகவே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றம் மாற்றப்படுமா என்று அவருடைய கேள்வியிலே மீண்டும் கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக, நகர்மன்றத்திற்கும், நீதிமன்றத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 81 இலட்சம் ரூபாய் திண்டுக்கல் நகர்மன்றம், நீதிமன்றத்திற்குப் பணம் கொடுத்தால் அதை மாற்றுகின்ற பணி நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு தொடர்புடைய ஒரு கேள்வி என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காகக் கேட்கிறேன். திருப்பூர் பகுதியைச் சமீபத்திலே நம்முடைய கலைஞர் அவர்கள் அரசு மாநகராட்சியாக அறிவித்திருக்கிறது. வளர்ந்துவருகிற ஒரு பெருநகரமாக திருப்பூர் மாறிக் கொண்டிருக்கிறது. திருப்பூர் நகரத்தில் உள்ள நீதிமன்ற வளாகங்களை ஒருங்கிணைத்து, ஒரு புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலும் நேரில் தெரிவித்திருக்கிறேன். அவரும், அது நியாயம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆகவே, அதற்கான பணிகள் எப்போது தொடங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு, மத்திய அரசினுடைய நிதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது; வந்தவுடனே நிச்சயமாக அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே தனி நீதிமன்ற வளாகம் அமைப்பதற்காக 75 செண்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. ஒன்றரை கோடி ரூபாய் அரசால் நிதி ஒதுக்கப்பட்டும், இன்னும் கட்டடப் பணி தொடங்கப்படாமல் இருக்கிறது. அந்தக் கட்டடம் உடனடியாகத் தொடங்கப்படுமா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியதைப்போல, நிதி ஒதுக்கீடு செய்திருந்தால், நிச்சயமாகக் கட்டடம் கட்டுகின்ற பணி தொடங்கியிருக்கும். ஒருவேளை நிதி இன்னும் ஒதுக்கப்படாமலிருந்தால், வருகின்ற காலக்கட்டத்திலேதான், அந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் பெருந்திட்ட வளாகம், 200 ஏக்கரிலே அமைந்திருக்கிறது. மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும்போது, ஏற்கெனவே இடம் இருக்கின்ற அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, கட்டடங்களைக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல்: 9-55)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைக் கண்டிப்பாக அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வேண்டுமென்று கடந்த 5 ஆண்டுகளாக வற்புறுத்தி, அப்போதைய சட்ட அமைச்சர் அவர்கள், இடத்தையும் தேர்வு செய்து, நிதி மதிப்பீட்டையும் தயார் செய்து, 2 கோடி ரூபாய் நிதி செலவாகும் என்று கணக்கிட்டு, மத்திய அரசாங்கத்தினுடைய பங்களிப்பு நிதி வந்தவுடனேயே தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், இதுவரையிலும் மத்திய அரசாங்கத்தின் நிதி வரவில்லை என்ற காரணத்தினால், அதனைக் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு ஒதுக்குகின்ற நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில், பண்ருட்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும், அதேபோல் கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும் கட்ட நிதியை ஒதுக்கி, அவற்றைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல இந்தத் துறையினுடைய பதிலுரையிலே, மிக விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். மத்திய அரசிடத்திலே கடந்த மாதம் இந்த அரசின் சார்பாக மீண்டும் அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளும் மேற்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு நிதி நிச்சயம் வரும். உறுதியாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் தமிழகத்திலே கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

[2006 ஆகஸ்ட் 24

85—

**பூங்கா**

***569 –திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பெரிய பூங்கா அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மிகப் பெரிய பூங்கா அமைப்பதற்கான திட்டம் எதுவும் தற்போது சுற்றுலாத் துறையில் இல்லை.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், 1985 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டதிலிருந்து எந்தவிதமான அடிப்படை முன்னேற்றங்களும் இல்லாத ஒரு நகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அந்த பூமியிலே இன்றைக்கு எந்த வசதியும் இல்லாமல், மக்கள் வசிக்காமல், வெளியேறிக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை. அங்கே அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் கூட, 60 விழுக்காடு பேர் மதுரைக்குச் சென்று குடியேறி, தினந்தோறும் இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், இன்றைக்குப் பள்ளிக் குழந்தைகளுக்குக்கூட கல்விச் சுற்றுலா என்ற திட்டத்தின் அடிப்படையிலே, கல்வி முறையில் மாற்றம் வந்து கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு தலைநகரத்தில், குறிப்பாக இன்னும் சொல்லவேண்டுமானால், அந்த மாவட்டத்திலேயே ஒரு பூங்கா இல்லை; எனவே, சிவகங்கையிலே ஒரு பூங்காவை நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். சிவகங்கையைப் பொறுத்தவரை, சிவகங்கை சீமை என்று காலங்காலமாக அழைப்பார்கள். ஆனால், அது சீமையாக இல்லை. அதனால்தான், எங்கள் மக்கள் இன்றைக்கு அங்கேயிருக்கிற வேலிக்கருவையை சீமைக்கருவை என்று அழைத்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, அந்த மாவட்டத்தினுடைய பெருமையை, அந்த மாவட்டத்து மக்களுக்கான ஒரு வளர்ச்சியைக் கொடுப்பதற்கு அவசியம் தமிழக முதல்வர் அவர்கள் கருணையோடு ஒரு சுற்றுலாப் பூங்காவை அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.



2006 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கக்கூடியவர்கள் வெளியேறிக் கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்திற்கு ஒரு பூங்கா தேவையில்லை என்று இந்தத் துறை கருதுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தின் அடிப்படையில், துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்க எனக்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். முதலில் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ்.வி. சேகர்:** நன்றி சொல்கிறேன். பரவாயில்லை, நன்றிதானே? நன்றி சொன்னால் நீங்கள் allow பண்ணுவீர்களே! அதற்காக நன்றி சொல்கிறேன். இந்த நாளை வெற்றித் திருநாளாக்கிய உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றுலாத் துறையில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில், நாடகக் குழுக்களுக்கு வாய்ப்புகள் நிறைய அளிக்கப்படவில்லை. நாடகமே தொழிலாகக் கொண்ட பல நாடகக் குழுக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. அப்படியே வழங்கப்பட்டாலும், அவர்களுக்கு அதிகபட்ச ஊதியமாக சுமார் 2,000 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. அது இப்போதுள்ள போக்குவரத்து மற்றதையெல்லாம் பார்க்கும்போது— வெளியூர்களில் நாடகத்தையே தொழிலாகக் கொண்ட பல நாடகக் கலைஞர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அந்த ஊதியத்தையும் உயர்த்தி, ஒவ்வொரு சுற்றுலாப் பொருட்காட்சியிலும் கண்டிப்பாகக் குறைந்தபட்சம் 25 சதவிகித நிகழ்ச்சிகள் நாடகத்திற்கு ஒதுக்கப்படுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் கடந்த காலத்திற்குச் சரியாக இருக்கலாம். ஆனால், கலைஞருடைய ஆட்சிக்

காலத்தில் கலைஞர்களை மதிக்கக்கூடிய விதத்தில், ஒழுங்கான முறைகளில் அவர்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ். திரு. புஷ்பராஜ், உங்களைத்தான். (குறுக்கீடு) பொன்னுசாமியா? திரு. பொன்னுசாமி, நீங்கள் இடத்தை மாற்றி உட்கார்ந்திருக்கிறீர்களா! உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள்.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்தைச் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன். கொல்லிமலை ஒன்றியத்தில், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவில் ஒரு மாபெரும் நீர்வீழ்ச்சி 200 அடி உயரத்திலிருந்து கொட்டுகிறது. அந்த இடத்திற்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதி அமைத்துக் கொடுத்து, சுற்றுலாத் தலமாக அறிவிக்க முன்வருவாரா என மாண்புமிகு அமைச்சர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும்கூட, மானியக் கோரிக்கை வருகிற 28 ஆம் தேதி இருக்கிறது; கொல்லிமலைக்கு என்ன செய்வோம் என்பது அப்போது அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**86—**

## தொழில்நுட்பப் பயிலகம்

***171— திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



உடுமலைப்பேட்டையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை மூலமாக Fashion Technology குறித்து நவீன தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடுமலையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் வாயிலாக நவீன ஆடை வடிவமைப்பு தொழில் பயிலகம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையில், அதற்குச் சாத்தியக்கூறு இல்லை என்று கூறினார்கள். எங்களது உடுமலைத் தொகுதியானது, நூற்பாலைகள் அதிகமாக உள்ள பகுதி. அங்கே நூற்பாலைகள் அதிகம் உள்ளன. விசைத்தறிக் கூடங்கள் அதிகமாக அங்கே இப்போது செயல்பட்டு வருகின்றன அந்த அடிப்படையிலேதான், அங்கே கைத்தறி மற்றும் துணிநூல் துறையின்மூலமாக Fashion Technology குறித்து நவீன தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க வேண்டும் என்று கேட்டேன். உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள், காவிரிப் பகுதியிலும், வைகைப் பகுதியிலும், கோவை மாவட்டம், பல்லடம் பகுதியிலும். இப்பொழுது அதிக விசைத்தறிகளை உள்ளடக்கிய தொகுப்பு முறையிலே தறிக் கூடங்களைக் கட்டும் பணி மற்றும் இதரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால், வேலைவாய்ப்பு மற்றும் எதிர்பார்க்கக்கூடிய உற்பத்தி கிடைக்கிறது. அதேபோல, சர்வதேசத் தரத்துடன் ஆயத்த ஆடை உற்பத்திக் கூடங்களும், திருப்பூர், சென்னை இருங்காட்டுக்கோட்டைப் போன்ற பகுதிகளிலும் நடைபெறுகின்றன. அதேபோல, எங்களது உடுமலைச் சட்டமன்றத் தொகுதியிலேயும் Fashion Technology குறித்து ஒரு நவீன தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு வருங்காலத்திலாவது முயற்சி மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம், சென்னை தரமணியிலும், கோவை மாவட்டம் திருப்பூரிலும் இந்த நவீன ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்பப் பயிலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக, மத்திய அரசின் ஜவுளித் துறையின்மூலமாக மாநில அரசுடன் இணைந்து, தென் தமிழ்நாட்டிலே இதைச் சற்று ஊக்குவிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக பரமக்குடி பகுதியிலும் தொடங்கவிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் தேவையெனில், நம்முடைய மாமன்றத்து உறுப்பினருடைய கோரிக்கை, இந்த அரசின்மூலமாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலும் அதைச் சுற்றியுள்ள போளூர், செய்யாறு, ஆற்காடு ஆகிய தொகுதிகளிலும் சுமார் 30-க்கும் மேற்பட்ட பட்டு கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களும், ஆரணியிலேயே தனியார் பட்டு மையங்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களும் உள்ளன. இங்கே புதிய design-கள் நிறைய தேவைப்படுவதால், அந்த design-களை அமைக்கின்ற Designing Centre, ஆரணியில் அமைக்கப்படுமா? அதை நிர்வகிக்கின்ற உதவி இயக்குநர் அலுவலகம் ஒன்று, ஆரணியில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினருடைய கோரிக்கை இதுவரை அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்றாலும், வருகிற காலத்தில் தேவையெனில், அது செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.





முற்பகல் 10-05

**87—**

## தேர்வு மையம்

***775—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, அஞ்சூர் உயர்நிலைப் பள்ளியை 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு மையமாக அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கல்பட்டு தொகுதி, அஞ்சூர் உயர்நிலைப் பள்ளியை 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுத, தேர்வு மையமாக அறிவிக்கும் கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், இருக்கையில் இல்லைதானே? அதை முதலில் சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, அஞ்சூர் உயர்நிலைப் பள்ளியை 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுவதற்கான தேர்வு மையமாக அமைக்க வேண்டுமென்பது கேள்வி. சுற்றுவட்டாரம் 10, 15 கிலோ மீட்டரில் இருக்கின்ற அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கிராமப்புற மாணவர்கள், இந்தப் பள்ளிக்கு வந்து, அரசுத் தேர்வு எழுதுவதற்கு வசதியாகவும், இப்பொழுது இருக்கின்ற தூரத்தில் இருக்கின்ற தேர்வு மையங்களில் சென்று தேர்வு எழுதுவதற்கு, குறிப்பிட்ட காலங்களில் சரியான பேருந்து வசதிகள் இல்லாத காரணத்தினாலும், அது ஒரு காட்டுப் பகுதி போன்று இருக்கின்ற காரணத்தாலும், பள்ளி மாணவிகள் சிறப்பாக அந்தப் பள்ளியிலேயே, மையத்திலேயே தேர்வு எழுதுவதற்கு வசதியாக, அதைத் தேர்வு மையமாக நடப்பாண்டிலோ அல்லது வரும் ஆண்டிலோ ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு பள்ளியிலே தேர்வு மையம் அமைப்பதற்காக அடிப்படை norms என்று சொல்லக்கூடிய சில வரைமுறைகளை வகுத்திருக்கிறார்கள். அதன்படி அது ஆண்கள் பள்ளியாக இருந்தால் குறைந்தபட்சம் 150 மாணவர்களோ அல்லது பெண்கள் பள்ளியாக இருந்தால் 125 மாணவிகளோ அந்த இடத்திலே இருக்க வேண்டும். தவிர, அந்தப் பள்ளியிலே முறையாகத் தேர்வு எழுதுவதற்குரிய இடவசதிகள் இருந்திட வேண்டும். இதுவரை எந்தப் பள்ளியிலே அவர்கள் தேர்வு எழுதிக்கொண்டிருந்தார்களோ, அந்தப் பள்ளியிலேயிருந்து ஒரு தடையின்மைச் சான்றிதழும், வந்து எழுதக்கூடிய, clubbing schools என்று சொல்லக்கூடிய அந்தப் பள்ளிகளிலேயிருந்து, இசைவுச் சான்றிதழும் பெற வேண்டும் என்று சில வரைமுறைகள் இருக்கின்றன. இருந்தாலும்கூட, அந்தப் பள்ளியினுடைய சூழ்நிலைக்கேற்ப, மலைப்பாங்கான பள்ளியாகவோ அல்லது காட்டுப்புறமாக இருக்கக்கூடிய பள்ளியாகவோ இருந்தால், அந்த இடத்திலே சில விதிவிலக்குகளை நாம் அளித்திட முடியும். அஞ்சூர் பள்ளியைப் பொறுத்தமட்டிலே, அந்தப் பள்ளியினுடைய அந்தச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டுதான், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், இந்த முறை 100 பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்கும்போது, அந்தப் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். எனவே, அதே அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்துகளைக் கொண்டு, இந்த ஆண்டே அந்தப் பள்ளியிலே தேர்வு மையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் ஆலாம்பாளையம் என்கிற மேல்நிலைப் பள்ளியில் 150 மாணவர்களுக்கு மேலாக படிக்கிறார்கள். அவர்கள் அந்தியூர் பள்ளிக்கு வந்துதான் தேர்வு எழுதவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த அந்தியூர் பள்ளி ஆலாம்பாளையத்திலிருந்து 15 கிலோ மீட்டருக்கு மேலாக இருக்கிறபடியினாலும், bus வசதியும் சரியாக இல்லாத காரணத்தினாலும், ஆலாம்பாளையத்திலேயே பிளஸ்-2 மாணவர்களுக்குத் தேர்வு மையம் அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலாம்பாளையத்திலேயே அந்தத் தேர்வு மையம் அமைப்பதற்கு, நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கக்கூடிய அந்த நிபந்தனைகளை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும்; எந்தெந்த அளவிற்கு விதிவிலக்குகள் கொடுக்க முடியும் என்பதையெல்லாம் கருத்திலேகொண்டு முறையான முன்மொழிவுகளை, கருத்துருக்களை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திலிருந்து பெற்று அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவ மாணவிகள் எல்லாம், 10 ஆம் வகுப்பு படித்து தேர்வு எழுதுகின்றபோது, வேறு இடத்திற்குச் சென்று தேர்வு எழுதுகின்றபோது, அந்த இடம் புதிய இடமாக இருக்கின்ற காரணத்தினால், போனவுடன் அவர்களுக்கு மனப் பதற்றம் ஏற்படுகின்ற காரணத்தினால், அவர்கள் தெளிவான முறையிலே தேர்வு எழுத சிரமமாக இருக்கிறது. ஆகையால், தமிழ்நாடு முழுவதும் எங்கெங்கே 10 ஆம் வகுப்பு இருக்கின்றதோ, அந்தந்த மையங்களிலேயே 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதினால், அந்த மாணவர்கள் ஏற்கெனவே ஓராண்டு காலமாக, அங்கேயிருந்து படித்துப் பழகிய இடத்திலே இருந்து எழுதினால், மன உறுதியோடு, மன நிம்மதியாக எந்த பயமும் இல்லாமல், அதிர்ச்சி இல்லாமல் தேர்வு எழுதி, அதிக மதிப்பெண்கள் பெற வாய்ப்பாக இருக்கும். ஆகையால், 10 ஆம் வகுப்பு இருக்கின்ற பள்ளிக்கூடத்திலேயே 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளிலுமே நாம் தேர்வு மையம் அமைத்துவிடுவது என்பது இயலாத காரியம். அந்தந்தப் பள்ளிகளின் சூழ்நிலையைப் பொறுத்து, இடங்களைப் பொறுத்து நாம் அதைச் செய்ய முடியுமே ஒழிய, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லா 10 ஆம் வகுப்பு பள்ளிகள் அல்லது மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலுமே தேர்வு மையங்களை உருவாக்குவது என்பது சிரமமான காரியம். அது இயலாத காரியமும்கூட.

[2006 ஆகஸ்ட் 24

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத்திற்குட்பட்ட செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியின் மாணவ மாணவிகள் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதுவதற்கு அருகில் இருக்கின்ற ராதாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் சென்று தேர்வு எழுதுகிறார்கள். இந்த ஆண்டு, செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியர், அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர் திரு. விஜயன்மூலம் ஒரு முன்மொழிவையும் நம்முடைய தேர்வுத் துறை இயக்குநர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார்கள். செட்டிகுளத்தில் 120 மாணவ, மாணவிகள் 12 ஆம் வகுப்பு படித்து வருகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு, செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியிலேயே தேர்வு மையம் அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய முறையான முன்மொழிவுகள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருடைய பரிந்துரையோடு அரசுக்கு வந்திருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலித்து, ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்,

**88—**

## அங்கன்வாடி கட்டடம்

***1401—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, வடகரைத்தாழனூர் மதுரா கடகால் கிராமத்திற்குப் புதியதாக அங்கன்வாடி கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2006 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி, வடகரைத்தாழனூர் மதுரா கடகால் கிராமத்திற்குப் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித் தரக் கோரி, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் முகையூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு உரிய விண்ணப்பம், சம்பந்தப்பட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரால் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கட்டடம் கட்டித் தரக் கோரி, திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களிடமும் கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. அதேபோன்று முகையூர் தொகுதியிலே அங்கன்வாடி கட்டடங்கள் இருந்தும், அந்த அங்கன்வாடி கட்டடங்களிலே மின்சார வசதி இல்லாததால், அங்குள்ள பிஞ்சுக் குழந்தைகள் மிகவும் கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, அந்தக் கட்டடங்களுக்கு மின்சாரம தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மானியக் கோரிக்கை பதிலுரையில் கூறியுள்ளேன். வருகின்ற நாட்களில் கண்டிப்பாக அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் தண்ணீர் வசதி, மேலும் மின்சார வசதி செய்து தருவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். அதற்குப் பரிசீலனைகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகள், சின்ன குழந்தைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குச் சிறிய நாற்காலியும், அவர்கள் சரியாகத் தூங்குவதற்குப் பாய் போன்றவையும், மின் விசிறியும் அமைத்துத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்தும் பரிசீலனையில் உள்ளன. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவை கண்டிப்பாக மிகவும் அவசரம் என்றால், அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில்–M.L.A. fund இல் இருந்து எடுத்து உபயோகித்து, விரைவில் செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**89—**

## கால்நடை மருத்துவமனை

***790— திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் ஒன்றியம், சீர்ப்பனந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியம், சீர்ப்பனந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்ப்பனந்தல் கிராமம் என்பது, சுற்றிலும் ஏறத்தாழ 20-க்கும் மேற்பட்ட மிகப் பெரிய கிராமங்கள் அடங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே பல்வேறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் பால் குளிரூட்டும் நிலையம் போன்றவை எல்லாம் இருக்கின்றன. இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கால்நடைகள் நோயுற்றால், 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வானாபுரத்திற்கும் அல்லது 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சங்கராபுரத்திற்கும் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.



2006 ஆகஸ்ட் 24]

ஆகவே, அந்தப் பகுதியினுடைய அவசியம் கருதி, உடனடியாகக் கால்நடை மருத்துவமனை அங்கே தொடங்காவிட்டாலும்கூட, உடனடியாக அங்கே ஒரு Sub Centre ஐத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று உங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் பணியாளர்கள், குறிப்பாக, கால்நடை ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்படாமலேயே இருந்த காரணத்தினால், அந்தப் பணியிடம் இப்பொழுது நிரப்பப்படாமல் உள்ளது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்குப்பின், இப்பொழுது இன்றிலிருந்து தொடர்ந்து ஐந்து நாட்களும் கால்நடை ஆய்வாளர்கள் அந்தக் கிராமத்திற்குத் தினமும் நேரடியாகப் பார்வையிட்டு, மருத்துவச் சிகிச்சைகள் கால்நடைகளுக்குக் கிடைக்க இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

(முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் யசோதா. (குறுக்கீடு) திருமதி யசோதா, கொஞ்சம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிளை மையம் என்பது பகுதிநேரமாகச் செயல்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அது முழு நேர மையமாகச் செயல்படுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமையும் இருக்கின்ற சில கால்நடை மருத்துவமனைகள் வாடகைக் கட்டடத்தில் இன்றைக்கும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படி எத்தனை மருத்துவமனைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்

கொண்டிருக்கின்றன? 2006-2007 ஆம் நிதியாண்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த மருத்துவமனைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனி வினா எழுப்பினால், அதற்குரிய விளக்கங்களுடன் பதில் அளிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதி என்பது காட்டுப் பகுதியைக் கொண்ட விசாலமான பகுதி. இந்தப் பகுதிக்குட்பட்ட ஆனைக்கல்லு ஊராட்சியில் தொட்டபேளூர் என்ற கிராமத்தில் சுமார் 15,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தப் பகுதியிலே 20 கிலோ மீட்டர் தொலைவிலே எந்தக் கால்நடை மருத்துவமனையும் இல்லாத காரணத்தால், தொட்டபேளூர் கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் துங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்தக் கிராமத்தில் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு, கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை கிடைக்காமல் இருந்தால், அரசு ஆய்வு செய்து, அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் ஒன்றியம், 15-பனங்குடியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் சார்பிலே முதற்கட்டமாக கால்நடைக் கிளை நிலையம்தான் அமைத்துத் தரப்படுகின்றது. பின்பு, தினமும்





கிட்டத்தட்ட 40-க்கும் கூடுதலாகக் கால்நடைகள் சிகிச்சைக்கு வந்தாலோ, அந்தக் கிராமத்திலோ அல்லது அங்கு சுற்றியுள்ள கிராமங்களில் 10,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருந்தாலோதான் கால்நடை மருத்துவமனை அமைக்க இயலும். ஆதலால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, அதற்கேற்ப அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**90—**

## கால்நடை துணை மருத்துவமனை

***1158—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ்வெள்ளியூர் கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளாறு ஊராட்சி ஒன்றியம், கீழ்வெள்ளியூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் துவக்க தற்போது அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளைப் பராமரிப்பதற்குத் தற்போது ஒன்றியங்களிலே இருக்கின்ற கால்நடை மருத்துவமனைகள், துணை மருத்துவமனைகள் அதிகப்படுத்த முடியாத இந்தச் சூழ்நிலையில் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஓர் ஒன்றியத்திற்கு ஒரு கால்நடை விரிவாக்க அலுவலரை நியமித்து, அவரிடம் 10,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கொடுத்து, அந்த ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் அந்தப் பணியாளர்கள் நேரடியாகச் சென்று கால்நடைகளுக்குத் தடுப்பூசி

போடுதல், சினையூட்டல் பணியைச் செய்தல், குடற்புழு நீக்குதல், மக்கள் தொடர்பு முகாம் நடத்தச் செய்தல், தீவன வளர்ப்புபற்றிப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். கடந்தகால ஆட்சியிலே 2001-இல் அந்தப் பணிகளையெல்லாம் செய்தவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் இருந்த அந்தப் பணியாளர்கள் மீண்டும் நியமனம் செய்யப்படுவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக காலியாக உள்ள கால்நடை மருத்துவர்கள் பணியிடங்களில் எல்லாம் நியமனம் செய்யப்பட்டு, அவை நிரப்பப்பட்டபின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், எனது திருப்பத்தூர் தொகுதியிலே, ஜவ்வாது மலையிலே, புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு என்று மூன்று ஊராட்சிகள் இருக்கின்றன. அவற்றிலே 32 மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அங்கே வாழ்கின்ற மலைவாழ் மக்கள் எல்லாம் தங்களுடைய துணை வருவாயாக ஆடு, மாடு, கோழிகளை வளர்த்து வருவாயை ஈட்டி வருகிறார்கள். அங்கே 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு மருத்துவமனை என்பதே இல்லை. ஏலகிரி மலையிலிருந்துதான் நடமாடும் கால்நடை மருத்துவமனை, வாரத்திற்கு ஒரு நாள் செல்வதால், அந்தக் கால்நடைகளுடைய நோய்களைத் தீர்க்க வசதியில்லாமல் இருக்கிறது. அரசு விதிக்குட்பட்டு, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருந்தும், 50 கிலோ மீட்டர் விஸ்தீரணத்திலே கால்நடை மருத்துவமனை இல்லாத காரணத்தினாலே, புதூர்நாட்டிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு, அங்கு 3,000-க்குமேலே கால்நடைகள் இருந்தால்கூட, நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சென்னை, மூன்றாவது இருப்புப் பாதை அமைக்கும் பணியால் பாதிக்கப்படுவோருக்கு மாற்று இட வசதி அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இது சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திப்பட்டு மூன்றாம் இரயில்வே திட்டப் பகுதி விரிவுபடுத்தப்படுகின்ற நிலையில், இன்றைக்கு அந்தப் பகுதியிலே குடியிருந்து வருகின்ற, ஓலைக் குடிசையிலே குடியிருந்து வருகின்ற, 30, 40 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பகுதியிலே வாழ்ந்து வருகின்ற மக்களை, திடீரென்று 26 ஆம் தேதி என்று தேதியைக் குறிப்பிட்டு, உடனடியாக அந்தப் பகுதியிலேயிருந்து காலி செய்ய வேண்டும்; அல்லது இரயில்வே துறையின்மூலமாக அகற்றப்படுவீர்கள் என்ற notice-ஐ வழங்கியிருக்கிறார்கள். இதேபோன்ற ஒரு நிலை, கடந்த 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே ஒரு notice-ஐ இரயில்வே துறை வழங்கியது. அன்றைக்கு ஆட்சியிலே இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உடனடியாக அந்த இரயில்வே விரிவாக்கப் பகுதியிலே பாதிக்கப்படுகின்ற 140 குடும்பத்தினருக்கும், அருகிலே அன்றையதினம் கட்டப்பட்டுக் கொண்டிருந்த பாரதி நகர் குடியிருப்புப் பகுதியில், மாற்றுக் குடியிருப்பு வசதியைச் செய்து தந்து, அந்த மக்களின் மனதில் பாலை வார்த்தார்கள். இன்றைக்கும் அந்த மக்கள் பெருமளவிற்குப் பதற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இன்றைக்கும் அதே பகுதியில், பாரதி நகர்ப் பகுதியில், 108 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்ட திட்டம், ஒதுக்கிய நிதியின் வாயிலாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டப் பகுதியில் இப்போது

இரயில்வே துறை அகற்றுவதாக அறிவித்திருக்கின்ற குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு அந்தக் குடியிருப்புகளை ஒதுக்கித் தர அரசு முன்வர வேண்டுமென்று தங்கள்வாயிலாக என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே 13-வது வட்டத்தில் பெஜவாடா line பகுதியில், இரயில்வே தண்டவாளத்தின் அருகில் 150-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். சி.பி. ரோடு பகுதியில் 600-க்கும் மேற்பட்ட குடும்பங்களும், மேற்குறிப்பிட்ட இரண்டு பகுதிகளிலும் 40 ஆண்டுகளுக்கு மேலாக குடிசையில் வாழ்ந்து வருகிறார்கள். மூன்றாவது இரயில்வே பாதை அமைக்க, இரயில்வே துறை இந்தக் குடிசைகளில் உள்ள குடும்பங்களை கடந்த மாதம், 15-7-2006 அன்றுக்குள் காலி செய்ய வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்தார்கள். இந்தக் குடும்பங்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும் என்று வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. குப்புசாமி, எம்.பி. அவர்களிடமும், மாண்புமிகு குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர் அவர்களிடமும், நம்முடைய மாவட்ட காங்கிரஸ் தலைவர் மனோ அவர்களும், மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளர் பலராமன் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திரு. குப்புசாமி, எம்.பி. அவர்கள் இரயில்வே துறையிடம் தொடர்பு கொண்டு, கால அவகாசம் பெற்றுத் தந்தார்கள். மேலும் 24-7-2006 அன்று குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன் அவர்களும், வட சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் பலராமன் அவர்களும், வட சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர் மனோ அவர்களும், முன்னாள் அமைச்சர் சற்குணப் பாண்டியன் அவர்களும், குடிசை மாற்று வாரியத்தின் நிர்வாக இயக்குநர் விவேகானந்தன் அவர்களும், அந்தப் பகுதியைச் சென்று பார்வையிட்டார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு அமைச்சர் அவர்கள் நேரில் சென்று ஆறுதல் கூறிப் பேசினார்கள். மேலும், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், திரு. குப்புசாமி, எம்.பி.அவர்களுடன், குடிசை மாற்று வாரிய அமைச்சர் அவர்கள் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டதால், மீண்டும் இரயில்வே துறையுடன் பேசி, கால அவகாசம் பெற்றுத் தந்தார்கள். 18-8-2006 அன்று, மீண்டும் 26-8-2006-க்கு முன்பாக, அந்தக் குடிசைகளைக் காலி



செய்யவேண்டுமென இரயில்வே நிர்வாகம் அவர்களுக்கு notice அனுப்பியது. மேற்குறிப்பிட்ட பகுதிகளில், குடிசைகளைக் காலி செய்வது சம்பந்தமாக, நீதிமன்றத்திலே ஒரு வழக்கு நடைபெற்று, அதை விசாரணை செய்து, அவர்களுக்கு மாற்று இடம் தந்து, மூன்று மாத காலம் அவகாசம் கொடுக்கவேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளார்கள். ஆதலால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு, பாதிக்கப்பட்ட அந்த ஏழைக் குடும்பங்களுக்கு மாற்று இடம் வழங்கியபின், அவர்களை அந்த இடங்களிலிருந்து காலி செய்யவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டு அமர்கிறேன்.

(முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. சேகர்பாபு அவர்களும், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர், திரு. சுதர்சனம் அவர்களும் கொடுத்துள்ள இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின்மீது, சில கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையில், ஜனநாயக முற்போக்குக் கூட்டணி, 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அமைக்கப்பட்டு, 40 இடங்களிலேயும் வெற்றிபெற்றதற்குப் பிறகு, 2005 ஜனவரி மாதத்தில், நம்முடைய இன்றைய முதலமைச்சர் அவர்கள், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியினுடைய தலைவராக, 40 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், தோழமைக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அண்ணா அறிவாலயத்திலே கலைஞர் அரங்கத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். தமிழகத்திலேயுள்ள 40 தொகுதிகளிலேயும் என்னென்ன குறைபாடுகள் மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றும், அதைப்போல, மத்தியிலே ஏற்கெனவே முறையிடப்பட்டு தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகள் எவை எவை என்றும் பட்டியலிட்டு, அந்தப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர், திரு. குப்புசாமி அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அனைத்துப் பிரச்சினைகளையும், சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர்களை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 ஆகஸ்ட் 24

அணுகி, அந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

அந்த அடிப்படையிலேதான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற, சென்னை, பேசின்பிரிட்ஜ்-கொருக்குப்பேட்டைக்கு இடையில் மூன்றாவது line இருப்புப் பாதை அமைக்கும் பணியும் ஒன்று; அது நீண்ட நாட்களாக அங்கே அமல்படுத்தப்படாமல் இருந்தது. நம்முடைய முதலமைச்சருடைய வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசாங்கம் இப்போது அந்தப் பணியை மேற்கொண்டு இருக்கிறது. ஆனாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியிலே 750 குடிசைவாசிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் காலி செய்ய வேண்டுமென்று notice கொடுத்தவுடன், நம்முடைய முதலமைச்சரிடத்திலேயும் அதுகுறித்து கடிதம் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஸ்டாலின் அவர்களிடத்திலே வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும்மேல், நம்முடைய திரு. சுதர்சனம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், திரு. மனோ அவர்கள், திரு. பலராமன் அவர்கள், அதைப்போல நம்முடைய அமைச்சர், திரு. சுப. தங்கவேலன் ஆகியோர், குடிசைவாசிகளாக இருக்கக்கூடிய அந்தப் பகுதி மக்களைச் சந்தித்து, ஆறுதல் கூறி "மாற்று இடம் தருகிறோம், அதுவரை நீங்கள் அவசரப்பட வேண்டாம்" என்று சொன்னதற்குப் பிறகும்கூட, அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திய காரணத்தால், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர், திரு. குப்புசாமி அவர்கள், மத்திய இரயில்வே அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசி, கால அவகாசத்தை நீட்டித்துத்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

திரு. சுதர்சனம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே, நீதிமன்றமும் மூன்று மாத காலம் அவகாசம் கொடுக்கவேண்டும் என்று அரசுக்கு அறிவுறுத்தி இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிச்சயமாக அந்த 750 குடிசைவாசிகளுக்கும் மாற்று இடம் தந்ததற்குப் பிறகுதான், அந்த இடத்திலே மூன்றாவது இருப்புப் பாதை அமைப்பதற்கான. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மத்திய அரசாங்கம் முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)



2006 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

(முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி தெரிவிப்பதைத் தவிர வேறு எதுவும் பேசக்கூடாது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நன்றியை ஓரே வார்த்தையிலே சொல்ல முடியாது அல்லவா? மாற்று இடம் கொடுத்த பிறகுதான், அவர்களை நீங்கள் காலி செய்வதாகக் கூறியிருக்கின்றீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இந்த நீதிமன்றத் தடையானது, எங்களுடைய கழக வழக்கறிஞர் பி.எச். பாண்டியன் அவர்களால், மூன்று மாதங்களுக்குத் தடையாணை பெறப்பட்டது. அப்படிச் சென்று, ஒரு தடையாணையை வாங்காமல் இருந்திருந்தால், (மணியடிக்கப்பெற்றது) இல்லை, இது முக்கியமானது. யார் வாங்கியது என்று...

**HON. SPEAKER:** No, no. I won 't allow you.

## 3. கவன ஈர்ப்பு

### சந்தன மரங்கள் வெட்டிக் கடத்தப்படுவதைத் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. அரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே உட்காருங்கள். திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி மாவட்டங்களில் ஜவ்வாது மலைப் பகுதிகளில் சந்தன மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. அரி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தமிழ்நாட்டில் தரம் வாய்ந்த சந்தன மரங்கள் இயற்கையாக கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வேலூர், திருவண்ணாமலை மாவட்ட ஜவ்வாது மலைப் பகுதிகளிலும், தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலைப் பகுதிகளிலும், சேலம் மாவட்டத்தில் சேர்வராயன், போதமலை பகுதிகளிலும், நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலைப் பகுதிகளிலும், திருச்சி மாவட்டத்தில் பச்சைமலைப் பகுதிகளிலும் வளர்கின்றன. தற்போதைய நிலையில் களைந்தெடுப்பதற்குத் (Extraction) தகுதியுள்ள, முதிர்ந்த, காய்ந்த மரங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. தற்போது ஜவ்வாது மலையில், அமிர்தி, காவலூர் போன்ற பகுதிகளில் மட்டும் சில நூறு மரங்கள் இயற்கையாக உள்ளன. இவற்றினைத் திருட்டு மற்றும் அழிவுகளிலிருந்து காப்பாற்றி, இம்மரங்கள் விதைக்காக, தாய்மரங்களாகப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



வனச் சட்ட விதிகளைக் கடுமையாக அமல்படுத்தும் வகையில், தமிழ்நாடு வனச் சட்டம் 1882, பிரிவு 55 உட்பிரிவு (3)-க்குத் திருத்தம் வழங்கப்பட்டது. இதன்படி பெருமரக் குற்ற வழக்குகள் அனைத்தும் குற்ற வழக்குத் தொடர்புக்காக நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். இந்த 1992-ம் திருத்திய வனச் சட்டம்-44, 1-10-1992 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. திருத்திய வனச் சட்டத்தின்படி கைப்பற்றப்படும் அனைத்து வன விளைபொருட்கள், கருவிகள் மற்றும் வாகனங்கள் உடனுக்குடன் அரசால் பறிமுதல் செய்யப்படுகின்றன. மேலும், சந்தன மரங்கள் வெட்டிக் கடத்தப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு சந்தன மரப் போக்குவரத்து விதி 1967 மற்றும் சந்தன மர இருப்பு மற்றும் உடைமை விதி 1970-ன்கீழ் சட்டங்கள் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2005-2006 ஆம் ஆண்டில் வேலூர், திருச்சி, சேலம், தருமபுரி மண்டலங்களில் 33 சந்தன மரக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 28 நபர்கள் பிடிபட்டுள்ளனர். இணக்கக் கட்டணமாக ரூ.2.76 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளன.

வேலூர், சேலம், திருச்சி, திருப்பத்தூர் பகுதிகளில் 4 வனப் பாதுகாப்புப் படைகளும், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, அரூர், சேலம், ஆத்தூர், ஈரோடு, பொள்ளாச்சி ஆகிய கோட்டங்களில் 11 வனக் காவல் நிலையங்களும், சேலம், ஈரோடு, வேலூர், திருச்சி, தருமபுரி, கோயம்புத்தூர் மண்டலங்களில் 11 சுழல் தணிக்கைச் சாவடிகளும் வனப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வனங்களைப் பாதுகாக்கவும், சந்தன மரப் பாதுகாப்பினைப் பலப்படுத்தவும், வனப் பணியாளர்களுக்குக் கம்பியில்லாத் தந்தி, செல்ஃபோன், படைக்கலன் மற்றும் ஈப்பு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, சந்தன மரக் கடத்தலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் பொருட்டு, அக்குற்றங்களில் ஈடுபடுவோர்பற்றி தகவல் அளிப்பவர்களுக்குத் தகுந்த வெகுமதி அரசால் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இதிலே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், சந்தன மரங்களெல்லாம் இப்போது

வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களிலிருந்து முழுமையாக அகற்றப்பட்டுவிட்டு, களைந்தெடுப்பதற்குத்—extraction—தகுதியுள்ள, முதிர்ந்த, காய்ந்த மரங்கள் இப்போது காடுகளிலே மிகக் குறைவாகத்தான் உள்ளன என்கிற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, தற்போது ஜவ்வாது மலையிலே, எங்களுடைய வேலூர் மாவட்டப் பகுதிகளிலே இருக்கக்கூடிய அமிர்தி, அதேபோல, காவலூர் போன்ற மலைப் பகுதிகளில் மட்டுமே, 100 சந்தன மரங்கள் மட்டுமே இப்பொழுது உயிரோடு இருக்கின்றன; அவற்றைத்தான் தாய் மரங்களாகக் காப்பாற்றப்பட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது; அதற்காகக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம். மிச்சம் இருக்கக்கூடிய மரங்களெல்லாம் ஏற்கெனவே கடத்தப்பட்டுவிட்டன என்கின்ற ஒரு கருத்தை இந்த அறிக்கையிலே குறித்திருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக, 2005 2006 ஆம் ஆண்டுகளில், வேலூர், திருச்சி, சேலம், தருமபுரி மண்டலங்களிலே 33 சந்தன மரக் குற்றங்கள் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டு, 28 நபர்கள் கைது செய்யப்பட்டு, இணக்கக் கட்டணமாக ரூ.2.76 இலட்சம் வசூலிக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். நான் இந்த அரசையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்று உலகத்திலேயே தலைசிறந்த சந்தனம் கிடைக்கக்கூடிய மலை, எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய ஜவ்வாது மலை. இந்த ஜவ்வாது மலையிலே, இன்னும்கூட பல பகுதிகளிலே, அடர்த்தியாக இல்லாவிட்டாலுங்கூட, சில இடங்களிலே சந்தன மரங்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இந்தச் சந்தன மரங்களைக் காப்பாற்றுவதற்கு வனத் துறை போதிய நடவடிக்கையை எடுக்கவில்லை என்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1991-1992-லே வனக் குற்றங்களை இழைத்தவர்கள் சிலபேர்மீது, 11, 15 வழக்குகள் இருப்பவர்கள்மீது, N.B.W. அப்படியே இருக்கிறது. ஆனால், நீதிமன்றம், ஒரேயொரு நீதிமன்றம், திருப்பத்தூரிலே அதற்கு Special Court வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவர அறிக்கையைப் படித்துப் பார்த்துவிட்டீர்கள்...

**திரு. சி. ஞானசேகரன்:** இப்பொழுதே முடித்துவிடுகிறேன். ஒரே கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுசம்பந்தமாக இரண்டு கேள்விகளைக் கேட்டுவிட்டு உட்காருங்கள்.





**திரு. சி. ஞானசேகரன்:** இதோ முடித்துவிடுகிறேன். I come to the point. I will put a question. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள்வாயிலாக அறிய விரும்புவதெல்லாம், இப்போது திருப்பத்தூரிலே இருக்கக்கூடிய நீதிமன்றத்தை, Special Court என்று வைத்திருக்கிற காரணத்தினாலே, எல்லா வழக்குகளையும் அங்கே கொண்டுபோய் வைத்துவிட்டு, அங்கே N.B.W--Non-bailable Warrantsதான் pending-ஆக இருக்கிறதேயொழிய, வழக்குகள் நடப்பதேயில்லை. ஆகவே, இப்படிக் குற்றவாளிகள், தொடர்ந்து குற்றங்களைச் செய்துகொண்டேயிருக்கிறார்கள். சிலபேர், Engineering College-ஐயே கட்டிவிட்டார்கள், கட்டைகளைக் கடத்தி. ஆகவே, இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கக்கூடிய சூழலில், இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய நீதிமன்றங்களுக்கே அந்த அதிகாரத்தைக் கொடுத்து, இதுபோன்ற சந்தன மரக் குற்றவாளிகளை அப்போதைக்கப்போது தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் உள்ள அமிர்தி, காவலூர் போன்ற பகுதிகளில் மட்டுமே சில நூறு மரங்கள் இருப்பதை அறிக்கையிலே நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதையே சொல்லி, அவற்றையெல்லாம் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். வேலூர், தருமபுரி, திருச்சி, சேலம் போன்ற மண்டலங்களிலே, 4 வனப் பாதுகாப்புப் படைகளும், அதைப்போல வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, அரூர், சேலம், ஆத்தூர், ஈரோடு, பொள்ளாச்சி ஆகிய கோட்டங்களிலே, 11 இடங்களில் வனக் காவல் நிலையங்களும், அதைப்போலவே, வேலூர் மண்டலத்திலும், தருமபுரி மண்டலத்திலும், சேலம், திருச்சி, கோயம்புத்தூர், ஈரோடு, 6 மண்டலங்களிலும், 11 சுழல் தணிக்கைச் சாவடிகளும் அமைக்கப்பட்டு அந்தச் சந்தன மரங்கள் கடத்தப்படுவதைக் கடுமையாகத் தடுத்து, நாங்கள் அவற்றைப் பாதுகாத்து வருகிறோம்.

மேலும், அந்தச் சந்தன மரங்கள் கடத்தப்படாமல் இருப்பதற்காக, வனப் பணியாளர்களுக்குக் கம்பியில்லாத் தந்தி, அலைபேசி, படைக்கலன்கள் மற்றும் ஈப்பு வாகனங்கள் கொடுக்கப்பட்டு, அவை

எல்லாம் பராமரிக்கப்படுகின்றன என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதற்காக, மேலும் அந்தக் கடத்தலில் ஈடுபடுபவர்கள்பற்றி, தகவல்கள் தருவார்களேயானால் அதற்குத் தகுந்த வெகுமதி கொடுப்பதற்கும் அரசு அறிவித்திருக்கிறது. எனவே, இதுபோன்று, அந்த மரங்களைக் காப்பாற்றவேண்டும்; மரங்கள் குறைந்துவருகின்றன. அவர் குறிப்பிட்டதைப்போல, ஜவ்வாது மலையிலும், தருமபுரி மாவட்டத்திலுள்ள சித்தேரி மலையிலும்தான் நல்ல மரங்கள் கிடைக்கின்றன. மற்ற பகுதிகளிலே, பொதுவாகக் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலேதான் அந்த மரங்கள் கிடைத்தாலும்கூட, மேற்குத் தொடர்ச்சி மலையிலும் சில தரம் குறைந்த மரங்கள் எல்லாம் கிடைக்கின்றன. எனவே, மரங்கள் இந்த நிலையில் குறைந்திருப்பதை அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு—அதை நாம் நடுவதில்லை, இயற்கையாகவே வளருகின்றன—அந்த மரங்களைக் காப்பாற்றுவதிலே பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) சொல்லியாயிற்று அல்லவா? (குறுக்கீடு) அமைச்சர் சொல்லிவிட்டார்கள். உங்களுக்கு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் என்ன கேள்வி கேட்கப் போகிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** இரண்டு கேள்விகள் கேட்கலாம். One more question I can ask. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இங்கே ஒரு தெளிவான விளக்கத்தைக் கொடுத்தார்கள். ஆனால், சந்தன மரங்கள் கடத்தப்படக்கூடிய, அந்தத் தொழிலில் ஈடுபட்ட அதே பழைய ஆட்கள் நிறையபேர், இப்பொழுதும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்மீது சில N.B.W. மட்டும் போட்டுப் போட்டு வழக்குகளை நிறுத்தி விடுகிறீர்களேயொழிய, base case வைத்துக்கொண்டிருப்பவர்கள்மீது, மீண்டும் குண்டர் சட்டம் போன்றவற்றையெல்லாம் போட்டு, உடனடியாக நடவடிக்கை அரசு எடுக்குமா? ஒன்று; இரண்டாவது, நீங்கள் இந்த வசதிகளையெல்லாம் செய்து கொடுத்திருக்கின்றீர்கள்; அதாவது, பொதுவாக வனத் துறை அதிகாரிகளுக்கு இவ்வளவு வசதி செய்து கொடுத்தும், உண்மையிலே இப்படிப்பட்ட தகவல்களைக் கொடு...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன். No, no, no. அதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். (குறுக்கீடு) கேள்வியைக் கேட்டுவிட்டீர்களானால் உட்காருங்கள். ஒரே கேள்வியைக் கேட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமிர்தி காட்டிலிருந்து தினந்தோறும் இப்படிச் சந்தன மரங்கள் இருக்கக்கூடியவை எல்லாம் கடத்தப்பட்டு வருகின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கின்ற அரசு, எப்பொழுதுமே இந்தச் சந்தன மரங்களைப் பாதுகாக்கவேண்டும்; தரம் வாய்ந்த சந்தன மரங்கள் தமிழகத்திலேதான் இருக்கின்றன என்கின்ற காரணத்தாலே, அதிலே அக்கறை காட்டும் என்பதற்குச் சில புள்ளிவிவரங்களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1996-2001-லே மட்டும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி நடந்த காலத்திலே, 6,968 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அந்த ஐந்து ஆண்டுக் காலத்திலே, 7,477 பேர் குற்றவாளிகளாக அந்தக் காலக்கட்டத்திலே அவர்கள் பிடிக்கப்பட்டார்கள். அவர்களிடமிருந்து 1,267 வாகனங்கள் பறிக்கப்பட்டன. 118 பேர் குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்டார்கள். ஆனால், அதன்பின்னாலே வந்த ஆட்சியிலே ஒருவேளை நாட்டிலே அந்தக் குற்றவாளிகள் குறைந்துவிட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது; 1,046 குற்றங்கள்தான் அந்த ஐந்து ஆண்டுகளிலே பதிவு செய்யப்பட்டு, 1,104 பேர்மீதுதான் அந்த வழக்குகள் போடப்பட்டு, 20 வாகனங்கள் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்டு, ஒருவர் மட்டும்தான் குண்டர் சட்டத்திலே போடப்பட்டிருக்கிறார். எனவே, இந்த நிலைமைகளை நன்கு பரிசீலித்து வருங்காலத்திலே இதைப்போல குற்றங்களிலே ஈடுபடுபவர்கள்மீது தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2006 ஆகஸ்ட் 24

## 4. தகவல் கோரல்

### சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்தை மக்கள் பாதிக்கப்படாதவண்ணம் மேற்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. வி.பி. கலைராஜன்:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பிறகு அறையில் வந்து பாருங்கள்.

முற்பகல் 10–40

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.537,82,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,26,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9335, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் அதிகமாக வசித்துவரும் பகுதிகளுக்கு சமுதாயக் கூடங்கள் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.537,82,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,26,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9201, திரு. ஆ. அருண்மொழிதேவன்.



**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரத்தில் 1-வது வார்டு பகுதியில் வசிக்கின்ற ஆதி திராவிடர்கள், கடுமையான நெருக்கடியான சூழ்நிலையில் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.537,82,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,26,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3579, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர்களுக்குப் பட்டா வழங்கும் ஆதி திராவிட நலத் துறை அலுவலகம் அம்பத்தூரில் உள்ளது. கும்மிடிப்பூண்டி வட்டம், மற்றும் பொன்னேரி தொகுதியைப் பிரித்து, தனியாக கும்மிடிப்பூண்டி அல்லது பொன்னேரி ஆகிய பகுதிகளில் அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.537,82,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,26,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8192, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளத்தூர் தொகுதியில் சுமார் 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆதி திராவிடர்களுக்கான புதிய கூட்டுக் குடியிருப்பு கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.537,82,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,26,27,000/– வேண்டும்." ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9177, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கமளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். 10 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எல்லோருமே 10 நிமிடத்திற்கு மிகாமல் பேசினால் சீக்கிரம் முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றும் விவசாயத் தொழில் செய்துவரும் சாதாரணக் குடும்பத்தில் உள்ள என்னை சங்கரநயினார்கோவில் தொகுதியில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெறச் செய்த தெய்வத் தாய் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

@ 171 முதல் 208 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



(மேசையைத் தட்டும் ஒலி) நீக்கமற என் நினைவில் நிறைந்திருக்கும் பேரருளே! நித்தமும் என் நெற்றியில் நின் திருப்பாத மண்ணே பற்றி இருக்கும். நின் திருப்பாதம் இருக்கிற திசையை நோக்கியே என் நினைவும், சிந்தனையும் நிறைந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறாமை கொண்டு, புரட்டு, உருட்டு, புறம்பேசுகின்ற இன்றைய அரசியல் சூழ்ச்சியை இன்முகத்துடன் எதிர்கொண்டு, எதிர் வரிசையிலே இருந்தாலும், எதற்கும் அஞ்சாமல், எந்த நேரமும் மக்கள் ஏற்றத்தோடு வாழ என்ன வழி என்ற சிந்தனை கொண்ட உயர்ந்த எண்ணம், விரிந்த இதயம், பரந்த மனம், தொண்டு உள்ளம், தொலைநோக்குப் பார்வை, தென்னகத்து மக்கள் இன்முகத்துடன் வாழ பொன் முகத்துடன் செயலாற்றும் தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகின்றேன். சங்கரநயினார்கோவில் தொகுதியில் என்னுடைய வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகளுக்கும், கழகப் பொறுப்பாளர்களுக்கும், ...(குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் மூன்று முறை இந்த அவையிலே பணியாற்றியிருக்கின்றார். அமைச்சராகவும் இருந்திருக்கிறார். இப்பொழுதும் எழுதிவைத்துக்கொண்டு அம்மா, அம்மா என்று சும்மா சொல்லிக்கொண்டேயிருந்தால் எப்படி?

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை முறை என்ன?**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** உறுப்பினர் நான் சொல்வதற்குச் சரியான பதிலைச் சொல்லவேண்டுமே தவிர, வேறு எந்த உள்நோக்கத்தோடும் சொல்லக்கூடாது. குறிப்புகளை வைத்துக்கொள்ளலாம் கையிலே. குறிப்புகளை வைத்து கருத்துகளைப் பேசலாம். ஆகவே, இந்தப் பக்கம் கருத்துக்கு நிரம்ப இடம் உண்டு. பகுத்தறிவாளர்கள் நாங்கள், (மேசையைத் தட்டும் ஒலி)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரநயினார்கோவில் தொகுதியில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த சங்கரநயினார்கோவில் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியினை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். சங்கரநயினார்கோவில் தொகுதி மக்களுக்குப் பாதிப்பான சில நிகழ்வுகளை இங்கே அவைமுன் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமாகவும், தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர், மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகவும் எங்களுடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தங்குதடையின்றி சீராக வந்துகொண்டிருந்த தண்ணீர், இப்பொழுது பல கிராமங்களில் சீராக வருவதில்லை. காரணம், மின்சாரத் தடை ஏற்படுகிறது என்று பொதுமக்களும், அங்குள்ள தொகுதி மக்களும் பேசுகிறார்கள். சீராக மின்சார விநியோகம் வழங்கவும், சங்கரன்கோவில் பகுதியில் அனைத்து கிராமங்களுக்கும் தங்குதடையின்றி தண்ணீர் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் முன்வைக்கின்றேன். உபகாரம் இல்லாவிட்டாலும், உபத்திரவம் இல்லாமல் இருந்தால் சரி. காரணம், எங்களுக்கு வந்த தண்ணீரை நீங்கள் ஒழுங்காகக் கொடுத்துக்கொண்டிருங்கள். அதுவே எங்களுக்குப் போதுமானது.

அதோடுமட்டுமல்ல; தி.மு.க. ஆட்சி வந்தவுடனே எங்களுடைய தொகுதியிலே சிக்-குன்-குன்னியா என்கிற நோய் தி.மு.க. ஆட்சி வந்தவுடனே வந்துவிட்டது. இது எங்கிருந்து வந்திருக்கிறது என்று சொன்னால் ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருப்பதாக எங்கள் தொகுதி மக்கள் சொல்கிறார்கள். அந்தச் சிக்-குன்-குன்னியா நோய் வந்தவுடனே, நடக்க முடியவில்லை; வேலைக்குப் போக முடியவில்லை. படுத்த படுக்கையாக உள்ளார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் ஏதாவது நிவாரணத் தொகை கொடுக்கவேண்டும்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவன். அம்பாசமுத்திரம் தொகுதியிலே கஸ்தூரி என்கிற சுமதி, சிவன்பாண்டியனுடைய மகள், சிக்-குன்-குன்னியா நோயினால் இறந்திருக்கிறார். உங்களிடம் சொன்னார்களோ, சொல்லவில்லையோ? நீங்கள் பார்த்தீர்களோ, பார்க்கவில்லையோ?



ஆகையினால்...(குறுக்கீடு) I am not yielding. அப்படி இறந்தவர்களுக்கு ஏதாவது நிவாரணத் தொகை கொடுக்கவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் மானியக் கோரிக்கையிலே பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முன்னாள் அமைச்சரவர்கள் (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்வார். நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. அவரால் சொல்ல முடியும். சிக்-குன்-குன்னியா நோய் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தது என்று சொன்னார். அப்படியானால் ஆப்பிரிக்காவுக்கே அண்ணா தி.மு.க. போய்விட்டதா என்று கேட்கவேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்காகத்தான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. கருப்பசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கருப்பசாமி பேசட்டும், உட்காருங்கள். கொறடா, திரு. செங்கோட்டையன், நீங்கள் உட்காருங்கள். திரு. கருப்பசாமி பேசுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மக்கள் பேசுவதை நான் இங்கே சொல்கிறேன். ஆக, எங்கிருந்து வந்தது என்பதை நீங்கள் கண்டுபிடியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 மாதங்களுக்கு முன்பு, வெள்ள நிவாரண நிதி என்கின்ற வகையில், வெள்ள நிவாரண நிதி கொடுத்த வகையில், எம்.ஜி.ஆர். நகரிலும், அண்ணா நகரிலும் பலபேர் இறந்தார்களே, அது எந்த ஆட்சியில் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** இந்தப் புகைப்படத்தைப் பாருங்கள். (புகைப்படத்தைக் காண்பித்தார்) படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் சிக்-குன்-குன்னியா நோயால் படுத்த படுக்கையாகப் படுத்துக் கிடக்கிறார்கள். அதேபோல, என்னுடைய தொகுதியிலே இனம் புரியாத ஒரு நோய், இந்தச் சிக்-குன்-குன்யா போல, விவசாயிகள்

உற்பத்தி செய்கின்ற கரும்பு, வாழைக்கு ஓர் இனம் புரியாத நோய் வந்து, அதிகமான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றேன். இந்தக் கரும்பைப் பாருங்கள்; எவ்வளவு பட்டுப் போய்க் கிடக்கிறது என்று பாருங்கள்! (புகைப்படத்தைக் காண்பித்தார்) இந்த அளவுக்குப் பட்டுப் போய்க் கிடக்கிறது. இது வாழை! (புகைப்படத்தைக் காண்பித்தார்) இந்த அளவுக்குக் கருகியிருக்கிறது. நீங்கள் கேலியும், கிண்டலும் பேசினால், கண்டிப்பாக வரக்கூடிய தேர்தலில் நீங்கள் வீட்டுக்குப் போவது உறுதி. விவசாயிகளைக் கேலியும், கிண்டலுமாகப் பேசுகிறவர்கள் நீங்கள். ஏனென்றால், விவசாயிக்காகக் கடந்த தி.மு.க. ஆட்சியிலே நாங்கள் பேசியபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, இது ஆதி திராவிடர் நலத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை நடக்கிறது. தெரிகிறதா? விவசாயத் துறையோ, வேறு எதுவோ இல்லை.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** Sir, Speaker Sir. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுக் காலம் அமைச்சராக இந்தச் சபையிலே இருந்தவர், பல அரிய கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலே தவறில்லை. அதை ஏற்று நிவர்த்தி செய்கின்ற முதலமைச்சர்தான் இங்கே அமர்ந்திருக்கின்றார். .

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

என்று வள்ளுவன் சொன்னானே, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வள்ளுவனின் வழித் தோன்றல்தான் இங்கே அமர்ந்திருக்கின்றார். ஒன்றே ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன். நாங்கள் ஆட்சிக்கு வந்து மூன்றே மூன்று மாதங்களதான் முடிந்து இருக்கின்றன. CNN, UNI, THE HINDU இவர்களெல்லாம் கருத்துக் கணிப்புகள் எடுத்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக் கணிப்பிலே மூன்று மாதங்களிலே இந்தியாவிலே நான்காவது இடத்தைப் பெற்றிருக்கிற முதலமைச்சர்,

எங்கள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய கவனத்திற்கு, உங்களுடைய சிந்தைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் பரிதி இளம்வழுதி அவர்கள் ஆத்திரப்படத் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் சரியாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நாமெல்லாம் வீட்டுக்குப் போவோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். வீடு இருப்பவர்கள், வீட்டுக்குத்தான் போகவேண்டும். இல்லாதவர்கள்தான் எங்காவது போகவேண்டும்.**

முற்பகல் 11-00

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**

முற்பகல் 11-05

** **

** **

**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் ** (குறுக்கீடுகள்)

**திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பழங்குடியினர்... **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** எப்படி இந்தப் பிரச்சினை வந்தது என்பதைப் பார்க்க வேண்டும். ஆளும் கட்சியிலே உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம் விரைவிலே வீட்டுக்குப் போவார்கள் என்று சொன்னார். நான் அதற்குப் பதில் சொன்னேன். எல்லோருக்கும் வீடு இருக்கிறது. வீட்டுக்குத்தான் போவார்கள். வேறு எங்கே போவார்கள் என்று சொன்னேன் அவ்வளவுதான். ஆனால், அவர் அதற்கு சொன்ன பதில் என்ன, அதற்குப் பிறகு விளைந்த விளைவுகள் என்ன என்பதெல்லாம் தங்களுக்குத் தெரியும். எனவே, அவர் சொன்ன அந்த பதிலிலேயிருந்து,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இங்கே கே.கே.எஸ்.எஸ்.ஆர். பேசிய அந்த வார்த்தைகள் வரையில், அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்பட வேண்டும் என்று நானும் விரும்புகின்றேன். அதுதான் இந்த அவையினுடைய கண்ணியத்தைக் காக்கக்கூடியதாகும். இல்லை, இவற்றைப் பற்றி எல்லாம் விவாதிக்க வேண்டுமென்று விரும்பினால், அதற்கான ஆதாரங்கள், கையெழுத்துப் பிரதிகள், கைப்பட எழுதப்பட்ட கடிதங்கள், இவற்றோடு இந்த அவையிலே அந்தச் சான்றுகளோடு, நான் வருவதற்கும் தயாராக இருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11-10

நான் அந்த நேரத்திலே வேண்டுமானால் முதலமைச்சர் என்கின்ற அந்த கௌரவப் பதவியை மறந்துவிட்டும், வாத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நம்முடைய எதிர்க்கட்சியினுடைய கொறடா இங்கே குறிப்பிட்டதைப்போல, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதிகளை அப்படியே எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சொ. கருப்பசாமி பேசியதையும், மாண்புமிகு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 2-ல் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், அனைத்து மதங்களிலும் இருக்கின்ற ஆதி திராவிடர்களுக்குக் கிடைத்திட.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** வழிவகை செய்யப்படும் என்று இந்த அரசு முடிவு செய்து உள்ளது. பக்கம் 39-ல் சிறப்பு மாநில நிதி உதவித் திட்டத்தில், மதம் மாறிய கிறிஸ்தவ ஆதி திராவிடர்களுக்குச் சலுகைகள் கிடைக்கும் என்று குறிப்பில் உள்ளது. இருவேறு கருத்தாக இருக்கிறது. விளக்கம் தேவை என்பதைக் கோரிக்கையாக நான் முன்வைக்க விரும்புகின்றேன். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதுபோல, ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும், அனைத்து மதங்களில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கும் வழங்கப்படும். சிறப்பு மாநில நிதி உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சலுகைகளும், அனைத்து மதங்களில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். அதெல்லாம் வேண்டாம்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** இல்லை, ஒரு point-ஐச் சொல்லிவிடுகிறேன். ஒன்றே ஒன்று. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம். உட்காருங்கள். உறுப்பினர் பேசட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கே முன்னோடியாக +1, +2 படிக்கிற மாணவ, மாணவிகளுக்கு, இலவச சைக்கிள் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் ரூ.59.12 கோடி செலவில் 3,58,566 சைக்கிள்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த இலவச சைக்கிள் திட்டத்தை இந்த அரசும் தொடரும் என்று சொன்னது வரவேற்கத்தக்கது.

அடுத்து, இந்தியாவிற்கே, முன்னோடியாக முதுகலைப் பட்டப் படிப்பு, மேல்படிப்புப் படிக்க வழங்கி வந்த கல்விக் கடனை முழு மானியமாக வழங்கியது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு. மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு கொண்டுவந்த அந்தத் திட்டத்தை, இந்த அரசும் தொடரும் என்பது வரவேற்கத்தக்கது. அதேபோல், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, ஏழைகளை, விவசாயக் கூலித் தொழில் செய்து வருகிற பெண்களை, நிலச்

சொந்தக்காரர்களாக மாற்றுவதற்கு, ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிலம் வாங்கவும், ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாடு செய்துகொள்ளவும், ஆக இரண்டு இலட்சம் ரூபாயில் பாதி, அதாவது 50 சதவிகித மானியத்தில், 1,500-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு நிலம் வாங்கிக் கொடுத்து இருக்கிறது. அந்தத் திட்டத்தை இந்த அரசும் தொடரும் என்று சொல்லியதோடு மட்டுமல்ல; எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இந்த நேரத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2006 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில், ஆதி திராவிடர்கள் குடியிருப்புகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள் உரையை. 23 நிமிடங்கள் ஆகின்றன.

**திரு. சொ. கருப்பசாமி:** தண்ணீர் வசதி, தெரு விளக்கு வசதி, சாலை வசதி, போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, 71 கோடி ரூபாயை ஒதுக்கியதாக அப்போது ஆளுநர் உரையில் கூறப்பட்டு உள்ளது. அந்த நிதியைப் பயன்படுத்தி இப்போது இந்த அரசு திட்டங்களை நிறைவேற்றுமா என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதேபோல, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான் இங்கே பல்வேறு திட்டங்கள், சிறப்பான திட்டங்கள், ஏழையெளிய மக்களுக்குத் தீட்டப்பட்டு, குறிப்பாக, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றார்கள். அந்த வகையிலே, தாட்கோமூலமாக 104 பெண்களுக்கு ஆட்டோக்கள் வழங்கிய பெருமை எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன். (குறுக்கீடு) முடியுங்கள் சீக்கிரம். நீங்கள் சும்மா பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள், எதற்கெடுத்தாலும் அம்மா அம்மா என்று கூறிக்கொண்டு.

**திரு. சொ. கருப்பசாமி:** ஏன்? சொல்வேன்: அது எங்கள் உரிமை எங்கள் உரிமை, பேரவைத் தலைவரே!



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject-ஐச் சொல்லுங்கள். இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. சொ. கருப்பசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதியைப் பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** 285 மூட்டை ரேஷன் அரிசியைக் கடத்தியிருக்கிறார்கள். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆளுங்கட்சி அரசியல் தலையீட்டால் நடவடிக்கை எடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுங்கள். அதேபோல நேற்றைக்கு நகராட்சி அலுவலகத்தில் எங்களுடைய முதலமைச்சராக இருந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய படத்தை எடுத்ததினாலே பிரச்சினை. அதற்கும் நடவடிக்கை எடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right. உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசுகிறார். உட்காருங்கள் திரு. கோவிந்தசாமி. (குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை பல்வேறு காலக்கட்டங்களிலே மிகப் பிரசித்திபெற்ற அவை. பல்வேறு மக்கள் பாராட்டுகின்ற அவை. இந்த அவையிலே என்ன பேசக்கூடாதோ அதையெல்லாம் பேசி இந்த (குறுக்கீடு) இல்லை, இல்லை. இருக்கட்டும். எல்லாப் பிரச்சினைகளையும் பேசி, இந்த நாட்டிற்கு உதவா...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, நீங்கள் எல்லாம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** ஒன்றுமில்லை. பேசுகின்றவர்கள் எல்லாம் அந்தந்த மானியக் கோரிக்கையில் மட்டும் பேச வேண்டுமென்று நீங்கள் வலியுறுத்த வேண்டும். அதை விட்டுவிட்டு இல்லாத விஷயங்களை எல்லாம் பேசிக் கொண்டிருப்பது, இந்த அவையினுடைய மரபை, கண்ணியத்தைக் காப்பாற்றாது. அதனாலே, அனைத்துக் கட்சித் தலைவர்களும் கொண்ட அலுவல் ஆய்வுக் கூட்டத்தைக் கூட்டி, இந்த மன்ற உறுப்பினர்கள் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென்று நீங்கள் அறிவுறுத்த வேண்டுமென்று பணிவான வேண்டுகோளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடு) அமைச்சர் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ அவருடைய பகுதியிலே, 285 மூட்டை அரிசி கடத்தப்பட்டதாக, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். நேற்றையதினம்கூட எங்களுக்குக் குறிப்பு வந்திருக்கிறது. ஏற்கெனவே 5 ஆண்டுக் காலம் பலர் தொடர்ந்து இந்த வேலையைக் கைத்தொழிலாகவே செய்து கொண்டிருந்திருக்கிறார்கள். அதைத்தான் இந்த அரசு மிக வேகவேகமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதன்மூலமாகத்தான் வழக்குத் தொடர்ந்து செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நேற்றையதினம் வரைகூட 12 பேர், இந்த மாதத்தில் மட்டும் 12 பேரை குண்டர் சட்டத்தில் நாம் போட்டிருக்கிறோம். நேற்று எனக்கு வந்திருக்கிற ஒரு செய்தி, பெரம்பலூர் மாவட்டத்திலே குறிப்பாக வேப்பந்தட்டை என்கிற ஒன்றியத்திலே, அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் நேற்று 230 மூட்டையைக் கடத்தியிருக்கிறார் என்கிற ஒரு செய்தி வந்திருக்கிறது. வழக்குப் பதிவு செய்திருக்கிறோம். இன்று மாலை அதற்கான முழு விவரத்தையும் பெற்று, நாளையதினம் அறிவிப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, பேச்சை முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் ஆதி திராவிட மக்கள் 6 இலட்சத்து 25 ஆயிரத்திற்கும் மேலாக பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு, அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும், அது ஆணவச் சிரிப்பு.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், ஆமாம். Right, right, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாபெரும் சரித்திரப் புகழ்மிக்க இந்த அவையிலே பேச வாய்ப்புக் கிடைக்க, என்னைக் கழகத்தினுடைய வேட்பாளராகத் தேர்வு செய்து, அறிவித்து, வெற்றிபெறச் செய்த உலகத் தமிழர்களின் தலைவரும், வாழும் அரசியல் தொல்காப்பியரும், செம்மொழிச் செல்வருமான எங்கள் கழகத்தினுடைய குடும்பத் தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

இனமானப் பேராசிரியரும், நிதி அமைச்சருமான ஐயா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கழகத்தினுடைய, தமிழகத்தினுடைய வருங்கால வழிகாட்டி, அனைவர் உள்ளத்திலும் உள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், எங்கள் நெஞ்சம் நிறைந்த தளபதியார் அவர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் மாவட்டக் கழகத்தினுடைய வளர்ச்சியிலும், மாவட்டத்தினுடைய வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு வழிநடத்திவரும், எனக்கு தந்தைபோல் இருந்து வழிகாட்டி வரும், வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வெற்றிக்காக உழைத்த பழனி தொகுதியினுடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி பொறுப்பாளர்களுக்கும், தி.மு.கழக பொறுப்பாளர்களுக்கும், நான் பணியாற்றிய இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினுடைய ஊழியர்களுக்கும், எனது தந்தை காலஞ்சென்ற மிசா நெல்லை மாறன் அவர்களுக்கும், எனது தாயார் அவர்களுக்கும், எனது உயர்வுக்கு உறுதுணையாக நின்ற எனது துணைவியார் அவர்களுக்கும், வாக்களித்த பழனி தொகுதியினுடைய மதிப்புமிக்க வாக்காளப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த வாய்ப்பை வழங்கிய பேரவைத் தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன்.

நடந்து முடிந்த நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்புக் கிடைத்து நழுவிவிட்டது. மீண்டும் எனக்கு அறநிலையத் துறை விவாதத்திலே பேச வாய்ப்புக் கிடைத்து நழுவிவிட்டது. ஆகவே, இந்த இரண்டையும் தொட்டுவிட்டு, நடப்பு மானியக் கோரிக்கைக்கு வருகிறேன். நடந்து முடிந்த தேர்தலிலே, வாழும் வள்ளுவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அமைத்து, இந்த அணி வெற்றிபெற்றால் தமிழகத்தினுடைய தலைவராக, முதல்வராக டாக்டர் கலைஞர்தான் வருவார் என்று அறிவிக்கப்பட்டு, தேர்தலைச் சந்தித்து. அவ்வாறு சந்தித்த இந்தத் தேர்தலிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணி 234 தொகுதிகளிலே போட்டியிட்டு, 163 தொகுதிகளிலே வெற்றிபெற்றது. அதாவது, போட்டியிட்டதிலே 79 விழுக்காடு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம், தான் போட்டியிட்ட தொகுதிகளிலே 95-ஐப் பெற்று 78 விழுக்காடுகள் வெற்றிபெற்றுள்ளது. இது மக்கள் கணக்கு. இது எங்கள் கணக்கு. இதுதான் மெஜாரிட்டி என்பதை மக்கள் தெரிவித்தார்கள். ஆனால், கணக்கை கணக்காகப் பார்க்காதவர்கள் இதை உணரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இப்படி மெஜாரிட்டி பெற்றதன் காரணமாக டாக்டர் கலைஞர் அவர்கள், திருக்குவளை தந்த சோழன் 5 ஆம் முறையாக முதல்வராகப் பதவி ஏற்றார்கள். இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

பதவி ஏற்றவுடனே படுகுழியில் கிடந்த தமிழக மக்களை, தமிழர்களை கை தூக்க வேண்டுமென்று உதவிக் கரம் நீட்டினார்கள். சாதாரண மக்கள், சாமானிய மக்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள், குறிப்பாகத் தமிழன் பட்டினி கிடக்கக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து, படுகுழியிலே இருந்த சாதாரண மக்களைக் கை தூக்கிவிட கை நீட்டியிருக்கிறார்கள் டாக்டர் கலைஞர் அவர்கள்.

இரண்டாவது, விவசாயிகள், சாதாரண விவசாயி, கடன் சுமையைத் தூக்க முடியாமல் இருந்த விவசாயிகளுடைய கடன் சுமை சுமார் ரூபாய் 7,000 கோடியை இறக்கி வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக, சாதாரண மக்களுக்குக் கை நீட்டி, உதவிக்கரம் நீட்டியவர் முதல்வர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரண வீட்டுக் குழந்தைகள் வாரம் இரண்டு முட்டைகள் சாப்பிட—ஆசிரியர்கள் கல்வியைத் தந்தாலும்—உடல் ஆரோக்கியத்தை நான் தருகிறேன் என்று சாதாரண வீட்டுக் குழந்தைகளுக்கு இரண்டு



முட்டைகள் வழங்கி அறிவித்தார்கள். அதன் பயனாக சாதாரண வீட்டுக் குழந்தைகளுக்குக் கை நீட்டி, உதவிக்கரம் நீட்டி உயர்த்தியிருக்கிறார்கள் என்பதைத், தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி படுகுழியில் உள்ள தமிழர்களைத் தூக்கியவர் டாக்டர் முதல்வர் அவர்கள்தான் என்பதை இதன்மூலம் உணர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டங்கள் அனைத்தும் அறிவிக்கப்பட்டு, கடந்த 3–6–2006 ஆம் தேதி, அதாவது முதல்வர் அவர்கள் பிறந்த நாளிலே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அன்றுதான் தமிழக மக்கள், தமிழர்கள் அனைவரும் அவரைப் பல்லாண்டு வாழ வாழ்த்தினார்கள். நாமும் வாழ்த்துவோம். அவர் பல்லாண்டு வாழ்ந்து இதுபோன்ற பல திட்டங்களைத் தர வேண்டுமென்று வாழ்த்துவோமாக.

நிதிநிலை அறிக்கையில் பழனிக்கு rope car திட்டம் தந்ததற்காக, பழனி தொகுதி மக்களின் சார்பாக நிதி அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் எங்களது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, பழனியில் கடந்த காலத்தில்—கும்பாபிஷேகம் கோயில்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வரும். ஆனால், பழனியிலுள்ள கோயிலுக்கு ஆறரை ஆண்டுகளிலேயே கும்பாபிஷேகம் நடத்தப்பட்டிருக்கிறது. அப்படி நடத்தப்பட்ட கும்பாபிஷேகம் யாருடைய பணத்திலிருந்து நடத்தப்பட்டது என்பது தெரியவில்லை. பொதுமக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. வசூலிக்கப்பட்ட பணத்திற்குக் கணக்கு இல்லை. செலவு செய்ததற்குக் கணக்கு இல்லை. ஆகவே, வாங்கிய பணத்திற்குக் கணக்கில்லாமல் செலவழித்து, இந்தத் துறையினுடைய கோயிலுக்குச் செலவழித்ததை ஆய்வு செய்ய வேண்டுமாய் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

அந்தக் கோயிலிலே கும்பாபிஷேகத்தின்போது கோயில் படியை மாற்றினார்கள், வாசலை மாற்றினார்கள், முருகன் சிலையையே மாற்றினார்கள். இதையெல்லாம் பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருந்த முருகன், மீண்டும் இவர்களை விட்டால் இந்த மலையையே மாற்றிவிடுவார்கள் என்று நினைத்து ஆட்சியையே மாற்றிவிட்டான் முருகன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும், பழனியிலுள்ள Polytechnic-இலே, முறையாக முதல்வர் நியமனம் இல்லை. கடந்த ஆட்சியிலே Polytechnic முதல்வர் நியமனத்திலே முறைகேடு நடந்திருக்கிறது. அந்த முறைகேட்டை விரிவாக விசாரணை செய்ய வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். விளம்பரம் செய்ததிலே 45 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டுமென்று விளம்பரம் கொடுக்கப்பட்டது. விளம்பரம் வந்து தேர்வு நடக்கும் வேளையில், அந்தத் தேர்வை இரத்து செய்துவிட்டு, மீண்டும் Technical Director-னுடைய கடிதச் சுற்றறிக்கை பெறப்பட்டு, 45 வயதிற்குட்பட்டவர்களை, வந்தவர்களைத் தேர்வு செய்யாமல், 45-லிருந்து 50 வயதாக உயர்த்தப்பட்டு, அது விளம்பரம் செய்யப்படாமல் தேர்வு செய்யப்பட்டது. அப்படியும் தேர்வு செய்யப்பட்ட முதல்வரினுடைய வயது 51 வயது 6 மாதங்கள். ஆக, 51½ வயதுக்குரியவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதை விசாரணை செய்து, நல்லதொரு நியமனம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பழனி கோயிலைத் திருப்பதிக் கோயிலுக்குச் சமமாக உயர்த்தி, சிறப்பு அந்தஸ்து தர வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கோயிலிலே கடந்த காலத்தில் 900 பேர் பணியாற்றியவர்கள், இன்று 350 பேராகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, பணி நியமனம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பணியாற்றுபவர்களுக்குப் பணி உயர்வு தர வேண்டுமாய் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கோயிலில் உள்ள கல்லூரி மற்றும் Polytechnic-இல் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரியிலே பணியாற்றக்கூடிய தொகுப்பூதிய ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டும். அவர்களைக் காலமுறை ஊதியத்திற்கு மாற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கோயில் பணியாளர்களுக்கு pension தர, 16-6-1998-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்த L.I.C. pension திட்டத்தை முந்தைய அரசு நீக்கிவிட்டு, E.P.F. திட்டத்தைக் கொண்டு



வந்திருக்கிறது. ஆகவே, இரு திட்டங்களையும் அமல்படுத்தி, எது தொழிலாளர்களுக்கு உகந்ததோ, அதைப் பயன்படுத்த தொழிலாளர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழனி கோயிலிலிருந்து நன்கொடையாக பல்வேறு திட்டப் பணிகளுக்குப் பணம் எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த 1996-2001 காலக்கட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஆட்சிக் காலத்தில், 99 இலட்சம் ரூபாய் பணம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 2001-2006 ஆம் ஆண்டுவரையான அ.தி.மு.க. அரசால் 51 கோடியே 72 இலட்சத்து 60,000 ரூபாய் பணம் கோயிலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது, பல்வேறு பணிகளுக்காக. அந்தப் பணம் உரிய பணிகளுக்குச் சென்றடைந்திருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற பணிகளுக்கு வெளியிலே எடுக்கப்படும் பணங்களைப் போல, பழனிக்கும் நிதி ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்ட பணிகளைச் செய்ய வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொறியியல் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரி, ஆசிரியர் பட்டயப் படிப்புக் கல்லூரி, ஆகமக் கல்லூரி ஆகியவை தொடங்க வேண்டும்.

டாக்டர் கலைஞர் அவர்கள், அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள், நிதிநிலை அறிக்கையிலே. உண்மையிலேயே அது பாராட்டுக்குரியது. நான் பெரியாரைப் பார்த்ததில்லை, அண்ணாவைப் பார்த்ததில்லை. அவர்களின் ஒட்டுமொத்த உருவமாக முதல்வரைத்தான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இந்த ஆகமத்தைப் படித்து அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற வாய்ப்பைத் தந்து, தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்டோரும் அதில் உள்ளடங்கும் என்பதைத் தெரிவித்து, அனைவருக்கும் அந்த வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி கூறுகின்றேன். ஆகவே, பழனியில் ஒரு ஆகமக் கல்லூரியைத் தொடங்கி, அந்த ஆகமக் கல்லூரியில் அனைவரும் அர்ச்சகர் ஆகக்கூடிய பயிற்சியைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இசைக்கும், நாட்டியத்திற்கும் ஒரு கல்லூரியை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மானியத்திலே-சாதாரண, காலிலே செருப்பு இல்லாமல் இருந்த மக்களுக்கு, செருப்பு கொடுத்தார். இடுப்பிலேயிருந்த துண்டை தோளிலே போட்டு வைத்தார். கோயிலுக்குள் செல்லாதவர்களைக் கோயிலுக்குள் செல்ல வைத்தவர். அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே உயர் நீதிமன்றத்திலே ஒரு தாழ்த்தப்பட்டவனை ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) My Lord என்று, ஆண்டவனே என்று ஒரு தாழ்த்தப்பட்டவனுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையை முதல்வர் அவர்கள்தான் தந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

*முற்பகல் 11-30*

மேலும், இந்த நாட்டினுடைய முதல் குடிமகனாக ஒரு தாழ்த்தப்பட்டவரைக் கொண்டுவருவதற்கு முழு முயற்சியைக் கொடுத்தவர் இந்த முதல்வர்தான் என்பதை இந்த நல்ல வேளையிலே பதிவுசெய்யக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கடந்த ஆட்சியிலே இந்த மக்களுக்கு ஓர் உறுப்பினர்தான் மந்திரியாக இருந்தார். ஆனால், இன்று 3 மந்திரிகளைக் கொடுத்திருக்கிறார். ஒரு துணை சபாநாயகரைக் கொடுத்திருக்கிறார். மத்தியிலே ஒரு மந்திரியைக் கொடுத்திருக்கிறார். ஆக, 5 மந்திரிகளைக் கொடுத்த நம்முடைய முதல்வரை மனமார இந்தச் சமுதாயம் பாராட்டுகிறது என்பதை இந்த நல்ல வேளையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அரிஜன மாணவர் விடுதிகளைப் பராமரிப்பதற்காக 10 கோடி வழங்கியிருக்கிறார்கள். மேலும், மத்திய அரசு கொடுக்கிற சிறப்புச் சலுகையைப் போல், மாநில நிதியுதவித் திட்டத்தைக் கொண்டுவந்து, சாதாரண மக்களுடைய, தாழ்த்தப்பட்ட மக்களுடைய கோரிக்கைகளைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். விடுதிகள் கட்டும்போது வருங்காலத்தைக் கணக்கில்கொண்டு அதிக (மணியடிக்கப்பெற்றது) எண்ணிக்கையில் மாணவர்கள் சேர வாய்ப்புத் தர வேண்டும். விடுதிகளை ஊரைவிட்டுத் தள்ளிக் கட்டாமல் இருக்க வேண்டும். ஏனென்றால், அங்கே காப்பாளர்கூட பணிக்குச் செல்ல மறுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்கள் கடந்த முறை, நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது, தாழ்த்தப்பட்டவர்களுடைய backlog-ஐ open பண்ணி, வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்தார்கள்.



மீண்டும் இந்த அரசு வந்திருக்கிறது; தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் வந்திருக்கிறார்கள். இந்தத் தமிழ்நாட்டிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், உங்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் அந்த backlog-ஐ open பண்ணி வாய்ப்பைத் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், National S.C., S.T. Financial Corporation-லும், Scavengers Rehabilitation Fund லும் கடந்த ஆட்சியிலே வந்த 60 கோடி ரூபாய் வங்கியிலே கிடக்கிறது. அதை மக்களுக்குப் பயன்படுத்த வேண்டுமாய் மிக்கப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களிலே நில ஆர்ஜிதம் சம்பந்தமான வழக்குகள் வரும்போது, அனைத்து வழக்குகளிலே இதையும் சேர்த்துவிடுவதால், வழக்குகளின் தீர்வுக் காலம் அதிகமாகிறது. ஆகவே, நில ஆர்ஜித வழக்குகளை, அரிஜன மக்களுடைய நில ஆர்ஜிதம் சம்பந்தமான வழக்குகளைத் தனியாக Court அமைத்து வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அனைத்துத் துறைகளிலும் பல்வேறு திட்டங்களை இந்த அரசு அறிவித்து, மக்கள்மீது வரியில்லாத பட்ஜெட்டை கொண்டுவந்ததற்காக மக்களின் சார்பாக (மணியடிக்கப்பெற்றது) நன்றியைத் தெரிவித்து, நமது நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் தலைவருக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. 10 நிமிடங்கள்தான் அம்மா! 10 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மானியக் கோரிக்கை எண் 4-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.537 கோடியே 82 இலட்சத்து 9 ஆயிரம், மூலதனக் கணக்கில் ரூ.25 கோடியே 26 இலட்சத்து 27 ஆயிரம் மற்றும் கடன் கணக்கில் 25 கோடியே எனவும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 25 இலட்சம்.

**திருமதி டி. யசோதா:** 25 இலட்சம் என்று மாண்புமிகு நம்முடைய ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். இன்றைக்கு அமைச்சராக வந்துள்ள

மாண்புமிகு ஆதி திராவிட அமைச்சரை மனமார வாழ்த்துகின்றேன். இந்தத் துறை மிகப் பெரிய துறை. கிட்டத்தட்ட 4-ல் ஒரு பங்கு மக்கள்தொகை இருக்கக்கூடிய ஒரு துறையைச் சார்ந்த இந்த மானியத்தில், வயதிலும், அனுபவத்திலும், இளமையோடு இருக்கின்ற ஒரு சகோதரியை, இந்தத் துறைக்கு அமைச்சராகப் போட்டிருக்கின்ற, நியமனம் செய்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தைரியத்தையும், நம்பிக்கையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த மாமன்றத்தில் எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் குறிப்பிட்டார்கள், மூன்று அமைச்சர்களை நியமித்திருப்பதோடு மட்டுமல்ல, துணைத் தலைவராக உங்களையும், மத்தியிலே ஒரு அமைச்சரையும் நியமித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நமமுடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டிலும், நான்கு பேருக்கு தாராள மனதுடன், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருப்பதை, நான் உளமார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-35

அதேபோல, என்னுடைய ஆதங்கம் எல்லாம், இன்றைக்கு துறையினுடைய அமைச்சராக இருக்கின்றவர், எந்தவொரு நல்ல திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று சொன்னாலும், எந்த ஒரு பிரச்சினைக்கு முடிவு காண வேண்டுமென்று சொன்னாலும், அவர்கள் சுயேச்சையாக, தன்னிச்சையாக எடுக்க முடியாது. எதுவாக இருந்தாலும், முதல்வர் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலே, அதனாலே ஏற்படுகின்ற காலதாமதம், அதனாலே ஏற்படக்கூடிய மன உளைச்சல், இவற்றையெல்லாம் போக்க வேண்டும் என்று சொன்னால், என்னுடைய விருப்பம், தனிப்பட்ட விருப்பம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இந்தத் துறையை மாண்புமிகு முதல்வர் அவர்களே ஏற்றுச் செயல்படுத்தினால், இன்னும் சிறப்பாக இருக்கும். சகோதரியாருக்கு வேறு துறையைக்கூட கொடுக்கலாம். முதல்வர் அவர்களிடத்திலே நிறைய துறைகள் இருக்கின்ற காரணத்தினால், அதை அவரே எடுத்துக்கொண்டால், எங்களுடைய பிரச்சினைகளுக்கு விரைவாக முடிவுகளை நாங்கள் காண முடியும் என்று நினைக்கின்றேன்.



கிட்டத்தட்ட சின்ன ஊர்கள்,
உலக மக்கள் தொகை 650 கோடி. பெரிய ஊர்கள் என்று சொன்னால் 250 நாடுகள் இருக்கின்றன. அந்த நாடுகளில் எல்லாம் பல மதங்கள் இருக்கின்றன, பல மொழிகள் இருக்கின்றன, பல கலாச்சாரப் பின்னணிகள் இருக்கின்றன. ஆனால், இந்தியாவிலே மட்டும்தான் தாழ்த்தப்பட்டவன் என்கின்ற நிலை இருக்கின்றது என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. வேறு எந்த நாட்டிலும் அதுபோன்ற ஒரு சூழ்நிலைமை இல்லை.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், S.C. மக்கள், தங்களுடைய கணக்கின்படியே 118.58 இலட்சம், S.T. பிரிவு என்று சொல்லக்கூடிய மலை ஜாதி மக்கள் 6.51 இலட்சம், இஸ்லாமியர்கள் 13 கோடி, கிறிஸ்தவர்கள் 2.5 கோடி, சீக்கியர்கள் 2 கோடி, பௌத்தர்கள் 1 கோடி. இவர்களைத் தவிர்த்து, உள்ள மக்கள் பல நூறு ஜாதிகளின் பெயரால் அழைக்கப்பட்டாலும்கூட, இவர்களை இந்துக்கள் என்பார்கள். இவர்கள்தான் தலித் மக்களைத் தீண்டத்தகாதவர்களாக நடத்துகின்றார்கள். முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் ஆகியோர், ஆதி திராவிடர்களைத் தீண்டத்தகாதவர்களாக நடத்துவதில்லை. இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்களாக இருந்தாலும் சரி, பிரெஞ்ச் நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, போர்ச்சுக்கீசியராக இருந்தாலும் சரி, இந்தியாமீது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போர் தொடுத்த மொகலாயர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் யாரும் தீண்டத்தகாதவர்கள் என்கின்ற ஒரு சமுதாயத்தை இந்தத் திருநாட்டிலே அவர்கள் சுட்டிக்காட்டியது இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். ஜாதிக் கொடுமைகளும், தீண்டாமையும் அற்ற ஒரு சமுதாயம் வளர வேண்டுமென்று புத்தர், மகாவீரர், குருநானக், கபீர்தாஸ், விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் போன்ற பல பெரியோர்கள் ஜாதிக் கொடுமைகள் அகல வேண்டுமென்று எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். ஆனாலும், இக்கொடுமை இன்னும் அகலவில்லை என்பதை வேதனையோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

காந்திஜி அவர்கள் குறிப்பிடுகின்றபோது, 73 ஆண்டுகளுக்கு முன்னதாக அவர் சொன்னார்: "நான், மறுபிறவி என்று ஒன்று இருக்குமேயானால், மறுபிறவியாக நான் ஒரு அரிஜனாகப் பிறக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். காரணம், ஒரு அரிஜனுக்கு இருக்கின்ற கொடுமைகளைக் கேட்பதினாலேயும், பார்ப்பதினாலேயும்

என்னால் நிறைவுகொள்ள முடியவில்லை. நான் ஓர் அரிஜனாகப் பிறந்தால்தான், அந்தக் கொடுமைகளை முழுக்க முழுக்க என்னாலே அனுபவிக்க முடியும்" என்று தன்னுடைய வேதனையைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அந்தத் தீண்டாமை இன்றைக்கும் நம்முடைய நாட்டிலேயிருந்து ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம் என்றாலும் கூட, அவை இன்னும் முழுமையாக வெற்றி பெறவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இந்த N.G.O.-க்கள் என்று சொல்லக் கூடியவர்கள், சிறிய சிறிய பயிற்சிகளை மேற்கொள்வார்கள், இந்தச் சமுதாயத்தின் பெயராலே. கல்வியறிவு குறைந்தவர்களுக்கும், கல்வி அறிவே இல்லாதவர்களுக்கும், இந்தத் துறையின் மூலமாக பொம்மை செய்வது, இன்னும் வாழை நார்களில் கூடை பின்னுவது, பனை ஓலைகளிலே கூடை முடைவது என்ற பல பல, சிறிய சிறிய, தொழில்களுக்கான பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வந்தன. இப்பொழுது எல்லாமே N.G.O.-க்களுக்கு இல்லை என்கின்ற நிலைமை! எப்படி?

முற்பகல் 11-40

50,000 ரூபாய் SSI-லே கட்டி நீங்கள் அங்கீகாரம் பெற்றால்தான் உங்களுக்கு அந்தப் பயிற்சிக்குரிய அனுமதி கொடுக்கப்படும் என்று மாவட்ட அளவிலே அதிகாரிகள் கூறுகின்றார்கள். 50,000 ரூபாய் செலுத்தக்கூடிய சூழ்நிலையிலே எத்தனை N.G.O. க்கள் இருப்பார்கள் என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அதேபோல, கற்றவர்களுக்கு, +2 தேர்வு பெற்றவர்களுக்கு எல்லாம் I.T.I. சொல்லிக் கொடுப்பதற்கு இந்தத் துறையிலே அனுமதிக்கின்றோம். அதேபோல, கல்வி அறிவு அற்றவர்களுக்கும், குறைந்த கல்வி அறிவு பெற்றவர்களுக்கும் இந்த N.G.O.-க்கள் மூலமாகக் கொடுக்கின்ற பயிற்சியை நாம் எந்தக் காலக்கட்டத்திலும் நிறுத்தாமல் இருப்பதற்கு முனைய வேண்டும். ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக முன்பு எல்லாம் தாட்கோவிலே loan கொடுப்பார்கள் என்று சொன்னால், இப்பொழுது எல்லாம் குழுக்களாக வந்தால்தான் கொடுக்கப்படும் என்று சொன்னால், குழுக்கள் இல்லாத அந்த ஆதி திராவிட மக்கள் என்ன நிலையை அடைய முடியும் என்பதை, எப்படித் தனி நபர் வாழ்க்கையிலே உயர முடியும் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன்.



இன்றைக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற வேலைவாய்ப்புத் துறையினுடைய செயலாளர் அவர்களும், அதேபோல ஆதி திராவிடர் நலத் துறையினுடைய செயலாளர் அவர்களும், மத்தியிலே இருக்கின்ற வேலைவாய்ப்புத் துறையினுடைய செயலாளர் அவர்களும், மூவருமாக ஒன்று சேர்ந்து, நல்லதொரு திட்டத்தினை உருவாக்க வேண்டும். குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்டத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால்கூட, அந்த மாவட்டத்திலே எத்தனை பேர் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கின்றார்கள், ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்கின்ற புள்ளிவிவரக் கணக்கு எடுத்தால், நிச்சயமாக நல்லதொரு எதிர்காலம் உருவாகும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, வீட்டுமனைப் பட்டாவுக்குரிய அந்த நிலங்களை நாம் கையகப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யக்கூடிய தொகை மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, தற்போது ஆதி திராவிடர் நலத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் பின்தங்கிய சமுதாயத்தினுடைய, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினுடைய பணியாளர்களாக அந்தப் பணிகளைச் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றார்களே தவிர, இந்த ஆதி திராவிடர் நலத் துறையினுடைய பணிகள் இன்றைக்குக் குறைந்துபோய் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் அங்கே வேலையில்லாமல் இருப்பதற்கு இந்த வேலையாவது பார்க்கட்டும் என்று சொல்லி—கல்வியினுடைய உதவித் தொகை—அதை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆதி திராவிடர் மக்களுடைய மேம்பாட்டிற்காக நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரிகள், அவர்களுக்கு குறைகளிருக்கின்ற காரணத்தினால் அவற்றை நிறைவு செய்து, இந்தத் துறையின்மூலமாக அவர்கள் இந்த மக்களுக்குச் சேவை செய்வதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன், தமிழகத்திலே 30 மாவட்டங்கள் இருக்கின்றன. இந்த 30 மாவட்டங்களிலே குறைந்தபட்சம் 6 மாவட்டத்திற்காவது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்றைக்கு எத்தனை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கின்றார்களா! அப்படி இருக்கின்றார்கள்? 6 பேர் இருக்கின்றார்களா? அப்படி இல்லையென்றால், கணக்குக்காக பாஷை புரியாத எவரையாவது அங்கே டெல்லி, அரியானா, ஒருத்தரைக் கொண்டு வந்து.

இராஜஸ்தானிலிருந்து வருவார்கள். அவர்களுக்குப் பாஷை தெரியாது. தமிழிலே பேசிக்கொண்டு இருப்பவர்கள் இவர்கள்; தமிழிலே ஏதாவது சொன்னால், அவர் என்ன புரிந்துகொள்கிறாரோ தெரியாது. அதுபோன்ற நிலையிலே இருக்கின்றவர்கள் ஒன்றிரண்டு பேர் இருக்கலாமே தவிர, நிச்சயமாக ஆதி திராவிட மக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களாக 30 மாவட்டத்திற்கு 6 பேராவது இருக்கவேண்டும். இருக்கிறாரா என்று தெரியவில்லை. இல்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்.

அதேபோல, அதிகாரிகளுக்கு நீங்கள் promotion கொடுக்கின்றபோது அவர்களுடைய இரகசியக் கோப்புகளைப் பரிசீலிக்க வேண்டும். ஓர் அதிகாரி மற்றோர் அதிகாரியின்கீழ் பல ஆண்டுகள் பணி செய்தால், அவர் பாராட்டிவிட்டுப் போவார். ஓர் அதிகாரி, பல அதிகாரிகளிடத்திலே பணி செய்து, பலருடைய பாராட்டுதல்களைப் பெறுகின்றவர் யாரோ அவருக்குப் பணி உயர்வு கொடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டத்திற்குமுன் அனைவரும் சமம். அப்படியென்றால் சம வாய்ப்புகள் தரப்பட வேண்டும். பதவியிலும் சரி, பதவி உயர்வுகளிலும் சரி, தாழ்த்தப்பட்டவர்கள் இன்றைக்கும் தாழ்த்தப்பட்டவர்களாகவேதான் இருக்கின்றார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன். அதேபோல, நம்முடைய அமைச்சர், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் இருக்கின்றார், அவர் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம்; ஏனென்றால், எங்களுக்கு 72 சமுதாயம் இருக்கின்றது. 72 சமுதாயத்தையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், முக்கியமாக இருக்கின்ற அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆதி திராவிடர் நலத் துறைக்கு அமைச்சர் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னால், செயலாளர் வேறு ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அதேபோல இயக்குநர் மற்றொரு சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அதேபோல தாட்கோவினுடைய Chairman-ஆக இருக்கின்றவர் வேறு ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான், எல்லாச் சமுதாயத்தைச் சேர்ந்த எங்களுடைய சமுதாயத்து மக்களுக்கு நிச்சயமாக நல்லதொரு எடுத்துக்காட்டாக அவர்களாலே செய்ய முடியும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) சமுதாயப் பிரிவுகள்தான். 72 சாதிப் பிரிவுகள் இருக்கின்றன. ஆதலால் பிரிவுகள். ஆதி திராவிட சமுதாயத்தில் இருக்கிற பிரிவுகள் 72.



*முற்பகல் 11-45*

நான் இப்போது குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தலைமையாக முதல்வர் அவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குச் செயலாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களிலே ஒருவர்கூட ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இல்லை என்று நான் நினைக்கின்றேன். அதேபோல தலைமைச் செயலாளர். மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னாலே இருந்தபோது, எங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைமைச் செயலாளராக நியமித்தார். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், இப்போது மிகப் பெரிய பொறுப்புகள் இருக்கின்றன. தலைமைச் செயலாளர் இல்லையென்று சொன்னால், உள் துறைச் செயலாளர்; உள் துறைச் இல்லையென்று சொன்னால், பொதுத் துறையைச் சேர்ந்த செயலாளர் இல்லையென்று சொன்னால், மிக உயர்ந்த செயலாளர்; அவர் இல்லையென்று சொன்னால், மிக உயர்ந்த செயலாளர்கள் பொறுப்புகளிலே ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கிட வில்லை. எனக்குத் தெரிந்த வரையிலும், நான் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்கின்ற முறையிலே, உள்ளாட்சித் துறையிலே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அனைத்து அலுவலர்களையும், செயலாளர், Additional Secretary, Joint Secretary, இயக்குநர் எல்லா பதவிகளையுமே நம்முடைய சமுதாயத்திற்கு வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குத் தெரிந்ததை நான் சொன்னேன்.

**திருமதி டி. யசோதா:** நான் உள்ளாட்சித் துறையைப் பற்றிச் சொல்லவில்லை. உள் துறையைப் பற்றிச் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் இல்லையென்று சொல்லவில்லையே!

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** உள்ளாட்சித் துறையும் மிகப் பெரிய துறைதான்.

**திருமதி டி. யசோதா:** நான் இல்லையென்று சொல்லவில்லையே! நான் கேட்க விரும்புவது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை என்பதே ஒரு பெரிய துறை.

ஊராட்சி மன்றத் தலைவர்களிலேயிருந்து ஆரம்பித்து, Corporation வரைக்கும் இருக்கிறதுதான் மொத்தமே, நாடே. அது ஒரு பெரிய துறை. அந்தத் துறைக்கு இருக்கிற செயலாளரே நம்முடைய ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர் என்பதை அம்மையார் தெரிந்துகொள்வதற்காக நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு information–தான். வேறு ஒன்றும் இல்லை.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைச் சொல்லவில்லை. உள்ளாட்சித் துறை என்பதே, தமிழ்நாடே உள்ளாட்சித் துறையிலேதான் இருக்கிறது. அதை இல்லையென்று சொல்ல முடியாது. அது மொத்தமே, தமிழ்நாடு மொத்தமே உள்ளாட்சித் துறையிலேதான் இருக்கிறது, நான் மறுக்கவில்லை. ஆனாலும்கூட, நான் கேட்பது, இந்த உள் துறை, இந்தப் பொதுத் துறை, இந்தத் தலைமைச் செயலாளர் இதுபோன்ற பொறுப்புகளிலே நீங்கள் ஆதி திராவிடர்களை நியமிக்க நிச்சயமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தாட்கோவிலிருந்து பரிந்துரைகள்; பரிந்துரைகள் தாட்கோ மூலமாகச் செய்யப்பட்டு, வங்கிகளுக்கு வருகின்றன. ஆனால், வங்கிக்காரர்கள் பணம் கொடுக்கிறார்களா? கொடுப்பதில்லை. ஏன் கொடுப்பதில்லை? கொடுத்தால் திரும்பி வருவதில்லை. அதனாலே மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும், அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், வங்கியினுடைய அதிகாரிகளும் கடன் வாங்குகின்றவர்களும் ஒரு குழுவாக உட்கார்ந்து பேசி, அந்தக் கடனைக் கொடுப்பதற்கும், அதனைத் திரும்பச் செலுத்துவதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிந்து, தாட்கோவினுடைய உதவி, மக்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகை காண வேண்டும். அப்படி முடியவில்லையென்று சொன்னால், நம்முடைய தாட்கோவே பணத்தை நேரடியாகவே கொடுத்துவிட்டு, வாங்குவதற்குரிய ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தாட்கோவிலே கடன் வாங்குவதற்கு, நிதி உதவி பெறுவதற்கான அந்த முறையிலே, நிரம்ப கடுமையான ஷரத்துக்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றை எளிமையாக்க வேண்டும். அதேபோல, தாட்கோ அலுவலகத்திற்கு வருகின்ற அந்த ஆதி திராவிட மக்களை அன்போடு, இனிய முகத்தோடு வரவேற்று, அவர்களிடம்



பேசி, இல்லையென்றாலும்கூட, இல்லை என்பதை இனிய முகத்தோடு சொல்லி அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அகில இந்திய ரீதியிலே Backward Classes Commission இருக்கிறது. தமிழ்நாட்டிலேயும் Backward Classes Commission இருக்கிறது. ஆனால், S.C., S.T. Commission அகில இந்திய ரீதியிலே இருக்கிறது. தமிழ்நாட்டிலே இல்லை. ஏன்? அந்த நிலையை நீங்கள் இன்னும் சரிபார்க்காமல் இருப்பது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. நிச்சயமாக எங்களுக்கு S.C., S.T. Commission தமிழ்நாட்டிலே உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தக் கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம் (குறுக்கீடு) அதை மாற்றுவதாக நான் அறிகிறேன். பின்னாலேயிருந்து எங்களுடைய தலைவர்கூட சொல்லுகிறார் "மாற்றப்போகிறார்கள்" என்று. அதை மாற்றவே கூடாது. அதை ஏன் மாற்றக்கூடாது என்று சொன்னால், சர்வ வல்லமை பொருந்திய ஓர் அரசாங்கத்திற்கு ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு குடிமகன் ஒரு பஞ்சாயத்துத் தலைவராக வருவதற்கு இங்கே வாய்ப்பில்லை என்று சொன்னால், வேறு யாராலே அதைக் கொடுக்க முடியும் என்று நான் கேட்கிறேன். ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் நீங்கள் அர்ச்சகர் ஆக்கியிருக்கின்றீர்கள். உங்களைப் பாராட்டுகின்றோம். உங்களுக்காக நாங்கள் எந்தவிதமான தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறோம். இது ஒரு தவறான முன்னுதாரணம். ஓர் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த அந்த ஒதுக்கீட்டினை நீங்கள் மாற்றுவீர்கள் என்று சொன்னால், நாளைக்குத் தமிழகம் முழுமையும் இருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்களை மாற்றுங்கள் என்று சொன்னால், நாமே மதகைத் திறந்துவிட்டு, வெள்ளத்தைத் வரவழைப்பதற்குச் சமமாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். இங்கே இல்லாத ஜாதித் தலைவர்களா? இங்கே இல்லாத கட்சித் தலைவர்களா? அந்த ஊரிலே இருக்கிறவர்கள் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள், எல்லா ஜாதித் தலைவர்களும் இருப்பார்கள். இருப்பார்கள். எல்லா ஜாதித் தலைவர்களும் இருப்பார்கள் - நான் குறிப்பாகச் சொல்கின்றேன் - எப்படியேனும் அந்த மக்களை - நான் குறிப்பாகச் சொல்கின்றேன் - இன்னும் ஒரு Ordinance போட்டாவது கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், பாப்பாப்பட்டி போன்ற ஊர்களுக்குப் பஞ்சாயத்துகளை மாற்றாமல், நீங்கள் தேர்தலை நடத்தி, அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் வெற்றி பெற்றால் என்ன பண்ணுவார்? இராஜினாமா பண்ணுவார். இராஜினாமாவை ஒப்புக்கொள்ளாதீர்கள். இராஜினாமாவை ஒப்புக்கொள்ள முடியாது என்று தள்ளி வையுங்கள். அதுபோன்ற

ஒரு நிலைமையை, நீங்கள் நிச்சயமாக ஏற்கக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

அதேபோல, எல்லாச் சமுதாய மக்களையும் அர்ச்சகராக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். குறிப்பாக, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இந்த மண்ணில், தியாக வாழ்வே தேசிய வாழ்வு என்று சொன்ன அய்யா முத்துராமலிங்கத் தேவர், பெரியார், அண்ணா, கலைஞர் பிறந்த இந்த மண்ணில், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பஞ்சாயத்துத் தலைவர் பொறுப்பு ஏற்க முடியாத ஒரு நிலை இருக்கிறது என்று சொன்னால், அது உங்களை விட்டால் அந்த நிலையை மாற்றுவதற்கு வேறு யாரும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

இரண்டு tumbler முறை தற்போதும் பல பகுதிகளில் இருப்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். Collector (மணியடிக்கப்பெற்றது) இருங்கள், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடம் ஆகிவிட்டது.

**திருமதி டி. யசோதா:** Collector, D.R.O., R.D.O., Tahsildar, Police போன்றவர்களைப் பொறுப்பேற்கச் சொல்லி, இந்த இரட்டை tumbler முறையை ஒழிக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதி திராவிட அதிகாரிகளுக்கு முக்கிய பதவிகள் கொடுக்கப்பட வேண்டும். S.C.,S.T., மக்களுக்கு நிலுவையிலுள்ள பதவிகளை, காலியாக உள்ள பதவிகளை, 1998 ல் G.O. 44 மூலம் நிறைவு செய்ய வேண்டுமென்று அரசாணை கொண்டுவந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். ஆனால் என்ன காரணத்தினாலோ G.O. 33 மூலம் அந்த G.O. 44-ஐ நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. நான் இன்றைக்கும் சொல்கின்றேன். 11-5-2000-ல் தமிழ்நாடு அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் 17,567 காலியிடங்கள் S.C.,S.T., மக்களால் நிரப்பப்படாமல் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. Group A - 493, Group B - 4,304, Group C - 12,063, Group D - 707, ஆக 17,567 பணியிடங்கள் இன்றைக்கும் காலியாக இருக்கின்றன. உடனடியாக அந்த G.O. 33-ஐத் திரும்பப்பெற்று, அந்தப் பணியிடங்களை



நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். உயர் நீதிமன்ற உத்தரவின்படி W.P.No. 16087/1999 மற்றும் W.M.P.No. 23628/99 ஐந்தாண்டுகளுக்குள் இந்தக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற உத்தரவு இப்போது கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை உடனடியாக நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Parliament Consultative Committee, நீதித் துறையில், இந்த ஆதி திராவிட மக்களுக்கும், tribal மக்களுக்கும் சரியான பிரதிநிதித்துவம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இது உடனடியாகக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளது. மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம், Supreme Court இன்னும் இருக்கும் பல நீதிமன்றங்களிலேயும் இந்தக் குறை தீர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, University Grants Commission மூலம் நம் University-களுக்கு அறிவிக்கப்பட்ட அந்த S.C.,S.T., பொறுப்புகள் இன்றையவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இப்போது தமிழகத்திலே உள்ள University-களிலே எத்தனை Vice Chancellor-கள் இருக்கிறார்கள், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்? சொல்ல முடியுமா? அதேபோல, எத்தனை Principal-கள் இருக்கிறார்கள்? எத்தனை விரிவுரையாளர்கள் இருக்கிறார்கள்? இதுபோன்ற நான்காம் தர பணியாளர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் இப்போது கணக்கிட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்றோம். அதேபோல, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கின்றபோது, கோயம்புத்தூர் முதலிபாளையம் என்ற பகுதியிலேயும், ஈரோட்டிலேயும் ஆதி திராவிடர்களைத் தொழில் முனைவர்களாக ஆக்குவதற்காக மிகப் பெரிய shed-கள் கட்டப்பட்டன. அந்த shed-கள் இன்றையவரையிலும் உபயோகப்படுத்தப்படாமல், அந்த ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்படாமல், இப்போது பாழடைந்து கிடக்கின்றன. மீண்டும் பரிசீலித்து, நன்றாக அவற்றைச் சரிப்படுத்தி, ஆதி திராவிட மக்களுக்கு, அந்தப் பயனாளிகளுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

அதேபோல, சமீபத்திலே வந்த சமத்துவபுரங்களைப் பழுதுபார்ப்பதற்காக 6,000 ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். அந்த 6,000

ரூபாய் ஒரு வீட்டைப் பழுதுபார்ப்பதற்குப் போதாது. அதனாலே, அங்கே என்ன சொல்கிறார்கள் என்றால், வீடடுக்குச் சொந்தக்காரர்களையே நீங்கள் கொஞ்சம் கல், மண், சிமெண்ட் கொண்டு வாருங்கள் நாங்கள் அதை எல்லாம் பார்த்துப் பண்ண முடியும் என்கிறார்கள். அதை, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களுக்குத்தான் கலைஞர் கொடுத்தார். வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களைப் போய், நீங்கள் கல் கொண்டு வாருங்கள், மண் கொண்டு வாருங்கள், சுண்ணாம்பு கொண்டு வாருங்கள் என்றால், அவர்கள் எங்கேயிருந்து கொண்டுவருவார்கள்? அதைவிட, அந்த 6000 ரூபாயைவிட, கொஞ்சம் அதிகமாக அவர்களுக்குக் கூட்டிக் கொடுத்து, அந்த வீட்டிற்குச் சொந்தக்காரர்களையே அந்தப் பணிகளைச் செய்வதற்குரிய வழிவகையைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நான் போனமுறையே கேட்டேன்: அரசாங்கம் எடுத்துக்கொள்கின்ற ஆதி திராவிடர் பள்ளிகளுக்கு, அந்த மாணவர்களுக்கு சாப்பாட்டிற்கென 300 ரூபாய் கொடுக்கிறீர்கள்; உங்களுடைய அங்கீகாரம் பெற்று நடத்துகிற தனியாருடைய பள்ளிகளுக்கு அதே சாப்பாட்டிற்கு 200 ரூபாய் கொடுக்கிறீர்கள்; அதை 300 ரூபாயாக மாற்றுங்கள் என்று நான் அப்போது கேட்டேன். அதை இப்பொழுது, கேட்காமலேயே கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக இன்றைக்குப் பாராட்டுத் தெரிவிக்க என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, அவர்களுக்கு இன்னும் Government Hostel-க்குக் கொடுக்கிறமாதிரி மாதா மாதம் Barber-க்கு, Dhobi-க்கு, Toilet charges என்றும், பிறகு, இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை பாய், ஆண்டுக்கு இரண்டு சீருடை, பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்குச் சிறப்புக் கையேடுகள், Atlas, Dictionary இவையெல்லாம்—Government Hostel-க்கு கொடுக்கிறீர்கள்—Government அங்கீகாரம் பெற்ற அந்த Hostel-களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றே ஒன்று சொல்லி நான் விடைபெறலாம் என்று நினைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றைக்கு எல்லாத் தொழிற்சாலைகளையும் உங்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள்.



**திருமதி டி. யசோதா:** கடைசியாக ஒன்றே ஒன்று பேசிவிடுகிறேன். என்னுடைய தொகுதியிலே, குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் சிக்கராயபுரம் கொள்ளச்சேரி என்கின்ற ஊர். அந்தக் கொள்ளச்சேரி என்கிற அந்த ஊரிலே 1957-லே ஆதி திராவிடர் கல் உடைக்கும் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டது. அதை ஏற்படுத்தியவர், மாண்புமிகு மறைந்த எங்கள் தலைவர் கக்கன்ஜி அவர்கள். அதைத் திறந்து வைத்தவர், அன்று முதல்வராக இருந்த எங்கள் மக்கள் தலைவர் அன்புத் தலைவர், காமராஜ் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அவர்கள் இரண்டுபேரும் சேர்ந்து அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கி, அவர்களுக்கு ஒப்பந்த ரீதியிலே, அங்கே கல் உடைக்கின்ற ஓர் இடத்தை கொடுத்தார்கள். அது கடந்த ஆண்டுகளிலே, 1957-லேயிருந்து 1995 வரைக்கும் நடந்தது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்திலே முடிக்கிறேன். கடைசியாக, 1995-க்குப் பிறகு, அந்த ஒப்பந்தத்தை அரசாங்கம் இரத்து செய்துவிட்டது. ஆக, அந்த மக்கள் இப்போது மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கல் குவாரியை நீங்கள் திரும்பவும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கலெக்டராக திரு. இராஜாராம் அவர்கள் இருந்தபோது, அதைப் பரிந்துரை செய்து எழுதியிருக்கிறார்கள். அதுபோல, இந்த இடத்தை இனிமேல் மேய்ச்சல் புறம்போக்கு என்று சொல்லமுடியாது. அது மேய்ச்சல் புறம்போக்கு என்று 1911-லே இருந்தது. அப்படி இருந்தபோதுதான் 1957-லே அவர்களுக்குக் கல் குவாரி நடத்துவதற்கு உரிமம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, 1911-லிலே இருந்த அந்த நிலையை மாற்றி 1957-லிலே கொடுத்ததற்குப் பிறகு, 1995-லே நீங்கள் அதைத் தடைச் செய்த காரணத்தினாலே, இன்றைக்குத் திருட்டுத்தனமாகக் கல் குவாரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்காகவும், அந்த ஆதி திராவிட மக்களுக்கு ஒப்பந்த ரீதியிலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அந்தக் கல் குவாரியை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். Jaihind.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.



227431

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதற்கேற்ப, என்னைப் பெற்று ஆளாக்கிய, எனது அருமைப் பெற்றோர்களாம், எனது தந்தை திரு. துருவன் அவர்களுக்கும், என்னுடைய தாய் திருமதி பாப்பாத்தி அம்மாள் அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் இரண்டறக்கலந்து, எனக்கு எல்லா வகைகளிலும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கின்ற எனது அருமை துணைவியார் திருமதி கோமதி அவர்களுக்கும் எனது நன்றியை இம்மாமன்றத்தின் மூலமாகக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் மேலே உட்கார்ந்து பார்க்கிறார்கள், அதற்காகச் சொல்கிறார்கள்! (சிரிப்பு) சரி பேசுங்கள்.

*நண்பகல் 12-00*

**திரு. டி. மூர்த்தி:** ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, சிறப்புப் பெற்ற இந்த மாமன்றத்தில், திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக ஆக்கியவரும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு விடிவெள்ளியாய்த் தோன்றி, இச்சமுதாயத்தின் நலனுக்காகத் தன்னுடைய ஓயா உழைப்பால், தியாகத்தால், போராட்டத்தால் சமுதாயப் புரட்சி செய்து அதில் வெற்றியும் பெற்று, வாழும் பெரியாராய், டாக்டர் அம்பேத்கர் வழிநடந்து, தமிழன் இழந்த உரிமைகளையெல்லாம் மீட்ட பெருமைக்குரிய தமிழின உரிமைக் காவலர், மனித நேயப் பற்றாளர், சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, வான்போற்றும் வள்ளுவனுக்கு, நீங்கா நினைவிடமாய்க் கோட்டம் அமைத்து, பாகாய், பழரசமாய், தேனாய், தெவிட்டாத இன்சுவையாய், பைந்தமிழுக்கு முடிசூட்ட, தென்றல் நடையில் குறளோவியம் தந்த என்றும் வாழும் தமிழே, வீழ்ந்திட்ட சமுதாயத்தைத் தாங்கிட வந்த தவப் புதல்வரும், முத்தமிழ்க் காவலருமாகிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவத் துறைக்கு மாண்பு சேர்த்து, உலகே வியக்கும்வண்ணம், சாதனைகள் பல படைத்து, உடல்நலக் கேடு விளைவிக்கும்



புகையிலையினையும், புகைப் பிடித்தலையும் ஒழித்ததால், அமெரிக்காவின் உயரிய விருதான "Luther L. Terry" விருது பெற்ற, மருத்துவ நாயகனாம், மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாழையடி வாழையாக, தந்தைக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்து, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின்போது, அனைத்துத் தொகுதிகளிலும் ஓடோடி உழைத்து, குறிப்பாக, என் தொகுதியில் மட்டும் 9 இடங்களில் பிரசாரம் செய்து, "உங்கள் வீட்டு மகனாக வந்து கேட்கிறேன்; கலைஞரின் மகனாக வந்து கேட்கிறேன்; இந்த மூர்த்தியை மாம்பழச் சின்னத்தில் வெற்றிபெறச் செய்யுங்கள்" என்று அவர் ஆற்றிய உரை, இன்றும் என் நினைவில் நிற்கிறது. அந்த அளவிற்குக் கூட்டணிக் கட்சிகளின் பேரன்பையும், மதிப்பையும் பெற்ற அன்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் தளபதி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகச் சட்டமன்றத்திற்கு என் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும், சொல்லாற்றலும், செயலாற்றலும் மிகுந்த, எளிமையும், இனிமையும் கொண்டு விளங்கும், தியாகச் செம்மல், ஓய்வறியா உழைப்பாளி, மாண்புமிகு தலைவர் மரியாதைக்குரிய திரு. கோ.க. மணி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரயில்வே துறை இருக்கும்வரை இவர் பெயர் இருக்கும்; அந்த அளவிற்கு அரிய சாதனைகளைப் படைத்து, இரயில் நிலையங்களில் எல்லாம், பளிங்குக் கற்களால் நடைமேடைகள், கிரானைட் இருக்கைகள், தொலைபேசி வசதிகள், விசிறிகள், குடிநீர் வசதிகள் முதலியன அமைத்து, மக்கள் உள்ளங்களில் நீங்கா இடம்பெற்றிருக்கும், முன்னாள் இரயில்வே இணை அமைச்சரும், இந்நாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாசமிகு அண்ணன் மாண்புமிகு திரு. ஏ.கே. மூர்த்தி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தலின்போது, தான் மட்டும் வெற்றி பெற்றால் போதாதென்று, தன்னை நம்பி வந்தவர்களையும் வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்று, கடும் முயற்சியுடன் ஓயாது உழைத்த, இரண்டாம் முறையும் வெற்றிக் கனியைப் பறித்து, ஆறுமுகனைத் தோற்கடித்த ஆறுமுகனாராகிய திருக்கச்சூரார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Subject-க்கு வந்துவிடுங்கள்.

**திரு. டி. மூர்த்தி:** காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிறுத்தப்பட்ட, கூட்டணிக் கட்சிகளின் ஒன்பது வேட்பாளர்களையும், 100 சதவிகிதத்தில் வெற்றி பெறச் செய்த, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், பாசமிகு அண்ணன், திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தேசியத் தலைவர், தியாக உருவில் அன்னை தெரசாவாக வாழும், அன்னை சோனியா அம்மையார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவுடைமைக் காவலர்களான C.P.M. தலைவர் திரு. ஆர். நல்லக்கண்ணு மற்றும் C.P.I. தலைவர், தலைவர் திரு. வரதராஜன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட, நமது கூட்டணியில் அங்கம் வகிக்கும், புரட்சி பாரதம் தலைவர், அன்புச் சகோதரர் திரு. ஜெகன் மூர்த்தி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை இந்த மாமன்றத்தில் பேச அனுப்பி வைத்த தொகுதி மக்களாகிய, திருப்போரூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைச் சொல்லி, எனது கன்னிப் பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

தமிழக அரசின் 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், ஆதி திராவிட மக்களின் கல்வி முன்னேற்றத்தை உயர்த்தவும், தரமான கல்வியைக் கொடுக்கவும், மாணவர்கள் தங்கும் விடுதியின் பராமரிப்பிற்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்தமைக்கும், கழக ஆட்சியில் கை ரிக்‌ஷாவை ஒழித்து, சைக்கிள் ரிக்‌ஷா வழங்கியதுபோல, மனிதக் கழிவைக் கையால் அள்ளும் பணியைச் செய்துவந்த 11,001 நபர்களுக்கு, வேறு பணிக்குப் பயிற்சியளிக்க, ரூ.50 கோடி அளித்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகத்தின் அடித்தட்டிலே உழன்று கொண்டிருக்கின்ற ஆதி திராவிட மக்கள் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறை நலிவடைந்த நிலையிலே உள்ளது. இம்மக்கள் வாழ்வு முன்னேறாமல்,



தமிழ்நாடு முன்னேறியதாகக் கூற முடியாது. இவர்கள் மேம்பாட்டிற்கு அரசு, நலத் திட்டங்களை வழங்கிய போதிலும், இன்னும் வாழ்க்கை மேம்படவில்லை. எனவே, சிறப்புக் கூறுத் திட்டங்களோடு, மேலும் கூடுதலான திட்டங்களை அறிவிக்க வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–05

அதேபோன்று, தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற, கல்வி, வேலைவாய்ப்பு மட்டும் அல்லாமல் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி முதலான அனைத்திலும் முன்னுரிமை என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

தாட்கோ நிறுவனத்தின்மூலம் அளிக்கப்படும் கடனுதவிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் அளிக்கப்படுகின்றன. அதனால், கிராமத்திலுள்ள பெண்கள் பயன் அடைகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அதேநேரத்தில் கிராமத்திலுள்ள வேலையில்லாத ஆண் பெண்கள், தனியாக சுய தொழில் செய்துகொள்ள சிறு கடன்கள் கிடைப்பது அவசியமாகிறது. எனவே, தாட்கோ நிறுவனத்தின்மூலம் தனி நபர்களுக்கு மானியக் கடன் அளித்து உதவிட வழிவகை செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளிலுள்ள ஆதி திராவிட மக்கள் தங்களது பிள்ளைகளுக்கு நகரப் பகுதிகளிலும் திருமணம் செய்ய, சமுதாயக் கூடம் கிடைக்காமல் அல்லலுறும் நிலைமை உள்ளது. பொருளாதார ரீதியிலும் அதிக அளவில் செலவு செய்து சத்திரங்களில், திருமண மண்டபங்களில் திருமணம் செய்ய இயலாத நிலையில் சிரமப்படுகின்றனர். எனவே, கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்கள் குறைந்த செலவில் நகரத்தில் சமுதாயக் கூடத்திலும் திருமணம் செய்ய ஏதுவாக ஒவ்வொரு கிராமத்திலும் சமுதாயக் கூடம் கட்டித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டப் படிப்பிற்கு ரூ. 6,500/-ம், பட்ட மேற்படிப்பிற்கு மற்றும் தொழில் படிப்பிற்கு ரூ.7,500/-ம் மானியமாக வழங்கப்படுகிறது. இதை அரசு உயர்த்தித் தர வேண்டும். மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.30,000/- மானியமாக வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை பெற, ஆண்டு வருமான வரம்பை

அறவே நீக்க வேண்டும். கூட்டுறவு வங்கியில் விவசாய மக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையைத் தள்ளுபடி செய்ததுபோல, தாட்கோவில் ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகையையும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிடர் நல விடுதிகளில், மாணவர்கள் சேர்க்கையை அதிகப்படுத்துவதோடு நல விடுதிகளையும் கூடுதல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையினை இன்னும் அதிகப்படுத்துவதோடு, கல்வி ஆண்டின் ஆரம்பத்திலேயே அதனை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அலுவலகங்கள், கல்வி நிலையங்களில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு உரிய பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன. முறைப்படி அவற்றை நிரப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். கடந்த அண்ணா திமுக ஆட்சியில் பல வருடங்களாக, தாழ்த்தப்பட்ட மக்களின் backlog vacancy நிரப்பப்படாமல் உள்ளது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கையின்படி SC/ST vacancy-களை உடனுக்குடன் Special Recruitment Board Exam நடத்தி விரைவுபடுத்த வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் உள்ள ஒருசில முக்கியமான கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய விரும்புகின்றேன். கலைஞர் ஆட்சிக்கு வந்தாலே பாலம் கட்டி வரலாறு படைப்பார். அந்த வரலாற்று நாயகன் ஆட்சி செய்யும் காலத்தில் எனது திருப்போரூர் தொகுதியில் உள்ள நெமிலி முதல் திருப்போரூர் வரை பக்கிங்காம் கால்வாய்மீது பாலம் கட்டி எனக்கும் ஒரு வரலாறு படைக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூரை மையமாகக் கொண்டு திருப்போரூர் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன் திருப்போரூர் தொகுதியில் தொழிற்சாலை நிறைந்த அந்தப் பகுதியில், இதுவரை தீயணைப்பு நிலையம் இல்லை. இதனால் பொது மக்களுக்கும் தொழிற்சாலைக்கும் தீ விபத்தினால் உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஏற்படுகிறது. இதனைப் போக்க தீயணைப்பு நிலையம் ஒன்று அமைத்துத் தரும்படி தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது)



திருப்போரூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தரம் இழந்து காணப்படுகிறது. எனவே, தரம் உயர்த்தி 24 மணி நேரமும் செயல்படும்படியும், சுகாதார நிலையத்திற்கு ஆம்புலன்ஸ் வண்டியும் வழங்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை-கேளம்பாக்கம் வரை இயக்கப்படும் சென்னை மாநகரப் பேருந்தை திருப்போரூர் வரை நீட்டித்துத் தரும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று கலைஞரால் உருவாக்கப்பட்ட மறைமலை நகருக்குச் சென்னை மாநகரப் பேருந்தை நீட்டித்துத் தரும்படி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் பகுதியானது பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. இந்தப் பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் குண்டும் குழியுமாகவும், செப்பனிடப்படாமலும் உள்ளன. எனவே, மறைமலை நகர்ப் பகுதியில் உள்ள முக்கியமான சாலைகளை, கம்பிகட்டி cement சாலைகளாக அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மறைமலை நகரில் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நகராட்சிமூலம் வழங்கப்படும் பாலாற்றுக் குடிநீர், செம்மண் நிறத்தில் வருகிறது. Colour-ஆக வரும் இந்தக் குடிநீரை, சுத்திகரிப்பு செய்ய சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுகாதாரமான குடிநீர் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, drainage தண்ணீரைச் சுத்திகரிப்பு செய்யாமல் அருகில் உள்ள நின்னகரை ஏரியில் மோட்டார்மூலம் இறைத்து விடுகின்றனர். அதையும் சுத்திகரிப்பு செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) வேகமாகப் பேசிவிடுகிறேன். கொஞ்சம் நேரம் தாருங்கள்.

எனது தொகுதியின் முக்கிய சாலையான நெல்லிக்குப்பம்-கொட்டமேடு சாலையை அகலப்படுத்தித் தரமான தார்ச்சாலை அமைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

குண்ணப்பட்டு-காரணை சாலையைத் தார்ச்சாலையாக அமைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். குண்ணப்பட்டு-ஆமூர் இடையே சிறு பாலம் கட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். செட்டிபுண்ணியம்-வடகால் இடையே பாலம் கட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். சிங்கப்பெருமாள்கோயில்-அனுமந்தபுரம் வழியாக ரெட்டிக்குப்பம் வரை தார்ச்சாலை அமைத்துத் தரக்

கேட்டுக்கொள்கிறேன். திருப்போரூர்-செங்கல்பட்டு செல்லும் சாலையில், வெங்கூர் முதல் கொண்டங்கி வரை செல்லும் சாலையைத் தார்ச்சாலையாகத் தரமாக அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மறைமலைநகர் நகராட்சிப் பகுதிக்குப் புதிய பஸ் நிலையம் அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திருப்போரூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி, அதில் வணிக வளாகம் அமைத்துத்தரக் கேட்டுக்கொள்கிறேன். திருப்போரூர்-செங்கல்பட்டு இடையே சுமார் 27 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதனை அகலப்படுத்தி, சாலை அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக, ஒரு தாழ்மையான வேண்டுகோள். ஏனென்றால், மக்களெல்லாம் கொதித்திருக்கிறார்கள். அது தொடர்பாக ஒரு சின்ன விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எழுதிக் கொடுத்துவிட்டால், அமைச்சர் செய்து கொடுத்துவிடுவார்.

**திரு. டி. மூர்த்தி:** எனது திருப்போரூர் தொகுதியில் உள்ள, 11 கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களை எடுத்து, அந்த நிலத்தில் சென்னை துணை நகரம் — Satellite City — அமைக்கவிருக்கும் திட்டத்தினால், பொதுமக்கள் மட்டுமல்லாது, விவசாயப் பெருங்குடி மக்களும் பெரிதும் பாதிப்பிற்குள்ளாவர். ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடுகின்ற நமது கலைஞரின் அரசு, மேற்படி திட்டம் பற்றி, பொதுமக்களின் பயத்தினை நீக்க, அரசு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மகேந்திரன், நீங்கள் நான்காவது, ஐந்தாவது முறையாகப் பேசுகிறீர்கள் என நினைக்கிறேன். ஆகையினாலே, ஒரு ஐந்து நிமிடங்களிலே பேசி முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** அப்படியென்றால் நான் பேசவேயில்லை. உட்காருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருவது என்பது உங்கள் இஷ்டம். நான் காலத்தின் அருமை கருதித்தான், அவையை நடத்த முடியும். உங்களுக்குப் பேச நிறைய வாய்ப்பு இருக்கிறது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 19 சதவிகிதம் வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களது நியாயமான கோரிக்கைகளைப் பேசுவதற்கு ஐந்து நிமிடம் என்பது பொருத்தமானதாக இருக்க முடியாது. அனைவருக்கும் வழங்கியதுபோல, 10 நிமிடங்கள் வழங்குங்கள், போதும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

***திரு. கே. மகேந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திலே கலந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கிய, 10 நிமிடங்கள் வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வைத்திருக்கக்கூடிய கொள்கைக் குறிப்பில், தாழ்த்தப்பட்ட மக்கள், பொருளாதார ரீதியாக ஏற்பட்டிருக்கக்கூடிய நலிவு மற்றும் தரமான கல்வியின்மை காரணமாக, முன்னேற்றம் அடையாமல் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை, பொதுவாக பொது எழுத்தறிவு என்பது 73.45 சதவிகிதமாக இருக்கிறது. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்தவரை, அது 63.19 சதவிகிதமாகவும், பழங்குடியினரைப் பொறுத்தவரை, 41.53 சதவிகிதமாகவும் இருக்கிறது. தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் எழுத்தறிவைப் பெறுவதற்கு, பொது எழுத்தறிவு விகிதாச்சாரம் அடைவதற்குச் சிறப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று முதலிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மத்திய அரசு வலியுறுத்தியிருக்கக்கூடிய சிறப்புக் கூறுத் திட்டம், தமிழகத்தைப் பொறுத்தவரை, அனைத்துத் துறைகளிலும் முறையாக அமலாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, கடந்த ஐந்தாண்டுக் காலம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைவிடக் கூடுதலாக ஒதுக்கிய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஐந்தாண்டுக் காலம் ஆதி திராவிடர்

மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட நிதி, முறையாகச் செலவு செய்யப்படவில்லை. இந்தத் துறையில் ஐந்தாண்டுக் காலமும் ஒதுக்கிய நிதி, செலவு செய்யப்படாமல், மீதம் வைத்திருப்பதாகத் தெரிவிக்கும் Auditor General Report, இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரை, ஒதுக்கப்படக்கூடிய நிதி முழுவதும் முறையாக ஆதி திராவிடர் நலனுக்குச் செலவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தரமான கல்வி வேண்டுமென்று நீங்களே வலியுறுத்தியிருக்கிறீர்கள். கல்வி உதவித் தொகையைப் பொறுத்தவரை, இன்றைக்கு U.G. படிக்கக்கூடியவர்களுக்கு ரூ.6,500/-ம், அதேபோன்று P.G., Technical Education-க்கு ரூ.7,000/-ம், Medical Education-க்கு ரூ.7,000/-ம் உதவித் தொகை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த உதவித் தொகை, கூடுதலாக உயர்த்திக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவர் விடுதிகளைப் பொறுத்தவரை, இன்றைக்கும் தமிழகத்திலே 230 விடுதிகள், தனியார் கட்டடங்களிலும், அதேபோன்று, S.T. மாணவர் விடுதிகள், 10 தனியார் கட்டடங்களிலும் இயங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஐந்தாண்டுக் காலத்தில், இந்த 240 விடுதிகளும் சொந்தக் கட்டடங்களிலே இயங்குவதற்கான, போதுமான நிதியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விடுதிகளிலே பயிலக்கூடிய மாணவர்களுக்கு வழங்கக்கூடிய உணவுக் கட்டணம் என்பது, உடனடியாக உயர்த்திக் கொடுக்கப்பட வேண்டும். ஏற்கெனவே இங்கே பேசியவர்களெல்லாம், சிறையிலே இருக்கக்கூடிய கைதிகளுக்குக் கொடுப்பதைவிடக் குறைவான உணவுக் கட்டணம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்த உணவுக் கட்டணத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே, ஒரு விவரம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆதி திராவிட மக்கள் வாழக்கூடிய பகுதிகளுக்குச் சமூக நலக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு, 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புவது, தமிழகத்தில் ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதிகளில், சமூக நலக் கூடங்கள் கட்டுவதற்கு 14 இலட்சம் ரூபாய் என்பது, எந்தவகையிலும்



போதுமானதாக இருக்க முடியாது. இந்த நிதியைப் பல கோடி ரூபாயாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 1998 ஆம் ஆண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்தபோது, பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்கு, அரசாணை எண் 44-ஐக் கொண்டுவந்தார்கள். ஆனால், அந்த அரசாணை, பின்னால் வந்த ஆட்சியாளர்களால் நிறைவேற்றப்படாத காரணத்தினால், இன்றைக்கும் பின்னடைவுப் பணியிடங்கள், நிரப்பப்படாமல் இருக்கின்றன. நிரப்பப்படாமல் இருக்கக்கூடிய பின்னடைவுப் பணியிடங்களை, நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

பிற்பகல் 12-15

அதேபோன்று, தமிழகத்தைப் பொறுத்தவரை இன்றைக்கும் ஆயிரக்கணக்கான கிராமங்களிலே தீண்டாமைக் கொடுமைகள் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இரட்டை tumbler முறை என்பது இருக்கிறது. சுடுகாட்டிற்குச் செல்வதற்குப் பாதை என்பது மறுக்கப்படுகிறது. சுடுகாடு என்பது மறுக்கப்படுகிறது. பல கிராமங்களிலே செருப்பு அணிந்து செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. கோயில்களில் சாமி கும்பிடுவதற்கான அனுமதி என்பதுகூட மறுக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆண் நாய் வளர்ப்பதற்கு மறுப்பு என்று, பல்வேறு வடிவங்களிலே இன்றைக்குத் தீண்டாமைக் கொடுமைகள், தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கின்றன. இந்தத் தீண்டாமைக் கொடுமைகளுக்கு முடிவு கட்டுவதற்கான முயற்சிகளை, தலைவர் கலைஞர் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கண்டதேவியில், தேர் இழுப்பதற்கான அனுமதியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர், அன்புமிக்க தோழர் வரதராஜன் அவர்கள் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேர் இழுப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்தாலும்கூட, கண்டதேவியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் தேர் இழுப்பதற்கான அனுமதி, கடந்தகாலத்திலே வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்படவில்லை. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமூகத்தினுடைய தலைவர்கள் தேர் இழுக்க வாருங்கள் என்று அழைத்து, கைது செய்த நடவடிக்கை என்பதுதான் கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்தது. இந்த ஆண்டு கண்டதேவியினுடைய தேர் இழுப்பில் தாழ்த்தப்பட்ட மக்கள் தேர்

இழுப்பதற்கான அனுமதியை, தமிழக அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் என்ற 4 ஊராட்சிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர்களுக்காக ஒதுக்கப்பட்டது. அந்த 4 ஊராட்சிகளிலும் 10 ஆண்டுக் காலமாகத் தேர்தல் என்பது, நடத்தப்படாமல் இருக்கிறது. இப்பொழுது 10 ஆண்டுகளுக்குப் பின்பு சுழற்சி முறை அமலாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளிலே பல செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் என்ற இந்த 4 ஊராட்சிகளிலும் மீண்டும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், 10 ஆண்டுக் காலத்திற்குத் தலைவர்களாக வருவதற்கான நடவடிக்கையை, தலைவர் கலைஞர் அரசு மேற்கொள்ளவேண்டும். சுழற்சி முறை என்பது எந்தவகையிலும் அங்கே அமலாக்கக்கூடாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதேபோன்று, தாழ்த்தப்பட்டவர்களுக்காக வழங்கப்படக்கூடிய தாட்கோ உதவி என்பது, இப்போது வங்கிகளால் மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை வங்கியினுடைய உயர் அதிகாரிகளை அழைத்துவைத்துப் பேசி அந்த உதவிகள் முறையாக தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைப்பதற்கான முயற்சிகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் என்பது அமலாக்கத்திலே இருந்தாலும்கூட, கொடுக்கக்கூடிய புகார்கள் என்பது, இன்றைக்கு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றனவா என்றால், பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்படக்கூடிய வழக்குகளில்கூட, அரசின் தீருதவி என்பது, கடந்த ஆட்சிக் காலத்தில் முழுமையாகக் கொடுக்கப்பட்டதா என்றால், கொடுக்கப்படவில்லை. உதாரணமாக, 1992-ல் நடைபெற்ற வாச்சாத்தி வழக்கு என்பது, வழக்கு விசாரணை முடிந்து, விவாதமும் நடந்து முடியப்போகிறது. இன்னும் வாச்சாத்தி பழங்குடி மக்களுக்கு, அரசின் தீருதவி என்பது கிடைக்கவில்லை. உடனடியாக அந்த மக்களுக்கு அரசின் தீருதவி கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோன்று, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நரிக்குறவர், ஈரோடு மலையாளி, குறவர் மற்றும் குறும்பா, குறும்பர் இனத்தவர்களை, S.C. பட்டியலில் இணைத்திட, மத்திய அரசிற்குத் தமிழக அரசாங்கம் பரிந்துரை செய்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்பதோடு, இந்த நடவடிக்கைகளை விரைந்து அமலாக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைப்பதோடு, தமிழகத்திலே இருக்கக்கூடிய மலைவேடன் ஜாதியினருக்கு, தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் கடந்த 10 ஆண்டுக் காலமாக இனச் சான்றிதழ் என்பது வழங்கப்படவில்லை. கடந்த 5 ஆண்டுக் காலத்தில் குறும்பா, குறும்பர், மலையாளி போன்ற பழங்குடி மக்களுக்கு இனச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, இந்த இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு உடனடியாக S.T. சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அரசின் சார்பாக நடைபெறக்கூடிய அரசு ஆதி திராவிடர் நல விடுதிகளாக இருந்தாலும் சரி அல்லது பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, இங்கே இருக்கக்கூடிய விடுதிகளுக்கு விண்ணப்பிக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலைப் பகுதிகளில்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம், காலம் என்பதும் முக்கியம்.

**திரு. கே. மகேந்திரன்:** 10 நிமிடம் ஆகவில்லை. மலைப் பகுதிகளில் ஆசிரியர் பணியிடங்களில், ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றாத நிலைமை இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடங்களில் மலைவாழ் இனத்தைச் சேர்ந்தவர்கள், ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

ஆதி திராவிட மக்களுக்கு மாவட்டந்தோறும் 1,000 வீடுகள் என்பது, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் போதாது. கூடுதலான எண்ணிக்கையில் வீடுகள் கட்டுவதற்கும், அதேபோன்று அனைத்துப் பழங்குடியின மக்களுக்கும் இலவச வீடுகள் 5 ஆண்டுகளில் கட்டி முடிப்பதற்கும், நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பழங்குடியினரது நிலங்களைப் பழங்குடியினர் அல்லாதவர்கள் வாங்குவதற்கான தடைச் சட்டம், பல மாநிலங்களில் அமலில் இருக்கிறது. குறிப்பாக, திரிபுரா, அசாம், மற்றும் மேற்கு வங்க மாநிலத்தில் இருப்பதுபோல, இங்கும் ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், பழங்குடியின இளைஞர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) தீயணைப்புத் துறையிலே 27 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, இன்றுவரை அவை நிரப்பப்படாமல் இருக்கின்றன. அந்த 27 இளைஞர்களுக்கு உடனடியாக பணி வழங்குவதற்கான ஆணை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நாகை மாவட்டத்தில் குடிமனைப் பட்டா கோரியிருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) உடனடியாக குடிமனைப் பட்டா வழங்கக் கோருகிறேன். என்னுடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், வெங்கடேசபுரம் ஆதி திராவிட நல ஆரம்பப் பள்ளி, கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக, அதன் கட்டடத்தினுடைய stability சரி இல்லை என்ற காரணத்தினால் வேறொரு பள்ளிக்கூடத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு, 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய ஆதிதிராவிட நலப் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான (மணியடிக்கப்பெற்றது) அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி. நீங்களும் கொஞ்சம் சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

***திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*விடுதலை! விடுதலை! விடுதலை!*
*... இங்கு தீயர்*
*புலைய ருக்கும் விடுதலை!*
*பரவ ரோடு குறவருக்கு*
*மறவ ருக்கும் விடுதலை!*

என்ற மகாகவியின் விடுதலை வேட்கைக்கிணங்க, கல்வியிலும், கலாச்சாரத்திலும், கடைகோடியில் வாழும் நிலையை அனுபவிக்கும் மக்களுக்கு சமூக, சமத்துவ அந்தஸ்து கிடைக்க பல திட்டங்களை வகுத்துள்ள இவ்வரசுக்கும், அதற்கான நிதி ரூ.500 கோடியிலிருந்து ரூ.1,200 கோடியாக உயர்த்தியுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, அந்தத் துறைக்குரிய மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று, கல்விக் கட்டணச் சலுகை மற்றும் பல்வேறு சலுகைகள் மதம் மாறிய கிருத்துவ, முஸ்லீம் அனைவருக்கும் – அனைவரையும் சார்ந்த ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கும் அது கிடைக்கும் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் வரவேற்கிறேன்.

அதேபோன்று பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம் – பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தில் மூன்று முதல் ஐந்தாம் வகுப்புவரையில் கல்வி பயிலும் மாணவிகளுக்கு, ஆதி திராவிட பழங்குடியின மாணவிகளுக்கு 10 மாதங்களுக்குத் தலா மாதம்

ரூ.50/– வழங்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு படிக்கின்ற மாணவிகளுக்கு மாதம் ரூ.100/– வழங்கப்படுகிறது. தமிழகத்தில் இத்திட்டம், 15 மாவட்டங்களில்தான் இருக்கிறது. சென்னையைத் தவிர 15 மாவட்டங்களில்தான் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். எனவே, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற, ஆதி திராவிட பழங்குடியின மக்களின் பெண் குழந்தைகள் அதில் பயன்பெற வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோன்று ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அதேபோன்று விடுதிகள், அவை போதுமான அளவிற்கு அதிகப்படுத்த வேண்டும். இங்கே ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்; மற்றும் உறுப்பினர்களும் பேசியிருக்கின்றார்கள். எனவே, அவற்றை அதிகப்படுத்த வேண்டும். அதேபோன்று சொந்தக் கட்டடங்கள் அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு, தாட்கோமூலம் வழங்கப்படும் இந்தக் கடன் உதவிகளை, காலத்திலே கொடுக்க வேண்டும். காலதாமதம் செய்கின்றார்கள். சாதாரண மக்கள், ஏழையெளிய படிப்பறிவில் குறைவாக இருக்கின்றவர்கள், நாடிச் சென்று இதுபோன்ற திட்டங்களில் பயன்பெறுகின்றபோது, பல்வேறு வகைகளிலே அலைக்கழிக்கப்படுகின்றார்கள். எனவே, அதிகாரிகள் அவர்களை அப்படி அலைக்கழிக்காமல் அவர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் அந்த நிதியை, அந்தக் கடன் உதவித் தொகையை, கடனை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று தீண்டாமை; தீண்டாமைக் கொடுமை, வன்கொடுமை தடுப்புச் சட்டம்.

"சூத்திர னுக்கொரு நீதி,–தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி;
சாத்திரம் சொல்லிடு மாயின் – அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்"

தமிழகத்தில் இரட்டை glass முறை, பல கிராமங்களில் ஏராளமாக இருக்கிறது.

மனிதரை, மனிதர் தொட்டால் தீட்டு, ஆலயத்திற்குள் சென்றால் சாமிக்குத் தீட்டு, மீறிச் சென்றால் காவல் துறைமூலம் அடக்குமுறை. இன்னும் சொல்லப்போனால், ஜாதிப் பெயரால் என்னுடைய



தொகுதியில் இருக்கின்ற நன்னிலம் பேரூராட்சியில் வெட்டியான் தெரு, பரியாரி தெரு, குச்சுகாரத் தெரு, வன்னியர் தெரு என இப்படி ஜாதிகளின் பெயரில் தெருவைப் பிரித்து வைக்கின்ற நிலைமை இப்போது தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–25

அதேபோன்று, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள், கொத்தடிமை முறையால் மிகவும் ஆட்டிப்படைக்கப்படுகின்றார்கள். அதிலும் குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் மிகவும் மோசமான முறையில், கேவலமான முறையில் நடத்தப்படுகிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோன்று, உள்ளாட்சி அமைப்புகளில், தலித்துகளுக்காக ஒதுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளான பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளுக்கு 10 ஆண்டுக் காலமாக முறைப்படி ஊராட்சித் தேர்தல் நடத்த முடியவில்லை. அப்படி நடத்தினாலும், நடத்தி வெற்றிபெற்ற அடுத்த வினாடியே, இராஜினாமா செய்யக்கூடிய நிலை. அப்படியில்லை என்றால், எதிர்த்துப் போட்டியிடுகின்ற அந்த வேட்பாளரின் குடும்பமே அந்த இடத்தை விட்டே, அந்தப் பஞ்சாயத்தைவிட்டே, விரட்டியடிக்கப்படக்கூடிய நிலை. ஊருக்குள் இருக்க முடியாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை, மோசமான நிலை, அங்கிருக்கின்ற ஆதிக்கச் சக்திகளின் கொடுமையினால் ஏற்படுகிறது என்பதை இந்த அவையில் உள்ளவர்கள் அத்தனை பேர்களும் அறிவார்கள்.

நம்முடைய இந்திய தேசத்திலே மூத்த குடிமகனாக மாண்புமிகு கே.ஆர். நாராயணன் அவர்கள் இருந்து வழிகாட்டி மறைந்திருக்கின்றார்கள். ஆனால், அப்படிப்பட்ட இந்திய தேசத்தில்தான், ஓர் ஊராட்சியில், ஒரு தலைவர், தலித் இருக்கமுடியாத கொடுமை இருக்கிறது. இங்கே இருக்கின்ற அத்தனை பேர்களும், பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் எல்லோரும், இந்தத் தேசத்திலே, இந்தத் தமிழகத்தை நிர்ணயிக்கக்கூடியவர்களாக இருக்கின்றோம். எனவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து, ஒன்றுபட்டு, இந்த 10 ஆண்டுக் காலம், அதிகாரிகள் மூலமாகவே நிர்வகிக்கப்பட்ட அந்தப் பஞ்சாயத்துகளில் மீண்டும் அங்கே ஒதுக்கப்பட்ட தலித்துகளுக்காக, அந்த இடத்திலே, இந்தத் தேர்தல் சுழற்சி முறையில் இல்லை என்ற நிலை இல்லாமல், தலித்துகளுக்கே

ஒதுக்கீடு செய்து, அவர்களை இடம்பெற வைக்கவேண்டுமென்பதை இ[illegible] கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இங்கே நாங்கள் வலியுறு[illegible] விரும்புகிறோம்.

அதுபோன்று, இன்னும் பல்வேறு கொடுமையான பிரச்சினை[illegible] நாம் பார்க்கின்றோம். இன்னும் பழங்குடி மக்கள், நரிக்குறவர்கள், [illegible] பூம் மாடு வைத்திருப்பவர்கள், அதுபோன்று, காட்டுநாயக்கர்[illegible] இவர்களுக்கெல்லாம் சாதிச் சான்றிதழ் கிடைப்பதில்லை. இவர்க[illegible] பழங்குடி மக்கள் இனத்திலே சேர்க்க வேண்டும் என்று இந்த நேர[illegible] நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிகச் சிறந்த சமூகப் புரட்சியான வைக்கம் போராட்ட[illegible] தலைமையேற்று, தலித் மக்களை ஆலயப் பிரவேசம் செய்ய[illegible] பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் அவர்கள் வழியில் [illegible] இப்படிப்பட்ட சமூகச் சீரழிவுகளைச் சீர்தூக்கிப் பார்[illegible] (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதல்வர் அவர்கள், இப்படிப்ப[illegible] மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுக்கவேண்டுமென்று இ[illegible] தருணத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று, வேலைவாய்ப்புகளில் அரசால் தேர்வு செய்யப்[illegible] பயிற்சி பெற்ற, ஆதி திராவிட பழங்குடி மக்கள், பட்ட[illegible] இன்னும் சொல்லப்போனால், கூட்டுறவுத் துறையிலே ப[illegible] பெற்றிருக்கின்றவர்கள் நிறைய பேர்கள் இருக்கின்றா[illegible] அவர்களுக்கெல்லாம் அந்தப் பணி நியமனம் செய்திட வேண்டு[illegible] கேட்டுக்கொள்கின்றேன்.

அனைத்து அரசுத் துறைகளிலும், தனியார் துறைக[illegible] காலியிடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவை எல்லாம் நிரப்[illegible] வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்கள் பல்வேறு பிரச்சினை[illegible] முன்வைத்திருக்கின்றார்கள், மத்திய அரசு, பழங்குடி மக்களுக்[illegible] நலத் துறை அமைத்தது போல, தமிழக அரசும், பழங்குடி மக்[illegible] தனி நலத் துறை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறே[illegible]

சென்ற 1996–2000 ஆம் ஆண்டுகளில், தமிழக அரசு "பழங்கு[illegible] ஆன்றோர் மன்றக் குழு" ஒன்றை அமைத்து, அதன்[illegible] பழங்குடியினர் பிரச்சினைகளுக்குப் பல தீர்வுகளைச் செய்ய[illegible] [illegible] அதிமுக ஆட்சியில் அது கலைக்[illegible]



தற்போது மீண்டும் "ஆன்றோர் மன்றக் குழு", அமைத்து, அவர்களுக்கு உதவி புரியவேண்டுமென்று இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பழங்குடியினருக்கு, வட்டாட்சியரே சாதிச் சான்றிதழ் வழங்கவேண்டும். R.D.O. வழங்குவதில் நீண்ட காலதாமதம் ஆகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பழங்குடி மக்களுக்குச் சிறப்பு முகாம், அந்தந்த மலைப் பகுதிகளில் அமைத்து, (மணியடிக்கப்பெற்றது) அதே இடத்திலே சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சாலைகள் இல்லாத கிராமங்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பதில்லை. கால்நடையாகச் சென்று வைத்தியம் செய்யும் வெறுங்கால் வைத்தியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஈரோடு மாவட்டம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், பர்கூர் மலையில், இதுபோன்ற இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மலைப்பகுதி தரிசு நிலங்களை, நிலமற்ற பழங்குடி மக்களுக்கு வழங்க வேண்டும். எனவே, அவர்கள் வசமுள்ள நிலத்திற்கும் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று...(மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம். தாட்கோவைப் பிரித்து, S.T. மக்களுக்குத் தனியாகக் கடன் வழங்க வேண்டும். தாட்கோ கடன் வழங்க, வங்கிகள் சிபாரிசு செய்யும் அமைப்பாக இல்லாமல், தாட்கோவே கடன் வழங்குகிற வங்கியாக மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பழங்குடி மக்களின் நிலங்களைப் பிறர் வாங்கினால் செல்லாது என்று சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பழங்குடி மக்களின் கலாச்சாரம், (மணியடிக்கப்பெற்றது) பண்பாடு, விவசாயம், மருத்துவம், கல்வி, வனம்சார்ந்த அறிவு இவற்றை பாதுகாக்கும்வகையில், பழங்குடி மக்களுக்குத் தனிப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மலைப்பகுதி மாணவர்களுக்கு வனம்சார்ந்த கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் உள்ள மலையாளி பழங்குடி மக்கள், சேலம், தருமபுரி, நாமக்கல், விழுப்புரம் மாவட்டங்களில் உள்ளனர். ஆனால், ஈரோடு மாவட்டத்தில் மலைப்பகுதியில் வாழும் அதே மலையாளி இன மக்களை இன்னும் பழங்குடிகளாக அங்கீகரிக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அவர்களைப் பழங்குடிகளாக அங்கீகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை )

எனது தொகுதியில் உள்ள 45 பழங்குடி கிராமங்களிலே, அங்கேயிருக்கின்ற காட்டுநாயக்கர்களுக்கு இன்னும் சாதிச் சான்றிதழ் கொடுப்பதில் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. தந்தைக்குக் கொடுக்கப்பட்ட அதே சான்றிதழ் மகனுக்குக் கிடைக்கவில்லை. எனவே, அந்த மகன் படிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட அந்தக் கொடுமை இருப்பதால், அதைக் கண்டறிந்து உடனடியாக அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, ஓர் ஒரு வேண்டுகோள்.

பிற்பகல் 12-30

விருதுநகர் மாவட்டத்தில் 1996-ல் ஏற்பட்ட சாதிக் கலவரத்தால், புதுப்பட்டி, ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்டசபைத் தொகுதி கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமான 80 வீடுகள் தீக்கிரையாயின. அன்றைய முதல்வராக இருந்த தாங்கள், வீடு கட்ட கடன் வழங்க உத்தரவிட்டீர்கள். கடன் கிடைத்தது. கடன் பெற்ற மக்கள் கூலி வேலை செய்து பிழைக்கின்ற மிக ஏழைகளாக இருக்கின்ற காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** கடனைத் திருப்பிக் கட்ட முடியவில்லை. கடன் கொடுத்த கூட்டுறவுச் சங்கம், வீடுகளை ஏலம்போட முயற்சி செய்கிறது. எனவே, தயவுசெய்து கருணைகூர்ந்து சுனாமி, வெள்ளம் போன்ற காலங்களில் வழங்கப்படும் நிவாரணம் போன்று அந்த ஆதி திராவிட மக்களுக்குக் கடன் நிவாரணம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கோரிக்கையை முன்வைத்து, இந்த மானியக்



கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி, இன்று 24-8-2006 ஆம் தேதி ** குறித்து பேசிய கருத்துகளெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, உயர் நீதிமன்றத்தில் 1,335 பணியிடங்களை 5 வருடங்களுக்குள் படிப்படியாக நிரப்புவோமென்று நம்முடைய அரசு சொல்லி இருக்கிறது. அதைக் கடந்த ஆட்சியிலே நிறைவேற்றவில்லை என்று அறிந்தோம். இந்த ஐந்து ஆண்டுகளிலே படிப்படியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பஞ்சமி நிலங்களைக் கண்டறிந்து அந்த நிலங்களை மீட்க ஒரு Commission அமைக்க வேண்டும். இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை நிரந்தரம் செய்து, பதவி உயர்வு அளிக்கவேண்டும். இன்று எந்தச் சாதியினருக்கு வேண்டுமானாலும் தாழ்த்தப்பட்ட சான்றிதழை வழங்குவதற்கு ஒரு குழு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. எந்தச் சாதியில் பிறந்தாலும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கான சான்றிதழை அளிக்க, இங்கே தமிழகத்திலே உலா வந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, சென்னை Reserve வங்கியிலே கேசவன் என்பவர். அவர் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர் என்று ஒரு போலிச் சான்றிதழை வாங்கி பணியில் சேர்ந்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரும், அது போலியான சான்றிதழ் என்று சான்றிதழ் அளித்திருக்கிறார். நீதிமன்றத்திலே கடந்த 10 ஆண்டுகளாக வழக்கு நடந்து வந்தது. 10 ஆண்டுகளிலே நமது தமிழக அரசைச் சேர்ந்த அதிகாரிகள் ஒரு நாளும் அந்த நீதிமன்றத்திற்குச் சென்றதில்லை. அந்த வழக்கு ex-parte ஆகி, இன்று பணியிலே இருக்கிறார். இப்படிப்பட்ட ஓர் அவல நிலையை நம்முடைய அரசு கண்காணிக்க வேண்டும். இதைக் கண்டுபிடிக்க ஒரு குழு அமைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதேபோன்று, தாழ்த்தப்பட்ட வழக்கறிஞர்களுக்கு ஊக்கத் தொகை கலைஞர் அவர்கள் ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது. இடையிலே அது நிறுத்தப்பட்டதாக அறிகிறோம். அதை மீண்டும் இந்த அரசு கொண்டுவர வேண்டும்.

வீட்டுமனைப் பட்டா 31-3-2005 வரை 5 இலட்சத்து 20 ஆயிரத்து 437 பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 2 இலட்சத்து 30 ஆயிரத்து 525 மனைப் பட்டாக்கள் உள்ள இடங்களில் இதுவரை, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள், அங்கே குடியேற முடியவில்லை. கேட்டால், வழக்கு நிலுவையில் இருக்கிறது; அதை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே குடியேறுவதற்கும், வழக்குகள் நிலுவையிலுள்ளதைத் தள்ளுபடி செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறப்புக் கூறுகள் திட்டம்—Special Component Plan—என்பது, அன்னை இந்திரா காந்தி அவர்களால் 1979-1980-ல் கொண்டுவரப்பட்டது. கடந்த ஆண்டுகூட, இப்பொழுது இருக்கின்ற பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. மன்மோகன் சிங் அவர்கள் Planning Commission கூட்டத்திலே, எப்படியெல்லாம் அந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று 19 கட்டளைகளைப் பிறப்பித்திருக்கிறார். அந்தத் துறையைச் சார்ந்த Advisor அவர்கள், நம்முடைய தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அந்தக் கடிதம் நம்முடைய அரசுக்குக் கிடைத்ததா என்று தெரியவில்லை. உங்கள்மூலமாக இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். Mr. Chandra Paul, Advisor, Planning Commission, Government of India, அவர் என்ன சொல்கிறார் என்றால், சிறப்புக் கூறு திட்டங்களிலுள்ள அந்தப் பணத்தை, எப்படித் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செலவழிக்க வேண்டும் என்று வழிகாட்டுதல் சொல்லி இருக்கிறார். இந்தத் திட்டத்தின்கீழ், இந்த நிதிநிலை அறிக்கையிலே 1,126.89 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைவிட இது அதிகம் என்றபோதிலும், இந்தத் திட்டத்திற்குத் தொடர்பில்லாத பல செலவுகளை இதன்கீழ் கொண்டுவந்து, அதிகாரிகள் இந்த அரசைத் தவறாக வழி நடத்தியுள்ளார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

பள்ளிக் கல்வியின்கீழ், ரூ.29.93 கோடி காட்டப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை எதுவும் இருக்கிறதா; இது எவ்வளவு; எதற்கான செலவு என்பதை அறிய விரும்புகிறேன்.



திட்டத்திற்கான இணைப்பு 21-ல், அதாவது சிறப்புக் கூறு திட்டத்திற்கான ஒதுக்கீட்டைக் காட்ட வேண்டிய பட்டியலிலே, பழங்குடியினர் துணைத் திட்டத்தின் ஒதுக்கீடும் சேர்த்துக் காட்டப்பட்டுள்ளது. அதைத் தனியே காட்ட வேண்டுமேதவிர, S.C.P.-ல் காட்டக்கூடாது.

தமிழக அரசு அறிவித்துள்ள வேளாண்மைத் தொழிலாளர் நல வாரியத்துக்கான செலவுகளில் பல நூறு கோடி ரூபாய் தொகை, சிறப்புக் கூறு திட்டத்தில் இந்த ஆண்டு காட்டப்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர் வாரியத்தின் செலவுத் தொகையில் ஆதி திராவிடருக்கான செலவுத் தொகை எவ்வளவு என்று குறிப்பாணை, அரசாணை எதுவும் போடப்படாத நிலையில் இது எதன் அடிப்படையிலே காட்டப்பட்டதென்று தெரியவில்லை.

திட்டச் செலவான சுமார் 12,500 கோடி ரூபாயிலே, சிறப்புக் கூறு திட்டத்திற்குச் சுமார் 2,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ரூ.1,126.89 கோடியைக் காட்டியுள்ளார்கள். பகுக்க தலைப்பு 7, 8, 9-ன்கீழ் 1,299.42 கோடி ரூபாய் ஒதுக்கப்பட உள்ளதாகக் இயலாத திட்டங்களின்கீழ் குறிப்பிட்டுள்ளனர்; அது எப்படி என்பதை விளக்கவில்லை.

மின் சக்தித் துறை, குடிநீர் வழங்கல் துறை முதலான பல துறைகள் பொத்தாம்பொதுவாகக் காட்டுகின்றன. அப்படிச் செய்வது S.C.P.-யை விதிகளுக்குப் புறம்பானதாகும். ஏனென்றால் நாட்டில் வாழும் மக்களில் பிறரைப்போல மின்சாரத்தையோ, குடிநீரையோ அதே வசதி படைத்த ஆதி திராவிட மக்கள் பயன்படுத்த இயலாது. எனவே, அளவுக்கு அவர்களது மக்கள்தொகை அளவிற்கு, கணக்கில் அந்த நிதியைப் பிரித்துக் காட்டுவது அதிகாரிகள் தெரிந்தே செய்கின்ற தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறப்புக் கூறு நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதுபற்றி 19 அம்சங்களைக் கொண்ட வழிகாட்டு நெறியைக் குறித்து மத்திய திட்டக் குழு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறது. இந்த ஆண்டு அனுப்பியுள்ளது. அதை இந்த அரசு பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. குறிப்பாகக் கல்வி தொடர்பாக அது தந்துள்ள வழிகாட்டுதல், மிகவும் முக்கியமானதாகும்.

சிறப்புக் கூறு திட்டத்தைச் செயல்படுத்த பல்வேறு அலுவலர்களிலும் ஒருங்கிணைக்கும் அலுவலர்—Nodal Officer—நியமனம் செய்யப்பட்டுள்ளதாகக் கொள்கைக் குறிப்பில் தெரிவித்திருக்கிறீர்கள்.

ஆனால், மாநில அளவில் ஆதி திராவிடர் நலத் துறைச் செயலாளரை இதற்கான Nodal Officer-ஆக நியமிக்க வேண்டும் என்ற விதி ஏன் மறுக்கப்படுகிறது?

ஆதி திராவிடர் நலத் துறையானது மற்ற துறைகளின் பணிகளை நடைமுறைப்படுத்தும் ஒரு விரிவாக்கத் துறையாக மட்டுமே வைக்கப்பட்டுள்ளது. மற்ற துறைகள் ஆதி திராவிட, பழங்குடி மக்களுக்கு எத்தகைய திட்டங்களை உருவாக்க வேண்டும்; எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்பதைத் திட்டமிடுகிற, வகுத்துத் தருகிற துறையாக அது இல்லை. அதனால்தான் பிற துறைகள் தவறான கணக்குகளைக் காட்டித் தப்பிக்க முயற்சிக்கின்றன. இதைத் தடுக்க வேண்டுமானால், மைய அரசின் வழிகாட்டுதலுக்கேற்ப, சிறப்புக் கூறு திட்டத்தின்கீழ் வருகிற நிதியினைத் திட்டமிடும் அதிகாரம் கொண்ட உயர்மட்ட வல்லுநர் குழு ஒன்று, ஆதி திராவிட நலத் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட வேண்டும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

தற்போது, சுமார் ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார். இதில் எழுபது கோடி ரூபாய் அளவுக்குக்கூட ஆதி திராவிட மக்கள் பயனடையவில்லை. நிலமில்லாத அந்த மக்கள் அதிகம், விவசாயக் கடன் வாங்கியதில்லை. ஆனால், அவர்கள் தாட்கோ மூலமாக வாங்கிய கடன்களும், வீடு கட்டுவதற்காக வாங்கிய கடன்களும் இப்போது வட்டிக்கு மேல் வட்டியாகச் சேர்ந்து அவர்களைப் பயமுறுத்துகிறது. கூட்டுறவுக் கடன்களை ஒப்பிட்டால், இந்தக் கடன் 5 விழுக்காடுகூட இருக்காது. இதைத் தள்ளுபடி செய்தால்தான் ஆதி திராவிட மக்களுக்கும் இந்த அரசு ஆதரவாக இருக்கிறது என்பது நிரூபணமாகும்.

ஆதி திராவிடர் நலத் துறையானது, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளை நடத்தி வருகிறது. அந்தப் பள்ளிகளைச் சிறப்பு வட்டாட்சியர்களின் கண்காணிப்பில் வைத்திருப்பதால், கல்விபற்றி அவர்கள் அக்கறையின்றி உள்ளனர். எனவே, அந்தப் பள்ளிகளைக் கண்காணிக்க மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். அவற்றில் கல்வியில் அக்கறைகொண்ட கல்வியாளர்களையும், சமூகப் பணியாளர்களையும், தனித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களையும் உறுப்பினர்களாக்க வேண்டும். தற்போது அந்தப் பள்ளிகளில் நடத்தப்படும் விடுதிகளின் நிலை மிக



மிக மோசமாக உள்ளது. ஆசிரியர்களை விடுதிக் காப்பாளர்களாக நியமிப்பதால், கல்வித் தரமும் பாழாகிறது. எனவே, ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்களை Warden-களாக நியமிக்க வேண்டும்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவர்கள் விடுதியில. உணவுப் பொருட்களை supply செய்யும் ஒப்பந்தக்காரர்களை அந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கே அளிக்க வேண்டும். அதன்மூலம் அந்தச் சமூகத்தில் பலருக்கு வேலைவாய்ப்புப் பிரச்சினை தீரும். இந்த நடைமுறையை மத்தியப் பிரதேச முதலமைச்சர் திக் விஜய்சிங் அவர்கள் முதல்வராக இருந்தபோது அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

பிற்பகல் 12-40

தனியார் துறையிலே இட ஒதுக்கீட்டைக் கொண்டு வருவோம் என மத்தியில் ஆட்சி செய்யும் கூட்டணியின் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் போலவே, இதுவும் தாமதப்படுத்தப்படுகிறது. இந்த நிலையில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் முன்முயற்சி எடுத்து, தனியார் துறையிலும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வகை செய்யவேண்டும். தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வருகின்ற வெளிநாட்டு நிறுவனங்களிடம் கலந்து பேசி, அந்த நிறுவனங்களில் சமூக நீதியை நிலைநாட்டுவதற்கான ஒரு அம்சத்தையும், பரிந்துரையையும் ஒப்பந்தத்தில் இடம்பெறச் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி—மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரியார் வழி வந்தவர்கள். சமூக நீதிக்காகப் போராடுபவர். கடந்த 10 ஆண்டுக் காலமாக பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியிலே ஒரு தாழ்த்தப்பட்டவர் தலைவராக அந்த நாற்காலியிலே உட்கார முடியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களே, உங்களுடைய காலத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவன் அந்த நாற்காலியிலே உட்கார முடியவில்லையென்றால், எந்தக் காலத்தில் உட்கார முடியும் என்று நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட, சுழற்சி முறையில் கொண்டு வருவதாக அறிவித்தார்கள். சுழற்சி முறையைக் கொண்டு வாருங்கள். எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், இந்திய இறையாண்மையைக் காப்பாற்றுவதற்காகப் பேசுகின்ற நம்முடைய

சட்டப் பேரவை உறுப்பினர்கள், அங்கே இந்திய இறையாண்மையைக் காப்பதாகத் தெரியவில்லை. அந்த இடத்திலே தாழ்த்தப்பட்டவன் உட்கார்ந்தால், தீட்டு என்று சொல்கிறார்கள். ஒரு தாழ்த்தப்பட்டவன் அந்த நாற்காலியில் உட்கார்ந்தால், ஊரைவிட்டு விரட்டுவோம் என்று சொல்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளிலே எவ்வளவோ போராட்டத்தை நடத்திவிட்டோம். ஆனால், அதில் எந்தப் பலனும் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களை தயவுகூர்ந்து மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம். தாழ்த்தப்பட்ட ஒருவன் அந்த நாற்காலியில் 10 ஆண்டுகளாவது உட்காரவேண்டும். அதற்குப் பிறகு சுழற்சி முறையை நாம் கொண்டு வரலாம் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கான இட ஒதுக்கீட்டின் அளவு, அவர்களது மக்கள் தொகையின் விழுக்காட்டுக்கு இணையாக இருக்கவேண்டும் என்பது அரசமைப்புச் சட்டத்தில் வழிகாட்டப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்களின் விழுக்காடு, 18–லிருந்து 19 விழுக்காடாக உயர்ந்துவிட்டது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான், 16 விழுக்காடாக இருந்ததை 18 விழுக்காடாக மாற்றியமைத்தவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 2 விழுக்காடு அதிகமாகக் கொடுத்தவர். அந்த அடிப்படையில் இந்த உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாகவே 19 விழுக்காடாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியின மக்களுக்கு நிலம் வழங்கவேண்டுமென, தங்கராஜ் குழுவின் பரிந்துரைகளை உடனே இந்த அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கின்ற இரண்டாவது மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்திலே வாழும் 20 இருளர்கள் ஆதி பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்களுக்குக் கல்விச் சான்றிதழ் அளிக்கவேண்டும். அவர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளிகளை அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதுவரை பணி ஒதுக்கிட்டிலே reservation–லே "A" Group–லே 7.29 புள்ளிகள்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன. "B" Group–லே 14.2 புள்ளிகள்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன. "C" Group–லே 16.2 புள்ளிகள்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நலனிலே அக்கறை உள்ளவர்கள் என்பதிலே எங்களுக்கு எந்தவித ஐயப்பாடும் கிடையாது. ஆனால், நிதித் துறை அலுவலர்கள், நிதித் துறை அதிகாரிகள் இந்தச் சிறப்புக் கூறு திட்டத்தின் பணத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். எது எதற்கோ கணக்குக் காட்டுகிறார்கள். மீன்பிடிப்புக்கு, எரிபொருள் வாங்குவதற்காக, S.C.P. பணத்திலிருந்து செலவிடப்பட்டதாக... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், உரையை முடியுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. ஜெயராமன்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, நான் இங்கே இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. தேர்தல் அறிக்கையிலே, கலைஞர் அவர்கள், எல்லாத் துறைகளிலும் சொன்ன திட்டங்களையெல்லாம், தேர்தல் அறிக்கைகளையெல்லாம், அப்படியே நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சியோடு அதை வரவேற்கிறோம். ஆனால், தாழ்த்தப்பட்டவர்களுக்கான ஆதி திராவிடர் நலத் துறையிலும், பழங்குடியினர் நலத் துறையிலும் நிதித் துறைச் செயலாளரோ, நிதித் துறையைச் சார்ந்தவர்களோ சரியாக நடந்துகொள்ளவில்லை. இதை ஒரு விவாதப் பொருளாகக்கூட நமது தமிழக முதல்வர் அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தப் பணத்தை மத்திய அரசு கொடுக்கின்ற, மத்திய அரசு வழிகாட்டுகின்ற சிறப்புக் கூறுகள் திட்டப் பணத்தை நம்முடைய நிதித் துறையைச் சார்ந்தவர்கள், தவறாக, அந்த மக்களுக்குப் போய்ச் சேராமல், எந்தெந்த account–ல், 78.9 என்றால் அந்த account–ல் வரவேண்டும். அப்படி வராமல் 78.9 என்ற தொகுப்பை மட்டும் வைத்துக்கொண்டு, அந்த account–ஐ மட்டும் வைத்துக்கொண்டு, எரிபொருள் வாங்குவதற்கும், மீனவர்கள் மீன்பிடிக்காத காலங்களிலே அவர்களுக்கு ஊக்கத் தொகை அளிப்பதற்கும் அது பயன்படுத்தப்படுகிறது. இப்படி நிறைய துறைகளிலே இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், முக்கியத் துறையான மின்சாரத் துறை, நம்முடைய தளபதி அவர்கள் வகிக்கின்ற உள்ளாட்சித்

துறையிலே பெருவாரியான பணங்கள் இந்தச் சிறப்புக் கூறுகள் திட்டத்திற்கு வரவேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். முக்கிய துறைகளிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அந்தத் துறைகளுக்கும் எந்த உறவும் இல்லாமல் ஒரு இடைவெளி இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு, நேரம் அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நேரம் அளிக்கும்படி சிபாரிசு பண்ணியது நான்தான். (சிரிப்பு)

**திரு. கு. செல்வம்:** நேரம் அளிக்க சிபாரிசு செய்ததற்கு நன்றி.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட குற்றச்சாட்டு, அதைக் குற்றச்சாட்டாகவே கருதுகின்றேன். உண்மையிலேயே அவ்வாறு divert பண்ணப்பட்டிருக்குமேயானால், ஒரு தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதி, வேறு ஒரு தலைப்பிற்குச் செல்வது என்பது நிதித் துறையிலே வழக்கமான ஒன்று. கடைப்பிடிக்கப்படுகின்ற ஒன்று. ஆனால், அப்படி divert செய்யப்படுகின்ற நேரத்தில் அதற்கு இளிச்சவாய் சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம்தானா என்று கேட்பதைப்போல அவர் இந்தக் கேள்வியை இங்கே வைத்திருக்கின்றார். அது பற்றிய விவரங்களை அவர் அறிந்த வரையிலே எனக்குத் தருவாரேயானால், அதுகுறித்து அதிகாரிகளிடத்திலே பேசி, இனி அப்படித் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய மேன்மைக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி, முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படுகின்ற நிதி, ஒரு துளியும் divert ஆகாமல் பார்த்துக்கொள்கின்ற பொறுப்பை நான் ஏற்றுக்கொள்வேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. ஜெயராமன்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்க அனுமதி அளித்த தங்களுக்கும், தாழ்ந்து கிடந்த இந்தச் சமுதாயத்தை ஏற்றிவிட்ட ஏற்றமிகு தலைவரும், தமிழ்ச் சமுதாயம் வீறுகொண்டு எழ, வீரமும் விவேகமும் வளர்த்து, என் போன்ற எளிய,



ாமானிய, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த, குடிசை வீடுதான் ன்றாலும் அடிமட்டத் தொண்டனாக இருந்த என்னைக் கோட்டைக்கு பா, என்று வாய்ப்புத் தந்து, இன்று இந்த அவையில் பேச வைத்த ாயாகவும், தந்தையாகவும் இருந்து என்னை வாழ வைத்தவருமான ாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர்களின் இதயத்திலேயே ஈடில்லா இடம்பெற்ற எதிர்கால தமிழக நட்சத்திரம் எங்கள் தளபதியே, என் போன்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த உங்கள் தம்பியாகிய இந்தச் சாமானிய தொண்டனின் தொகுதிக்கு வருகை தந்து, சிறந்த செயலாற்றி, நான் வெற்றிபெறக் காரணமான மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வணங்குவதில் பெருமைப்படுகின்றேன்.

ஏழை எளிய மக்கள் வாழ்வில் வளம்பெற ஏற்றமிகு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த மாண்புமிகு பேராசிரியர் நிதி அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர், மக்கள் போற்றும் தலைவர், ஏழ்மையே உன் பலம், கூரை வீட்டில் வாழ்பவர்களுக்குத்தான் வாய்ப்பு என்று தலைவர்களிடம் எடுத்துக் கூறி, நான் இந்த அவையில் பேசக் காரணமான அமைச்சராம், மாவட்டச் செயலாளர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அண்ணனை வணங்குகிறேன். மருத்துவர் அய்யா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை இந்த மாமன்றத்தில் தோன்ற வைத்த எனது தாய், தந்தையர் அதனினும் மேலாக என்னை இங்கு அனுப்பி, 22,778 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை அளித்த என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு நேரடியாகப் பல திட்டங்களை அறிவித்தது மட்டுமின்றி, மறைமுகமாக அவர்கள் பயன்பெறும்படியாக இலவச கேஸ் இணைப்பு, இலவச வண்ணத் தொலைக்காட்சி, தொழிலாளர் பாதுகாப்பு வாரியம், விவசாயத் தொழிலாளர் பாதுகாப்பு வாரியம் எனப் பல்வேறு திட்டங்களை அறிவித்த இந்த அரசை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

வேலையில்லாத இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டமும்கூட ஆதி திராவிட சமூகத்திற்கே அதிகம் பயன்தருவதாக உள்ளது.

கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து, இன்று கோடிக்கணக்கான விவசாயிகளின் பாராட்டுதலைப் பெற்றுள்ள கலைஞர், தாட்கோ கடன்களையும் தள்ளுபடி செய்து, ஆதி திராவிட மக்களின் துயர்துடைக்க வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் இருக்கும் பக்கமே நடக்கக்கூடாது என்று ஆதி திராவிட மக்களை விலக்கி வைத்திருந்த காலம் ஒன்று இருந்தது. அதையெல்லாம் மாற்றி, தலைவர் கலைஞர் அவர்கள், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் இப்போது கொண்டு வந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயிலுக்குள் சென்று பூஜை செய்வதற்குத்தான் தற்காலிகத் தடை ஏற்பட்டுள்ளது. ஆனால், கோயில்களை நிர்வகிக்கும் அறங்காவலர் குழுவில் ஆதி திராவிடரும், பெண்களும் கட்டாயம் இடம் பெற வேண்டும் என்ற சட்டம் கொண்டுவந்ததற்குத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வந்தவாசி தொகுதி மிகவும் ஏழ்மையான பின்தங்கிய தொகுதி. ஆற்றுப் பாசனம், தொழிற்சாலை எதுவும் இல்லாத வறண்ட பகுதி. ஏழை விவசாயக் கூலிகள் நிறைந்த தொகுதி. குறிப்பாக ஆதி திராவிட மக்கள் அதிகம் உள்ள தொகுதி. இவர்களெல்லாம் ஏற்றம் பெற ஓரிரு தொழிற்சாலைகளை உருவாக்க சிப்காட் வளாகம் அமைத்துத் தரவும், வந்தவாசி தொகுதியில் சுற்று வட்டாரத்திலுள்ள முஸ்லீம் இன மக்களால் மேற்கொள்ளப்படும் பாய் நெசவு, இந்திய அளவில் பிரசித்தி பெற்றது; அவர்கள் வாழ்வில் வளம்பெற ஒரு நவீன பாய் நெசவுக் கூடம் அமைத்துத் தரவும் கோருகின்றேன்.

*பிற்பகல் 12–50*

எனது தொகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட, ஏழை ஆதி திராவிட மக்கள் பெரும்பாலானவர்கள், புறம்போக்கு நிலங்களில், கூரை வீடுகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறை மூலம் வீட்டுமனைப் பட்டாக்களும், தொகுப்பு வீடுகளும் முன்னுரிமை அடிப்படையில் சற்றுக் கூடுதலாகக் கட்டித்தரக் கோருகின்றேன்.



வந்தவாசி தொகுதி உள்ளிட்ட கீழ்சாத்தமங்கலம் மதுரா சத்தியா நகரில் சுமார் 400 இருளர் இன மக்கள், பள்ளி செல்லும் சிறார் சிறுமிகள் வசிக்கின்றனர். இவர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளி அமைத்துத்தர வேண்டுகிறேன். வந்தவாசி பெரிய காலனியில் அமைந்துள்ள ஆதி திராவிட மாணவருக்கான விடுதி, கடந்த மே மாதம் இடிந்துவிட்டது. இதனை முழுமையாகப் புதுப்பிக்க வேண்டுகிறேன்.

வந்தவாசி பெரிய காலனி, கோட்டை காலனியில் வசிக்கும் மக்களுக்குப் போதிய வாழ்விடம் இல்லை. இதனைப் போக்கும்வகையில் அரசுமூலமாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோருகிறேன்.

வந்தவாசி கோட்டை காலனியில் சுடுகாட்டிற்குச் செல்ல, போதிய சாலை வசதி இல்லை. இதனை ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். வந்தவாசி பகுதியில் இதுவரையில் அரசுக் கலைக் கல்லூரி, அரசு Polytechnic, அரசு I.T.I. எதுவும் இல்லை. எனவே, இந்தக் குறையை நிறைவு செய்ய, ஒரு அரசுக் கலைக் கல்லூரி, ஒரு Polytechnic, ஒரு I.T.I. ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

அரசுத் தரப்பில், வந்தவாசியில் இதுவரையில் உழவர் சந்தை, சமத்துவபுரம் ஏற்படுத்தவே இல்லை. இந்தக் குறையை நிறைவு செய்ய வேண்டுகிறேன். 1996–2001–ல் தொடங்கப்பட்ட உளுந்தை கிராமத்தில் இயங்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இதுவரை கட்டடம் இல்லை. நவீன வசதியுடன்கூடிய கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன்.

கோவிலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி 40 படுக்கை வசதியுடன்கூடிய கட்டடங்கள் கட்டிக் கொடுத்து, 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாக மாற்றித்தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், என் தொகுதியைத் தங்களின் மேலான கருத்தில்கொண்டு கீழ்க்கண்ட கிராமச் சாலைகளை அமைத்திட வேண்டுகிறேன்:

படூர் to படூர் காலனி, கொண்டையாங்குப்பம் to கொண்டையாங்குப்பம் காலனி, சு. காட்டேரி காலனி, சு. காட்டேரி to இரும்புலி, திண்டிவனம் சாலை to ஜம்பம்பட்டு, தண்டலம் to வெங்காரம், ஆராசூர் to தென்சேந்தமங்கலம், மேல்நெமிலி to செங்காடு (வழி) அருந்ததி பாளையம், செங்காடு to தென்மாவனந்தல் ரோடு, செங்காடு to வெளாரிபட்டு, செங்காடு to இருங்கல் மேட்டுக்காலனி,

இருங்கல் to இருங்கல் மேட்டுக்காலனி, மேல்கொளத்தூர் to சின்னசெங்காடு, செங்காடு to கோவிலூர் (வழி) அம்மாபாளையம், காரணை to காரணை மேட்டுக் காலனி, உக்கல் காலனி to உக்கல் கூழமந்தல் இடுக்காட்டுச் சாலை, நல்லூர் காலனி to பெரிய குப்பம் வரை, மாவளவாடி to சு. காட்டேரி காலனி வரை, வெள்ளிமேட்டிலிருந்து இரும்புலி ஆலம்பூண்டி சாலை, திண்டிவனம் சாலையிலிருந்து அத்திபாக்கம் சாலை (வழி) மருத்துவம் பாடி, திண்டிவனம் சாலையில் இருந்து நாவல்பாக்கம் சாலை (வழி) தாமரைப்பாக்கம், செம்பூர் தெள்ளார் சாலையிலிருந்து நெல்லியாங்குளம் சாலை (வழி) ஸ்ரீரங்கராஜபுரம் சாலை, தெள்ளார் காலனியிலிருந்து தெள்ளார் சாலை, எரமலூர், நல்லூர் சாலையிலிருந்து ஸ்ரீரங்கராஜபுரம் சாலை, ஆரியாத்தூர் கூட்டுச் சாலையிலிருந்து வழூர் சாலை (வழி) கோயில் குப்பம், வழூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து தழுதாழை சாலை, சாலவேட்டில் இருந்து உளுந்தை சாலை, காஞ்சிபுரம் சாலையிலிருந்து காரணை சாலை (வழி) மாலையிட்டான் கிராமம், வெளியம்பாக்கத்திலிருந்து பசவத்தான் காலனி சாலை, (மணியடிக்கப்பெற்றது) ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து காரணை சாலை, வெங்கோடு கூட்டுச் சாலையிலிருந்து நெமிலி சாலை, அத்திக்குளத்திலிருந்து அனுக்காவூர் சாலை (ஓடைபாலம் உள்ளிட்டு) இச்சாலைகளை அமைத்துத் தரக் கோருகின்றேன்.

செங்காடு என்ற கிராமம், செங்காடு செந்தமிழ் நாடக மன்றம் காலஞ்சென்ற எஸ்.ஆர். அயில் அவர்களால் 1957 முதல் 1975 ஆம் ஆண்டுகளில் கலை வளர்த்து, தி.மு.க. வளர தினம் தினம் ஒரு நாடகம், உதாரணமாக வேலைக்காரி, ஓர் இரவு, புதுவாழ்வு, காகிதப்பூ ஆகிய நாடகங்களை நடத்தி மக்களுக்குத் தி.மு.க. மீது விழிப்புணர்ச்சி ஏற்படுத்திய முன்மாதிரி கிராமம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள், திரு. ஜெயராமன். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** குறிப்பாக, செங்காடு, அதைச் சுற்றியுள்ள 10 கிராமங்களில் சராசரியாக மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று பேர் வீதம் பாம்புக் கடியாலும், விஷம் அருந்தியதாலும் இறக்க நேரிடுகிறது. மாதத்தில் 4 அல்லது 5 பேர் பிரசவ வலியால் இரவு நேரங்களில் அவதிப்படுகின்றனர். எனவே, படுக்கை வசதியுடன்கூடிய அரசுப் பொது மருத்துவமனை அமைத்துத்தர வேண்டுகிறேன்.



செங்காடு கிராமத்தில், குறைந்த மின் அழுத்தம் ஏற்படுவதால் மின்விளக்கு அடிக்கடி எரிவதில்லை. மின்சார மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து coil போய்விடுகிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் 110 கிலோ வோல்ட் மின் அழுத்த transformer அமைத்துத்தரக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம்பிரபு. (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்ற முறை, 1996–2001–ல் தனது முதல் உரையில், "என்னால் இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு அள்ளிக்கொடுக்க முடியாவிட்டாலும் கிள்ளிக் கொடுத்துள்ளேன்" எனக் கூறினார்கள். ஆனால், இம்முறை பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு அள்ளியே கொடுத்து, சொன்னதையே செயல்படுத்தும் முதல்வர் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கன்னிப் பேச்சை முடிக்கின்றேன். வாழ்க கலைஞர்! வாழ்க தளபதி!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம்பிரபு, five minutes.

***திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையினுடைய இந்த விவாத்திலே கலந்துகொண்டு எனது கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத்தினுடைய தலைவர் ஐயா திரு. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

"சாதிகள் ஏதப்பா?
இது எத்தர்கள் செய்து வைத்த சூதப்பா!
நான் சொல்வது தப்பா?
நல்லா யோசித்துப் பதில் கூறப்பா!"

என்று இந்த இனத்தின் விடியலுக்காகப் பாடுபட்ட பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களினுடைய மணிவாசகத்தை முன்மொழிந்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள், இந்த விஞ்ஞான யுகத்திலே முன்னேறாமல் வளர்ச்சி அடையாமல் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளார்கள். இவர்களுடைய வாழ்க்கைத் தரம், பொருளாதாரம், கல்வி போன்றவை வளர்ச்சி அடைய, நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய அரசு, 2006–2007 ஆம் ஆண்டிற்கான இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வுக்காகப் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்ததற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற கொடுமைகளைத் தடுப்பதற்காகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989 என்ற அந்தச் சட்டம் இயற்றப்பட்டது. இந்த Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Rules, 1995–ல் 16–வது விதியின்கீழ், சட்டத்தின் நோக்கங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா, பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு வசதிகள் மற்றும் உதவிகள் சரியாக வழங்கப்படுகின்றனவா, போன்றவற்றைக் கண்டறிய, மாநில அளவிலான உயர் அதிகாரக் குழு, மாநில முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் அமைக்க வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அந்தக் குழு வருடத்திற்குக் குறைந்தது இரண்டு தடவையாவது கூட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டதா; அப்படி அமைக்கப்பட்டிருந்தால், அந்தக் குழு எத்தனை தடவை கூடியது என்ற விவரத்தை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

தற்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தக் குழுவினை அமைத்து, அனைத்துக் கட்சி SC, ST சட்டமன்ற உறுப்பினர்களும், குழுவில் உறுப்பினர்களாக இருக்கச் செய்வதற்கு வாய்ப்பு அளித்து இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், வருடத்திற்கு இந்தக் குழு இரண்டு தடவை கூடி, SC, ST மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளைக் கருத்தில்கொண்டு, இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கான நோக்கங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த முறை முதலமைச்சராக இருந்தபோது, SC, ST இனத்தினருக்காக 11–5–2000 அன்று இட ஒதுக்கீடு சம்பந்தமான ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அவையிலே வைத்தார்கள். அந்த அறிக்கையின் கடைசிப் பக்கத்தில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட பின்னடைவுக் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக சிறப்பு நியமன நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதற்குப் பின்பு ஆட்சி மாற்றம். ஆனால், கடந்த ஐந்தாண்டுக் காலமாக, சிறப்பு நியமன நடவடிக்கைகள் அன்றைய அரசால் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பக்கம் 11–ல் அரசுத் துறைகளில் 1–1–1999 அன்றைய நிலையில், ஆதி திராவிட மற்றும் பழங்குடியினப் பணியாளர்களுடைய எண்ணிக்கையினுடைய விவரம், வரிசை எண் 1, பணியிடத் தொகுதி 'A'; பணியாளர் மொத்த எண்ணிக்கை 4,588. தற்போதுள்ள பணியாளர்களுடைய எண்ணிக்கை SC–யிலே 475, ST–யிலே 17. ஆனால், சட்டப்படி இருக்க வேண்டிய பணியாளர்களுடைய எண்ணிக்கை SC–யிலே 826 இருக்க வேண்டும். ST–யிலே 46 இருக்க வேண்டும். ஆனால், இருக்கிறது SC–யிலே 475. இன்னும் பணியிடங்கள் நிரப்பப்படக்கூடிய எண்ணிக்கையின் விவரம் 351. ST–யிலே 29 இடங்கள் நிரப்பப்படவேண்டும். அதேபோல, பொதுத் துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், மாநகராட்சிகள் மற்றும் சட்டப்படியான நிறுவனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின எண்ணிக்கையினுடைய விவரம், வரிசை எண் 1, பணியிடத் தொகுதி 'A'; பணியாளருடைய மொத்த எண்ணிக்கை 3,660, தற்போதுள்ள பணியாளருடைய எண்ணிக்கை SC–யிலே 116, ST–யிலே 3. ஆனால், சட்டப்படி இருக்க வேண்டிய பணியாளர்களுடைய எண்ணிக்கை SC–யிலே 659, ST–யிலே 37 இருக்க வேண்டும். மிகக் குறைவாக இப்போது 116 தான் இருக்கிறது, SC–யிலே. இதிலே 543 பணியிடங்கள் நிரப்ப வேண்டும். அதேபோல ST–யிலே 34 பணியிடங்கள் நிரப்பவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகித இட ஒதுக்கீட்டில், இந்த விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால் 7.29 சதவிகிதமும், பழங்குடியினர் ஒரு சதவிகித இட ஒதுக்கீட்டில் 0.3 சதவிகிதம்தான் இருக்கிறது. இது நமக்கு மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

மாண்புமிகு டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள், ஆதி திராவிட மற்றும் பழங்குடியினப் பணியிடத் தொகுதி 'A'-ன்படி, வருகின்ற காலங்களில் SC-க்கு 18 சதவிகித ஒதுக்கீடும் பழங்குடியினருக்கு ஒரு சதவிகித ஒதுக்கீடும் முழுமையாக நியமிக்க, தங்களைப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மதம் மாறிய கிறித்தவ இனக் கல்லூரி மாணவ, மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக் கடன் உதவித் தொகை, தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு உதவித் தொகைகள்மூலம் மாணவ, மாணவிகள் தங்களுடைய படிப்பை முழுவதுமாக முடிக்க முடியுமா என்றால், அது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த ஏழையெளிய மாணவர்களுடைய கல்விக்கு நாம் உண்மையிலே உதவ வேண்டுமென்றால், Special Loan Scholarship அதாவது சிறப்புக் கல்விக் கடன் உதவித் தொகை வழங்கி அவற்றின்மூலம் பலன்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்கள், கடந்த 1991 ஆண்டு முதலமைச்சராக இருந்தபொழுது SC, ST மாணவ, மாணவிகள் கல்வியில் பயன்பெறுகின்ற வகையிலே, இந்தச் சிறப்புக் கல்விக் கடன் உதவித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்மூலம் மாணவ, மாணவிகள் பெரிதும் பயனடைந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதேபோல SC, ST-மாணவ, மாணவிகள் தங்களுடைய படிப்பை எந்தவிதமான இடையூறும் இன்றி படித்து முடிப்பதற்காக இந்த நிதியாண்டிலிருந்து இந்த Special Loan Scholarship வழங்கி, அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றி வைக்குமாறு நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, இந்த Para Medical Course என்று சொல்லக்கூடிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம்பிரபு, 7 நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. இரா. இராம்பிரபு:** ஒரு 3, 4 நிமிடத்தில் முடித்து விடுகிறேன். Para Medical என்று சொல்லக்கூடிய அந்த Course-லேயும் சேர்ந்து படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கும் இந்தச் சலுகை கிடைக்கப்



பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அச்சங்குளம் கிராமத்தில் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை இயங்கி வந்தது. இந்த நூற்பாலையை ஆதி திராவிட மக்களுக்காக, கடந்த 1978 ஆம் ஆண்டு அன்றைய சட்டமன்ற உறுப்பினர் மறைந்த சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் மற்றும் நம்முடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாரமலை ஆகியவர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்று, அன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்த நூற்பாலையில் 300 கைத்தறி நெசவாளர்களும், 25 அலுவலர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். கடந்த அ.தி.மு.க. அரசு இந்தக் கூட்டுறவு நூற்பாலையை 2002, மே மாதத்திற்கு முன்பாக இழுத்து மூடியது. காரணம் என்னவென்று இன்றுவரை தெரியவில்லை. கடந்த 6-5-2002 அன்று, நான் கைத்தறித் துறை மானியக் கோரிக்கையிலே கலந்துகொண்டு பேசும்பொழுது, இந்தக் கூட்டுறவு நூற்பாலை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். அடுத்து அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்னோர் உறுப்பினர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. இரா. இராம்பிரபு:** தொடங்கப்பட்ட இந்த ஆலையை மூடக்கூடாது. ஆதி திராவிட மக்களுக்காகத் தொடங்கப்பட்ட இந்த ஆலையைத் தொடர்ந்து இயங்கச் செய்ய வேண்டுமென்று நான் இந்த அவையிலே கோரிக்கையாக வைத்தேன். அன்றைய அரசு என்னுடைய கோரிக்கையை நிராகரித்து விட்டது. உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களின்மேல் அக்கறை இருந்தால், அன்றைய அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட இந்த நூற்பாலையை இழுத்து மூடுமா என்பதுதான் என்னுடைய கேள்வியாக இருக்கிறது. ஆகவே, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்ட நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள், இந்த நூற்பாலையில் பணிபுரிந்த 300-க்கும் மேற்பட்ட ஆதி திராவிடத் தொழிலாளர்களுடைய நிலையைக் கருத்தில்கொண்டு, இந்த ஆலையைத் தொடர்ந்து இயங்கச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த 300 தொழிலாளர்கள் மட்டுமல்ல; தினக் கூலியாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய

அனைத்து தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய மக்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல தாட்கோ மூலம் SC, ST மக்களுக்கு கார், ஆட்டோ, லாரி மற்றும் தொழில் தொடங்குவதற்கான திட்டங்களுக்கு subsidy மற்றும் marginal money வழங்கப்பட்டு வந்தது. ஆனால், கடந்த 2 ஆண்டுகளாக marginal money, வழங்கப்படவில்லை. கிட்டத்தட்ட 1980 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட அந்த marginal money 2 ஆண்டுகளாக வழங்கப்படாததால் SC, ST மக்கள், புதிய தொழில் தொடங்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம்பிரபு, முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது இல்லையா? இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். முடியுங்கள்; நன்றி சொல்லி முடியுங்கள், உடனே.

**திரு. இரா. இராம்பிரபு:** ஆகவே, 1980-லிருந்து 2000 வரை இந்த marginal money வழங்கப்பட்டதில் சுமார் 75 கோடி ரூபாய் மற்றும் அதற்குண்டான 25 கோடி ரூபாய் வட்டியும் சேர்த்து 100 கோடி ரூபாய் வசூல் ஆகாமல் நிலுவையில் உள்ள காரணத்தால், இந்த 2 ஆண்டுகளாக தொழில் தொடங்க, வாகனங்கள் வாங்க, marginal money தாட்கோ மூலம் வழங்கப்படவில்லை எனத் தெரிகிறது. ஆகவே, கடந்த 25 ஆண்டுகளாக வாராக் கடன்களாக இருக்கக்கூடிய இந்த 100 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய ஏழையெளிய விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டு, அவர்களுக்கு விவசாயக் கடன்களை ரூபாய் 7,000 கோடி அளவிலே எப்படி அவற்றை இரத்து செய்து, எப்படி அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றி வைத்தார்களோ, அதேபோல இந்த 100 கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்து இந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். பிரேமா (குறுக்கீடு) சொல்லுங்கள்.

*பிற்பகல் 1-05*

**திரு. இரா. இராம்பிரபு:** இவற்றையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இறுதியாக நம்முடைய ஆதி திராவிடர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் தரமான உணவுகள் வழங்கப்படுவதற்குக் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, விடுதிகளில் இடப்



பற்றாக்குறை இருக்கிறது. அதாவது, 150 மாணவர்கள் தங்கக்கூடிய அந்த இடங்களில் 250 மாணவர்கள் தங்கக்கூடிய மோசமான சூழ்நிலை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால். முடித்துவிடுகிறேன். கடைசி point...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பிரேமா. (குறுக்கீடு) என்ன? கடைசி, கடைசி என்று எத்தனை தடவை கடைசி?

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள் அம்மா. திரு. இராம்பிரபு, சொல்லுங்கள், சொல்லுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. இரா. இராம்பிரபு:** ஒரு கோரிக்கைதான். முடித்துவிடுகிறேன் தலைவரே. என்னுடைய பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில், பரமக்குடி நகரில் ஆதி திராவிடர் பள்ளி மாணவர் விடுதிகளில் 150 மாணவர்கள் தங்கக்கூடிய அந்த விடுதிகளில் 350 மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய ஒரு அவலமான சூழ்நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் நாம் நிறைவு செய்ய வேண்டுமென்றால், கூடுதலாக, புதிதாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கடுத்து நம்முடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பிரேமா, நீங்கள் பேசுங்கள். திரு. இராம்பிரபு எத்தனை தடவை சொல்லிவிட்டேன் உங்களுக்கு. திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். உட்காருங்கள், திரு. இராம்பிரபு, உட்காருங்கள்.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கேயோ ஒரு மூலையில் கழகப் பணியாற்றிக் கொண்டிருந்த, சாதாரண

குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண ஏழைப் பெண்ணாகிய என்னை, இந்தப் பழமையும், பாரம்பரியமும், தொன்மையும் மிக்க சட்டமன்றத்தில், முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கும் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது அவினாசி தொகுதி வெற்றிக்காக அரும்பாடுபட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அனைவருக்கும், அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அவினாசி தொகுதியில் விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்ட நெடுநாளைய ஜீவாதாரக் கோரிக்கையான குளம், குட்டைகளை நீர் நிரப்பி, அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான தரிசு நிலங்களைப் பயிர் நிலங்களாக மாற்ற அவினாசி–அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இந்த அவினாசி–அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம் அவினாசி, திருப்பூரின் வடக்குப் பகுதி, பல்லடம், மேட்டுப்பாளையம், பவானிசாகர், கோபிசெட்டிப்பாளையம், பெருந்துறை, காங்கேயம் ஆகிய 8 தொகுதிகளில் உள்ள பல இலட்சம் விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நேரடியாகப் பயனடைவார்கள் என்பதை எனது அவினாசி தொகுதி மக்களின் சார்பாகப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது அவினாசி தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறை சார்பில் மேல்நிலைப் பள்ளி ஒன்று அமைத்துத்தரக் கேட்டுக்கொள்வதுடன், ஆதி திராவிடர் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை விரைவில் நிரப்பிடக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆதி திராவிடர் நலத் துறை சார்பில், இரண்டு புதிய மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது அவினாசி தொகுதியில், ஆதி திராவிட இன மக்கள் அதிகம் வசிக்கிறார்கள். இவர்கள் ஒரே வீட்டில் 2,3 குடும்பங்களாக நெருக்கடியில் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு அரசு நிலங்களைக் கையகப்படுத்தி, இலவசப் பட்டாக்கள் பெருமளவில் வழங்கிட வேண்டும். இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டுகிறபோது, அதன் பழைய மதிப்பீடு ரூபாய் 34,000/– என்பது, மிக மிகக் குறைவாக உள்ளது.



ஏனெனில், மணல், செங்கல், சிமெண்ட், கம்பி, ஜல்லி, கதவுகள் போன்ற கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வால் அந்தப் பழைய மதிப்பீட்டில் செய்யக் கடினமாக உள்ளது. தொகுப்பு வீடுகளுக்கு ரூபாய் 34,000/– என்பதை, ரூபாய் 50,000/– ஆக உயர்த்தி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அவினாசி தொகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருப்பூருக்கோ அல்லது சுமார் 45 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோவைக்கோ செல்ல வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, அரசுக் கலைக் கல்லூரி உருவாக்கித் தருமாறு அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது அவினாசி தொகுதியில், கோடைக் காலங்களில் தீ விபத்து ஏற்பட்டால், சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருப்பூர் தீயணைப்பு நிலையத்துக்குத் தகவல் கொடுத்து, தீயணைப்பு வண்டிகள் வரவேண்டியுள்ளன. போக்குவரத்து நெரிசல் மிகுந்த திருப்பூரிலிருந்து தீயணைப்பு வண்டிகள் வருவதற்குள் பல இலட்சம் மதிப்புள்ள உடைமைகள், உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இந்த அவல நிலையைப் போக்க, அவினாசியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர வேண்டுமாய் இந்த அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எனது அவினாசி தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனையில், போதிய மருத்துவர்கள் இல்லாததால், பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய நோயாளிகள், திருப்பூர் அல்லது கோவை மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது. அவினாசி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவர், இருப்பிட மருத்துவ அதிகாரி, பல் மருத்துவர், செவிலியர், உதவியாளர், துப்புரவு ஊழியர்கள் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும் இம்மருத்துவமனையில் generator மற்றும் AC வசதியுடன் கூடிய operation theatre இல்லாதது மிகப் பெரிய குறையாக உள்ளது. ஆகவே, இந்தக் குறைகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மேலும், அவினாசி ஒன்றியப் பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர்கள் பணிக்கு வரவேண்டியவர்கள் உரிய நேரத்தில் பணிக்கு வருவதில்லை. அதுவரை நோயாளிகள்

மணிக்கணக்கில் வரிசையில் காத்துக் கிடக்கிறார்கள். இது மிகவும் வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும், தாய், சேய் நல மையங்களில் அடிப்படை வசதிகள்கூட கிடையாது. குறிப்பாக, சேவூர் ஊராட்சிக்குட்பட்ட தாய், சேய் நல விடுதியில் கர்ப்பிணிப் பெண்கள் எடை பார்க்க, உரிய எடை அளவுகோல் கிடையாது. இதுபோன்ற குறைகளைப் போக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், அவினாசி மருத்துவமனையில் இதுவரை பிரேதப் பரிசோதனைக் கூடம் இல்லாதது, மிகப் பெரிய குறையாக உள்ளது. ஏதாவது சாலை விபத்தோ அல்லது எதிர்பாராத காரணமாக இறக்கவோ நேரிட்டால், அந்தப் பிரேதங்களைத் திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் தேவையில்லாத கால விரயமும், பண விரயமும், மன உளைச்சலும் ஏற்படுகிறது. ஆகவே, அரசு உடனடியாக போர்க்கால அடிப்படையில், பிரேதப் பரிசோதனைக் கூடம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அவசர கால ஊர்தி, Ambulance வழங்கி, பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது அவினாசி தொகுதியில், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் காலை 7-00 மணிமுதல் 8-00 மணிவரை திருப்பூர் பனியன் கம்பெனிக்கு உரிய நேரத்தில் செல்வதற்காக மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளில், பேருந்துகளில் படிக்கட்டுகளில் தொங்கிக்கொண்டு பயணம் செய்கின்றார்கள். இந்தக் குறிப்பிட்ட நேரத்தில் கூடுதல் பேருந்துகளை சேவூரிலிருந்தும், அன்னூரிலிருந்தும், கருமத்தம்பட்டியிலிருந்தும், நம்பியூரிலிருந்தும், புளியம்பட்டியிலிருந்தும் திருப்பூருக்கு இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அன்னூர், அவினாசி, புறநகர்ப் பகுதிகளுக்குக் கூடுதல் பேருந்துகளைப் பள்ளி நோங்களில் இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அவினாசி தொகுதியில் அன்னூர், அவினாசி ஊராட்சிகளில் போதிய துப்புரவுப் பணியாளர்கள் இல்லை. ஆகவே, துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

அவினாசி தொகுதியில் பெரும்பாலான அரசு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன. குறிப்பாக, வணிக வரி அலுவலகம், மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளை அலுவலகம், கால்நடை



உதவி இயக்குநர் அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம் போன்ற அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் உள்ளன. இவற்றுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள பெரிய குளங்கள், குட்டை ஏரிகள், தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளன. இதுகுறித்தும் அரசு உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். N.H. 47 அவினாசி – கோவை செல்லும் தேசிய நெடுஞ்சாலை, கைகாட்டிப்புதூரிலிருந்து ஆட்டையம்பாளையம்வரை செல்லும் சாலையின் இருபுறமும் கடைகள் ஆக்கிரமித்து உள்ளன. இதனால், போக்குவரத்து நெரிசல் அதிகமாகி வாகனங்கள் செல்ல சிரமமாக உள்ளது. ஆகவே, நான்குவழிச் சாலை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழில் புரிபவர்கள், பட்டு ஜரிகையை, மண்ணெண்ணெயில் ஊற வைத்து, பின்னர் நெசவு செய்ய வேண்டியுள்ளது. இதனால், மண்ணெண்ணெய் அதிக அளவில் தேவைப்படுவதால், நெசவாளர்களுக்குப் பொது விநியோக விலையில் போதுமான மண்ணெண்ணெய் குறைந்த விலையில் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விசைத்தறித் தொழில் அதிகமாக இருக்கின்ற சோமனூர், பல்லடம், அவினாசி, ஈரோடு, பள்ளிப்பாளையம் போன்ற பகுதிகளில் விசைத் தறித் தொழில் கூடங்களுக்கு ஒலி மாசு காரணம் காட்டி, மாசு கட்டுப்பாட்டு வாரியம் மின் இணைப்பு துண்டிப்பு போன்ற அதிரடி நடவடிக்கைகளில் இறங்குவதால், விசைத்தறித் தொழில் முடங்கி, பல இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடி நிலையை அரசு தீவிரமாகப் பரிசீலித்து, விசைத்தறித் தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 40-ல், நிலம் வாங்கும் திட்டத்தில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிருக்காக, மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டத்தைத் தொடருவோம் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். மகிழ்ச்சி. அதேசமயம் 50 சதவீதம் மானியம், 50 சதவீதம் கடன் என்பதை மாற்றி, 100 சதவீதம் மானியமாக அறிவிக்க வேண்டும்.

கிராமங்களில் உள்ள குளங்களைச் சீர்படுத்தி, அவற்றை மீன் வளர்ப்பதற்கு ஏதுவாக மாற்றி, ஆதி திராவிட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மீன் பிடித் தொழில் செய்ய ஆவன செய்ய வேண்டும். இதனால், ஆதி திராவிட மகளிர் மேம்பாடு அடைய முடியும். இதை அரசு செய்ய வேண்டும்.

ஆதி திராவிட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தற்போது மானியம் ரூ.10,000/-மும், வங்கிக் கடன் ரூ.15,000-மும் வழங்கப்படுகிறது. இதை மாற்றி, மானியமாக ரூ.15,000/-மும் வங்கிக் கடன் ரூ.10,000/-முமாக மாற்ற ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுநாயக்கர் சமூகத்திற்கு ST சாதிச் சான்று வழங்கி நிறுத்தியுள்ளனர். அவர்களுக்கு, கோவை மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு, மீண்டும் வழங்க அரசு முன்வர வேண்டுமென்று அரசிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழமையும், தொன்மையும், பாரம்பரியமும் மிக்க இந்த மாமன்றத்தில், குறிப்பாக இந்தப் பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையில், எனது அவினாசி தொகுதி மக்களின் கோரிக்கைகளை எடுத்துரைக்கும் வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, கோடானுகோடி நன்றியை (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பிலும், எனது அவினாசி தொகுதி மக்கள் சார்பிலும் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பிரேமா அவர்கள், தற்பொழுது அவர்கள் தொகுதியில் உள்ள குறைகளை இங்கு வரிசையாக எடுத்துரைத்தார்கள். கடந்த 5 வருடங்களாக, அவர்களுடைய தலைவி அம்மா அவர்கள்தான் ஆட்சி செய்தார்கள். இதுவரையிலும் எந்தத் திட்டங்களும் செயல்படுத்தவில்லையா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்காக வாழ்நாளெல்லாம் போராடிய வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் போதித்த சமூக நீதித் தத்துவத்தில் எள்ளளவும் பிசகாமல், பேரறிஞர் அண்ணா வகுத்துக் காட்டிய அரசியல் நெறியில், ஏறுபோல், பீடுநடைபோட்டு, "தன்னிகரில்லாத தமிழ்" என்று தாரணி போற்றும் நம்முடைய தமிழ்த் தாயாம் செந்தமிழுக்கு உயர்தனிச் செம்மொழி என்ற அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்து, ஒன்றேகால் கோடி ஆதி திராவிட மக்களின் ஏக்கங்களைத் தீர்த்து, அவர்களின் எண்ணங்கள் ஈடேறும்வகையில், ஏற்றமிகு திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக, அகில இந்தியாவிற்கே அரசியல் சாணக்கியச் சக்ரவர்த்தியாக ஐந்தாம் முறையாகத் தமிழ்நாட்டின் அரியணையில் அமர்ந்துள்ள தமிழினத் தலைவர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

***"அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா***
***மானம் உடையது அரசு"***

என்ற வள்ளுவத்தின் வழி நடந்து, 2001-ல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் ஏழை, எளிய நலிந்த சமுதாயத்தைச் சார்ந்த என்னை, எங்கள் நாகனாகுளம்-கண்ணனேந்தல் ஊராட்சியில் ஒரு பொது Ward-ல் நிறுத்தி, உறுப்பினராக்கியது மட்டுமல்லாமல், ஊராட்சி ஒன்றியத்தின் தலைவியாகவும் ஆக்கி, தற்பொழுது வரலாற்றுச் சிறப்புடைய இம்மாமன்றத்தில் உறுப்பினராக்கியதுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அமைச்சர் பொறுப்பையும் தந்து, நான் கனவிலும் நினையாத சிறப்பை வழங்கியுள்ள எங்கள் அருமைத் தலைவர் முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதங்களுக்கு என் பணிவான வணக்கத்தையும், நன்றியினையும் காணிக்கையாக்குகின்றேன்.

ஏற்றுக்கொண்ட இலட்சியத்திற்காகவும், கொள்கைக்காகவும், எந்த நிலையிலும் யாருக்கும் வளைந்து கொடுக்காமல், நேர்மையான சிந்தனையுடன் நிதானம் தவறா நெறியுடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் எங்கள் அவை முன்னவர், மாண்புமிகு இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் தீட்டிய உயிரோவியம், தமிழ் ஈன்றெடுத்த தவப் புதல்வர், சூரியனின் இரவல் வெளிச்சத்தில் ஒளிரும் சந்திரன் அல்ல, சூரிய சக்தியை உள்வாங்கிக்கொண்டு, சொந்தச் சுடர்கொண்டு எரியும் இன்னோர் இளஞ்சூரியன். மெய்வருத்தம் பாராமல் கண் துஞ்சாமல், கருமமே கண்ணாக, தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியே தன் வாழ்நாள் இலட்சியமாகக்கொண்டு, அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தன்மீது தொடுக்கப்படும் துன்பக் கணைகளை எல்லாம் மலர்களாக எண்ணி ஏற்று, மாற்றாரும் மருளும்வகையில் தொண்டாற்றும் எங்கள் தளபதி, தமிழகத்தின் உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

தென்னாட்டுச் சிங்கம், அண்ணன் அஞ்சா நெஞ்சன் அவர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன். எனது வெற்றிக்காகப் பாடுபட்ட மாவட்டச் செயலாளர் அண்ணன் மூர்த்தி அவர்களுக்கும், கழகத்தின் முன்னோடிகளுக்கும், கூட்டணிக் கட்சிகளின் மதிப்பிற்குரிய தலைவர்களுக்கும், பாசத்திற்குரிய தோழர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில், மீண்டும் தலைவர் கலைஞர் ஆட்சி மலர வேண்டும் என்பதற்காக வாக்களித்த சமயநல்லூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாமன்றத்தில் பேசவைத்து, எனக்கும், எங்கள் குடும்பத்திற்கும் பெருமை சேர்த்த ஒப்பற்ற தலைவர், ஒட்டுமொத்த தமிழினத்தின் தனிப் பெருந்தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

"தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பாட்டாளி, கூலி, ஏழை மக்களை மிருகங்கள்போல் நடத்துகின்றவர்கள் எனக்குக் கண்வலியாய் இருப்பவர்கள்; அவர்களை முழு மனிதர்களாக ஆக்குவதுதான் எனது கண் நோய்க்குப் பரிகாரம்" என்ற தந்தை பெரியாரின் புரட்சி முழக்கத்தை முழுமையாக எய்த, அவர் கண்ட கனவை நனவாக்கும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாடுபடுவதை இந்த நாடே அறியும்.



தாழ்த்தப்பட்ட மக்கள், இந்திய அளவில், பல்வேறு உரிமைகளைப் பெற, காலமெல்லாம் போராடியவர், இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள். அவருக்கு சென்னை மாநகரில் இராஜா அண்ணாமலைபுரத்தில் அழகான தோற்றத்தில் மணி மண்டபம் ஒன்றை அமைத்து, அதனை 10–6–2000 அன்று திறந்து வைத்து, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு மரியாதையைத் தேடிக் கொடுத்தவர், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக, தமிழக வரலாற்றில் முதன்முதலாக 13–11–1969 அன்று ஏ.என். சட்டநாதன் கமிஷனை அமைத்தவர், இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அச் சட்டநாதன் குழு வழங்கிய பரிந்துரைகளை ஏற்று, 7–6–1971 அன்று, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதுவரை இருந்த 16 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை, 18 விழுக்காடாக உயர்த்தித் தந்து, நலிந்த நிலையில் விழுந்து கிடந்த சமுதாயங்கள் எழுந்து நடந்து, சமூகப் பொருளாதார நிலைகளில் உயர்ந்து, உன்னத நிலை எய்திட, வழிவகுத்துத் தந்த வரலாற்று நாயகர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் என்பதை இந்நேரத்தில் நன்றி உணர்வோடு பேரவையில் தெரிவிக்க விரும்புகிறேன்,

அதுமட்டுமல்லாமல், மலைவாழ் இன மக்கள் அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் உரிய இடங்களைப் பெற்று, வாழ்வில் உயர வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கென்று ஒரு சதவிகித தனி இட ஒதுக்கீட்டை 1990 ஆம் ஆண்டில் உருவாக்கி, புதிய வரலாறு கண்ட உன்னதத் தலைவர். தமிழகத்திலுள்ள மலைப் பிரதேசங்களில் வாழக்கூடிய, பழங்குடியின மக்களுடைய வாழ்க்கை வளம்பெற, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் நல்ல முறையில் கண்காணிக்கப்பட வேண்டுமென்பதை உணர்ந்து, பழங்குடியினர் நல இயக்ககம் என ஒரு புதிய துறையை, 1–4–2000 அன்று ஏற்படுத்தி, மலைவாழ் இன மக்களின் முன்னேற்றத்திற்கு உறுதியான முறையில் வழிவகுத்தவர், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

அரசு ஊழியர்களுக்கு எண்ணற்ற சலுகைகளை, தேர்தல் வாக்குறுதியில் சொன்னவாறு கொடுத்துள்ளார் நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நாடே போற்றுகிறது.

இதன்மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் 445 ஆசிரியர்கள், ஒப்பந்த முறை நியமனத்திலிருந்து மீண்டு, தொகுப்பூதியப் பிடியிலிருந்து விடுபட்டு, காலமுறை ஊதியம் பெற்றுக் களிப்புறுகிறார்கள். இதற்காக ஏழைகளின் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொருளாதாரப் பின்னடைவாலும், சமூகச் சீர்கேட்டாலும், பாதிக்கப்பட்டிருக்கும் ஆதி திராவிட பழங்குடியின சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள், விழிப்புணர்வு பெறுவதற்குக் கல்விதான் அவசியம் என்பதை உணர்ந்து, அதற்கான சூழ்நிலையை உருவாக்கிட, அரசு பல வகைகளிலும் முயன்று வருகிறது. ஆதி திராவிடர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ஆரோக்கியமான சூழ்நிலைகள் அமைந்திட வேண்டும் என்பதற்காக விடுதிகளின் பராமரிப்புக்கென, 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, விடுதிகளை முறையாகப் பராமரித்திட நடவடிக்கை எடுத்து வருகிறது இந்த அரசு.

ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து பெண்களை மீட்க வேண்டுமென்றால், பெண் கல்வி அவ்சியம் என்ற தலைவர் கலைஞர் அவர்களது கருத்திற்கேற்ப, பெண் கல்வியை ஊக்குவித்து, பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கும்வகையில், படிப்பை இடையில் விட்டுவிடும் மாணவிகள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் சிறப்பு உதவித் தொகை வழங்கப்படுவது உட்பட, ஆதி திராவிட மாணவர்களுக்கு மொத்தத்தில் 6 கோடி ரூபாய் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

ஆதி திராவிட பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கிடையே கல்வி வளர்ச்சியில் ஆர்வத்தை ஏற்படுத்திடும்வகையில், ஓர் ஆரோக்கியமான போட்டியை உருவாக்கி, 10, 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவிகளுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டப்படி ஆதி திராவிட, பழங்குடி இனத்தவர், கிறிஸ்தவ ஆதி திராவிடர் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் 12 ஆம் வகுப்பில் மாநில அளவில் முதலிடம் பெறும் ஒரு மாணவனுக்கும், ஒரு மாணவிக்கும் வழங்கப்பட்ட பரிசுத் தொகை 5,000 ரூபாய் என்று இருந்ததை, 25,000 ரூபாய் எனவும், 10 ஆம் வகுப்பில் மாநில அளவில் முதலிடம் பெறும் ஒரு மாணவனுக்கும், ஒரு மாணவிக்கும் வழங்கப்பட்ட பரிசுத் தொகை, 3,000 ரூபாய் என்பதை 10,000 ரூபாய் எனவும், 1998 ஆம் ஆண்டில் உயர்த்தித் தந்த மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் தமது திருக்கரங்களினாலே, இப்பரிசுத் தொகைகளைச் சான்றிதழ்களுடன் இம்மாணவ, மாணவிகளுக்கு 3–7–2006 அன்று வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்திய காட்சி, ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவியச் செல்வங்களின் கல்வி வளர்ச்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை அருமையாக வெளிப்படுத்திய நிகழ்ச்சி என்பதனை மிகுந்த பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

25 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்டோர் பொருளாதார வளர்ச்சிக்காக, தமிழகத்தின் வரலாற்றிலேயே முதன்முறையாக டாக்டர் கலைஞர் தலைமையிலான இந்த அரசு, "சிறப்பு மாநில நிதியுதவித் திட்டம்" என்ற திட்டத்தை, தனிப்பட்ட பயனாளிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கியுள்ளது. பொருளாதார, சமூக முன்னேற்றம் உருவாக வேண்டும் என்பதை உணர்ந்து, தாட்கோமூலம் வருமானம் ஈட்டும் திட்டங்களுக்கு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்து மதங்களிலும் இருக்கின்ற ஆதி திராவிடர்களுக்கும் கிடைத்திட, தமிழகத்தின் வரலாற்றிலேயே முதன்முறையாக டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு விரிவுபடுத்த முடிவெடுத்துள்ளது.

பிற்பகல் 1–25

இந்தக் கணினி உலகில் அனுதினமும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மாறிவரும் சூழ்நிலையில், ஆதி திராவிட இளைஞர்களுக்குப் பயிற்சி தேவை என்பதை உணர்ந்து, உடனே வேலைவாய்ப்புக் கிடைக்க தாட்கோமூலம் கணிசமான எண்ணிக்கையில் பயிற்சி கொடுக்கப்பட இருக்கிறது.

மனிதனை அமர வைத்து மனிதனே இழுத்துச் சென்ற கைரிக்ஷா கொடுமையை ஒழித்த டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில், இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியதைப்போல, மனிதக் கழிவை மனிதனே கையால் அள்ளும் கொடுமையை நிறுத்தி, அந்தப் பணியை ஆற்றிவருபவர்களுக்குத் தகுதியான வேறு பணி வழங்கப்படும் என திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அத்தொழிலில் ஈடுபட்டு இருந்தவர்களின் மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டிய நிலையிலிருந்த ஏறத்தாழ 10,000 பேருக்கு அவரவர் விருப்பத்திற்கேற்ப, தேர்ந்தெடுக்கப்படும் துறைகளில், தேசிய

மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 50 கோடி ரூபாய் செலவில் மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்திட 3-7-2006 அன்று ஆணையிட்டு, துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்வில் புத்துணர்வை ஏற்படுத்தியவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதனைப் பேரவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு உட்கூறு திட்டம், கடந்த ஐந்தாண்டுகளாக நல்ல முறையில் செயல்படுத்தப்படவில்லை என்பதைத் தமிழ்ச் சமுதாயத்தின் அரணாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் உணர்ந்து, அதைத் தனது தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. உதாரணமாக, கடந்த ஆண்டுகளில், குறிப்பாக, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின், வருடாந்திர ஆண்டுத் திட்டத்தில் சிறப்பு உட்கூறு திட்டத்திற்கென 2002-2003-இல் 1.92 சதவிகிதமும், 2003-2004-இல் 2.5 சதவிகிதமும், 2004-2005-ல் 2.18 சதவிகிதமும், 2005-2006-ல் 1.55 சதவிகிதமும்தான் ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. இது மிகவும் குறைந்த ஒதுக்கீடு என்பதால், தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும்பொருட்டு, இவ்வாண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில், 1,128 கோடி ரூபாய், அதாவது 9 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படவுள்ளது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்தில் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் மிகப் பெரிய சமூகப் பொருளாதார மாற்றம் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப் பல்வேறு வகையில் நன்மை பயக்கும் பல திட்டங்களை இத்துறை செயல்படுத்த இருக்கிறது. இதுமட்டுமல்லாமல், 2006-2007-ல் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த இவ்வரசு முடிவெடுத்துள்ளது.

புதிய அறிவிப்புகளுக்கு வருகிறேன். ஒட்டுமொத்த தமிழினத்தின் சிந்தனைச் சிற்பியும், இந்தியத் திருநாட்டின் வழிகாட்டியுமான முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சி ஐந்தாவது முறையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்நன்னாளில், பதவி ஏற்ற 100 நாட்களுக்குள்ளாக தேர்தல் அறிக்கையின் பெரும் பகுதியை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில், இன்று மேலும் பல புதிய திட்டங்களை அறிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம்பிரபு அவர்கள், தன்னுடைய தொகுதியிலுள்ள விடுதியில் அதிகமான குழந்தைகள் படிக்கிறார்கள் என்றும், அதிகமான



குழந்தைகள் படிப்பதற்கு ஏற்ற இடவசதி ஏற்பாடு செய்து தர வேண்டுமென்றும் கூறினார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 1,178 ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகள் உள்ளன. இவ்விடுதிகளில் தங்கிப் படிக்க இடப் பற்றாக்குறை உள்ளது. எனவே, இதனைக் குறைக்கும் விதத்தில், இவ்விடுதிகளில் 35 இலட்சம் ரூபாய் செலவில் 1,000 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு முடி வெட்டுதல், சோப்பு மற்றும் எண்ணெய் வாங்குதல் போன்ற செலவினங்களுக்கு, பள்ளி மாணவர்களுக்கு 15 ரூபாய் வீதமும், கல்லூரி மாணவர்களுக்கு 25 ரூபாய் வீதமும் தற்பொழுது வழங்கப்படுகிறது. ஆனால், இனிமேல் பள்ளி மாணவர்களுக்கு மாதம் 25 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு மாதம் 35 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கென ஒரு கோடி ரூபாய் செலவினமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளுக்கு ஈர அரைவை இயந்திரம் (Grinder) வழங்கப்படும். ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் 100 அரைவை இயந்திரங்கள் 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள், சமுதாய நலக் கூடங்களுக்கு 14 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கியுள்ளார்கள் என்று வேதனையோடு கூறினார். நாங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை அணுகி, எங்களுக்குச் சமுதாயக் கூடங்கள் இன்னும் வேண்டும் என்று கேட்டபொழுது, மீண்டும் 10 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு, ரூபாய் 60 இலட்சம் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள் என்பதை இங்கு பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொது அறிவை வளர்க்கும்பொருட்டு, இந்திய ஆட்சிப் பணி என்னும் மாநில மற்றும் மைய அரசுகளில் உள்ள உயர் பதவிகளைப் பெறுவதற்காக, தங்களைத் தேர்வுக்குத் தயார் செய்ய உதவும்பொருட்டு, ஆதி திராவிடர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, அவற்றின் தொடர்புடைய விடுதிகளுக்கு, "Competition Success Review" போன்ற

பொது அறிவுப் புத்தகங்களை வழங்கிட, தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாநில சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்கீழ், இந்த நிதியாண்டில், முதன்முறையாக ஆதி திராவிட, பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட 25 கோடி ரூபாயில் இம்மக்களுக்கு உடனடியாக பயன்தரக்கூடிய பின்வரும் திட்டங்கள் தாட்கோ மூலம் நடைமுறைப்படுத்தப்படும்:

2,500 இளைஞர்களுக்கு உணவு தயாரித்தல், பதப்படுத்துதல் மற்றும் வழங்குதல் குறித்த (Catering Technology) ஓர் ஆண்டு காலப் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2,000 ஆதி திராவிட மகளிருக்கு ஓர் ஆண்டு கால செவிலியர் உதவியாளர் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 5,000 இளைஞர்களுக்கு power தையல் machine இயக்கப் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 300 இளைஞர்களுக்கு BPO, Call Centre மற்றும் விமான ஓட்டுநர் பயிற்சி போன்ற உடனடி வேலைவாய்ப்புப் பெறக்கூடிய சிறந்த பயிற்சிகள் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட நலத் துறைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் தங்கிப் பயிலும் 1,000 மாணவ, மாணவியர்களுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசப் பயிற்சி (Communication Skills and Personality Development Training) அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொழிற் பயிற்சிகள் அனைத்தும் 10 கோடி ரூபாய் செலவில் இந்த நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6,000 ஆதி திராவிடப் பயனாளிகளுக்குத் தனி நபர் கடன் திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க 7 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 650 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 13,000 பயனாளிகளுக்கு, சுய தொழில்கள் தொடங்க 8 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஆதி திராவிட இளைஞர்களுக்கு



வேலைவாய்ப்பை அதிகரிக்கும்பொருட்டு, ஒரு கோடி ரூபாய் செலவில் 500 ஆதி திராவிடப் பட்டதாரிகளுக்கு, சென்னையில் கணினிப் பயிற்சி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலைவாய்ப்பினை அதிகரிக்கும்பொருட்டு, பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்த 2,000 ஆதி திராவிட இளைஞர்களுக்கு 2 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில், கணினி மென்பொருள் பயிற்சி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்கள் பயனடைய மூன்று கோடி ரூபாய் செலவில் 2,300 இளைஞர்களுக்குச் சிறப்புத் தொழில் நெறிப் பயிற்சி வழங்கப்படும்.

ஆறு கோடி ரூபாய் செலவில், 10,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உடனடி வேலைவாய்ப்புப் பெறத்தக்க தொழிற்பயிற்சிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 3,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் சுய தொழில் தொடங்குவதற்காக ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில், முதன்முதலில் மகளிர் சுய உதவிக் குழுக்களை நிறுவி, இன்று அது ஓர் ஆலமரம் போல் வளர்ந்து, விரிந்து உருவாகியுள்ளதற்குக் காரணமாக இருக்கும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்பேரிலும், தமிழினத் தளபதியான உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழும் இன்று இயங்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும்பொருட்டு, 30,000 பயனாளிகளுக்கு 27 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மிக்க மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும்பொருட்டு, தனிநபர் கடன் வழங்கப்படுகிறது. இதன்மூலம் 6,500 பயனாளிகளுக்கு எட்டுக் கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் மேம்பாட்டினைக் கருத்தில்கொண்டு, நிலம் வாங்கும் திட்டத்தின்கீழ் 8,000 மகளிர் பயன்பெற ஏதுவாக 12 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கோடியே 32 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் செலவில், 5 அரசு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்

என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஒரு கோடியே 77 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவில், 5 அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"பெண்கள் நாட்டின் கண்கள்" என்ற பொன்மொழிக்கேற்ப, அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ற சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பெருக்கும்பொருட்டு, 34 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 14 அரசு ஆதி திராவிடர் நலப் பெண்கள் விடுதிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டித் தரப்படும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கு நல்ல இடவசதி கொடுக்கும்பொருட்டு, 99 இலட்சம் ரூபாய் செலவில் 15 அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 30 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்க வேண்டும் என்ற நோக்குடன், ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில், 40 அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தனியாக எழுதும் மேசைகளுடன் நீள இருக்கைகள் வழங்க, டாக்டர் கலைஞர் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுத் தேர்வில் ஆதி திராவிட மாணவ, மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு 50 இலட்சம் ரூபாய் செலவில் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ. மாணவியர்க்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும் என்பதை இம்மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகளில், தகுந்த வசதிகளைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கில் 99 இலட்சம் ரூபாய் செலவில், அரசுக் கட்டடத்தில் உள்ள 585 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு, ஒரு விடுதிக்கு 15 மின் விசிறி என்ற வீதத்தில் 8,775 மின் விசிறிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-35

கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவ, மாணவியரின் வசதிகளுக்காக 95 இலட்சம் ரூபாய் செலவில் அரசு ஆதி திராவிடர் நலக் கல்லூரி விடுதிகளிலுள்ள, 2,706 மாணவர்களுக்கு அறைகலன்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழங்குடியின மாணவ, மாணவிகள், தங்கள் படிப்பை இடையில் விட்டுவிடுவதைத் தடுக்கும்பொருட்டு, 49 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் செலவில், 2 அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழங்குடியின மாணவ, மாணவியர்க்கு, 30 இலட்சம் ரூபாய் செலவில், மூன்று அரசு உறைவிட மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுத் தேர்வில் பழங்குடியின மாணவ, மாணவியர், அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு, 26 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்பதாவது வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்க்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறு இலட்சம் ரூபாய் செலவில், 12 கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள், தலைமைச் செயலக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகள் 50 முதல் 60 பேர்கள் தங்கிப் பயில்வதற்கு ஓர் அரசினர் மாணவியர் விடுதி திருவாரூரில் நடப்பு நிதியாண்டில் தொடங்கப்படும் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற சீரிய நோக்குடன் நமது தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், 1-4-2000 முதல் அம்மக்களுக்கென தனியாக ஓர் இயக்குநரகத்தை உருவாக்கித் தந்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அம்மக்களின் குழந்தைகள், பள்ளிகளில், கல்லூரிகளில், பணிகளில் சேர்வதற்குச் சாதிச் சான்றிதழ் மிகவும் இன்றியமையாததாகும். இந்தச் சாதிச் சான்றிதழ் வழங்குவதில், கடந்த அ.தி.மு.க. ஆட்சி அக்கறையின்மையுடன் செயல்பட்டது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி அமைத்த 100 நாட்களுக்குள்ளாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் இந்த மக்களின் நலனுக்காக, ஆங்காங்கே ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், மானுடவியல் நிபுணர்களைக் கலந்தாலோசித்தும், இம்மக்களுக்கு மானுடவியல் நிபுணர்களின் பரிந்துரையின் அடிப்படையில், உடனடியாக வருவாய்க் கோட்டாட்சியர் சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 4-ன்மீது, மாண்புமிகு பேரவை உறுப்பினர்களால் 302 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கோரிக்கைகளையும், வெட்டுத் தீர்மானங்களையும் படித்துப் பார்த்தேன். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துகளுக்கும் வேண்டிய விளக்கங்களை அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன். உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய கருத்துகளை, திட்டங்களை நன்கு பரிசீலனை செய்து, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நல்லதொரு சிறப்பான உரையை இங்கே நிகழ்த்திய



மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பு உட்கூறு திட்டத்தின்கீழ் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். தேர்தல் அறிக்கையிலே அறிவித்திருந்தோம் என்றும், அதன்படி இங்கே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையினை இங்கே எடுத்து வைத்தார்கள். அதுமட்டுமல்ல; இதற்கு முன்பிருந்த அரசு ஒரு சதவீதம், ஒன்றரை சதவீதம், இரண்டு சதவீதம்தான் ஒதுக்கியிருந்தது. ஒன்பது சதவீதம் ஒதுக்கியிருக்கிறோம் என்று இங்கே சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பு உட்கூறு திட்டத்தின்கீழ் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 18 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும் என்று நான் கருதுகின்றேன். ஆக, இங்கே நாம் ஒதுக்கியிருப்பது அதில் பாதிதான் என்பதை மட்டும் சொல்லி. (மேசையைத் தட்டும் ஒலி) கைதட்டுவதற்கு ஒன்றும் இல்லை. 11,500 கோடி ரூபாய் திட்டத் தொகை. (குறுக்கீடு) 12,500 கோடி ரூபாய் திட்டத் தொகையிலே ஒதுக்கப்பட வேண்டிய தொகை, ஆதி திராவிடர் பழங்குடி மக்களுக்காக – ஆதி திராவிடர்களுக்காக – பழங்குடி மக்களை இதில் சேர்க்கக் கூடாது – 2,250 கோடி ரூபாய். இதிலே பகுக்கப்பட்ட, Divisible Schemes என்று 1,126 கோடி ரூபாயைக் காட்டியிருக்கின்றீர்கள். Indivisible Schemes என்று 1,299 கோடி ரூபாயை இதிலே காண்பித்திருக்கின்றீர்கள். காண்பித்தால் போதாது. இங்கே இருக்கின்ற முன்னாள் ஆட்சியைச் சார்ந்த நண்பர்கள்கூட, இங்கே கைதட்ட முனைந்தார்கள். மன்னிக்க வேண்டும். இந்தச் சபையிலே இந்தக் கருத்தை, ஆயிரம் முறை எடுத்துப் பேசியவன் நான். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட நன்றாக அறிவார்கள். எந்த அளவிற்கு இந்த மக்கள் இந்த உட்கூறு திட்டத்தின்கீழ் ஏமாற்றப்படுகின்றார்கள், அடிவயிற்றிலே அடிக்கப்படுகின்றார்கள் என்ற உண்மையைப் பலமுறை இந்த மன்றத்திலே நான் எடுத்து வைத்தவன். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் மாண்புமிகு–

பிற்பகல் 1–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியை மட்டும் கேட்டு முடியுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** முடித்துவிடுகிறேன், பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No debate. கேள்வியை மட்டும் சொல்லுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** கடந்த 2002–2003 ஆம் ஆண்டிலே, சிறப்பு உட்கூறு திட்டத்தின்கீழ், பல்பூண்டு Programme என்ற திட்டத்திலே, ரூபாய் 147 இலட்சம். இது எப்படிச் செலவிடப்பட்டது? சம்பளத்திற்காக ரூ.96 இலட்சம், அகவிலைப்படி ரூ.39 இலட்சம், பயணச் செலவு ரூ.6 இலட்சம் என்று—147 இலட்சம் ரூபாய் — பெட்ரோல் போட்டது, வாகனம் போட்டது, வாடகை எடுத்தது என்று ரூ.147 இலட்சத்திற்குக் கணக்கைக் காட்டி, ஒரு ரூபாய்கூட இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செல்லாத இந்தத் திட்டம் ஏன் செயல்படுத்தப்படவேண்டும் என்றக் கேள்வியினை இந்த அவையிலே நான் எழுப்பக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கே கொடுத்திருக்கின்ற இந்தத் திட்டங்கள்கூட, 2,250 கோடி ரூபாய்க்கு இங்கே கொடுத்திருக்கிறீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் ஜெயக்குமார், கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அமைச்சர், ஒரு மானியத்தின்மீது, தன்னுடைய பதிலில் முழு விளக்கத்தையும் சொல்லி பேசியதற்குப் பின்னர், ஏதேனும் ஐயம் இருந்தால் ஒரு கேள்வியைக் கேட்கலாமே தவிர, ஒரு வாதம் நடத்துவதற்கு அனுமதிக்கமுடியாது. அது நியாயமான கருத்தா, அல்லவா என்பது பின்னர். ஆனால், அதை ஒரு வாதமாக ஆக்கி, பின்னர் தொடர்ந்து பேச ஆரம்பித்தால், இந்த மானியக் கோரிக்கைமீது அமைச்சர் பதில் சொன்னதற்குப் பொருள் இல்லாமல் போய்விடும். மற்றொன்று, நிதியமைச்சர் என்ற முறையில் நான் சொல்ல விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக, மாநிலத்தில் ஆதி திராவிட மக்களுக்காகத் தனிப்பட்ட முறையில் அவர்களுக்கென்று பங்கிட்டுச் செலவிடப்படுகிற தொகை 9 சதவிகிதம். ஆனால், சமுதாயத்திலே செலவாகிற பல்வேறு செலவுகளில் ஆதி திராவிட மக்களும் பங்கு பெறுகிறார்கள். மத்திய அரசுகூட 18 விழுக்காடு மொத்த நிதிநிலை அறிக்கையிலே தனியாக ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கக்கூடிய வாய்ப்பு, மத்திய அரசுக்குக்கூட கிடையாது. ஒரு theory, 18 விழுக்காடு அந்த மக்கள் இருக்கிறார்கள், 18 விழுக்காடு அவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பது. அதிலே பிற வகையில் செய்யப்படுகிற செலவுகள் எல்லாம் கூட, குடிநீர்த் திட்டம், வேறு பல திட்டங்களுக்குச் செலவு பண்ணுகிறபோது தாழ்த்தப்பட்ட மக்களும் பங்குபெறுகிறார்கள். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு 9 விழுக்காடு வைத்திருப்பது, 18 விழுக்காட்டை அவர்கள் பெறுவதற்கான சூழலை உருவாக்குவதற்காகத்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



## கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. இராம்பிரபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி இளமதி சுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.



திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.



**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன்

**திரு. செ. தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். தேன்மொழி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. அருண்மொழித்தேவன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. சுப்ரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.537,82,09,000/-, மூலதனக் கணக்கில் ரூ.25,26,27,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டிய" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-8-2006) வெள்ளிக்கிழமை, காலை 9-30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

87. மானியக் கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

88. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு–செலவு செயலாக்கத் திட்டம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

89. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

90. தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006–2007. (தமிழ்)

# இணைப்பு

(72 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்."

–திருவள்ளுவர்

இக்குறள்நெறியின்படி, அனைத்துத் தரப்பு மக்களும் சமூகத்தில் எக்குறையுமின்றி வாழவேண்டுமென்பது இவ்வரசின் நோக்கம். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்கள் தொகை 6.24 கோடியில், 118.58 இலட்சம் ஆதி திராவிடரும் 6.51 இலட்சம் பழங்குடியினரும் அதாவது முறையே 19% ஆதி திராவிடர் மற்றும் 1.04% பழங்குடியினரும் ஆகும். இந்த மக்கள் இன்னும் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள நிலையை இவ்வரசு உணர்கிறது. மேலும், ஆதி திராவிட மக்களின் எழுத்தறிவு விகிதம் 63.19%, பழங்குடியினரது எழுத்தறிவு விகிதம் 41.53% ஆக உள்ளது. இது மாநிலத்தின் பொது எழுத்தறிவு விகிதமான 73.45% உடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது. இதற்குக் காரணம், பொருளாதார நலிவும், தரமான கல்வியின்மையும், சமூக ஏற்றத்தாழ்வுகளும்தான். இவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. எனவே, இவற்றைக் களைந்து இம்மக்களின் வாழ்க்கையை மேம்பாடு அடையச் செய்ய, வலுவான பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் தரமான கல்வி அளித்தல் போன்றவற்றின் மூலம் செய்ய முடியும் என்பதை உணர்ந்து அதற்கான முழு முயற்சியில் இந்த அரசு தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

[2006 ஆகஸ்ட் 24

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் சமூகத் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு கல்வி ஒன்றே அவர்களுக்குப் பாதுகாப்பான ஆயுதமாக விளங்க முடியும். எனவே, இச்சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கு தரமான கல்வி அளிப்பதில் இந்த அரசு முன்னுரிமை அளித்துள்ளது. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டில், இத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.567.83 கோடியில், சுமார் 75%-க்கும் அதிகமான நிதி, கல்வி சார்ந்த திட்டங்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்துறையின்கீழ் 1,048 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும், 283 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் சுமார் 2,01,386 மாணவர்களும், பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 36,447 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

## I. ஆதி திராவிடர் நலம்

### 1. அனைத்து மதங்களிலும் இருக்கின்ற ஆதி திராவிடர்களுக்கு அரசு சலுகைகள் நீட்டிப்பு

ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்து மதங்களிலும் இருக்கின்ற ஆதி திராவிடர்களுக்குக் கிடைத்திட வழிவகை செய்யப்படும் என்ற முடிவினை இந்த அரசு எடுத்துள்ளது.

### 2. கல்விக் கட்டணச் சலுகை

கல்வியின் மூலம்தான் சமூக மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்த இந்த அரசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அனைவருக்கும் கல்வி புகட்ட வேண்டியதைத் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனைச் செயல்படுத்த, அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ மாணவியர்கள், வருமான வரம்பின்றி கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கல்விச் சலுகை இளங்கலைப் பட்டப்படிப்பு வரை வழங்கப்படுகிறது. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ.154.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு [illegible]



2006 ஆகஸ்ட் 24]

### 3. (அ) சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

மத்திய அரசு அல்லது மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை பெற மாணவ, மாணவியரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் முறையே ரூ.1,00,000/- மற்றும் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இந்த வருமான வரம்பிற்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுக்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ.90.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 7,000 மாணவ மாணவியர் பயன்பெறுவர்.

### (ஆ) முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவிகளுக்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

மத்திய அரசு மற்றும் மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பிற்கு மேற்பட்ட முதுகலை பட்டப்படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 1,090 மாணவியர் பயன்பெறுவர்.

### 4. பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம்

*"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல*

*மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா"*

–கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

பெண்ணினத்தினை ஊக்குவிக்க பெண் கல்வி வேண்டும் என்பதை உணர்ந்த இவ்வரசு, அதன் பொருட்டு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளின் 100% பள்ளிச் சேர்க்கையை உறுதிப்படுத்திடும் நோக்கத்தோடு பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகள் 60,000 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஆதி திராவிட மாணவிகளைப் பொறுத்தவரையில் கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், விருதுநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. பழங்குடியின மாணவிகளைப் பொறுத்தவரையில் சென்னையை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. 6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவியர் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் 30,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் 10 மாதங்களுக்கு சென்னையைத் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5. கல்வி உதவித் தொகை

#### (அ) ப்ரி மெட்ரிக் உதவித் தொகை

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கள் படிப்பினைத் தொடர ஏதுவாக பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய மாணவ மாணவியர் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர். இதன்பொருட்டு ஏற்படும் இழப்புத் தொகை, அந்தந்த கல்வி நிறுவனங்களுக்கு இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

இதேபோல், 10 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்கள் தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். இத்தொகை முழுவதும் இத்துறையால் அரசுத் தேர்வுத் துறைக்கு வழங்கப்படுகிறது.



#### (ஆ) துப்புரவுத் தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான ப்ரி மெட்ரிக் உதவித் தொகை திட்டம்

துப்புரவுத் தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கு சாதி, மதம் மற்றும் வருமான வரம்பின்றி விடுதியில் தங்காது பயிலும் மாணவ மாணவியருக்கு மாதம் ஒன்றிற்கு 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை ரூ.40/-ம், 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை ரூ.60/-ம், 9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ரூ.75/-ம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயில்வோருக்கு, 3 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையில் மாதம் ரூ.300/-ம், 9 ஆம் மற்றும் 10 ஆம் வகுப்பு பயில்வோருக்கு மாதம் ரூ.375/-ம் வழங்கப்படுகிறது. இதுவன்றி தனி மானியமாக விடுதியில் தங்காது பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டுக்கு ரூ.550/-ம், விடுதியில் தங்கிப் பயில்வோருக்கு ரூ.600/-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ.599.09 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### (இ) போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை

மைய அரசு திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்குப் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருப்பின், கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய குறிப்பேடுகள் வாங்குதல் போன்ற கட்டாயச் செலவுகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் ஆகியவற்றை ஈடுசெய்ய, மாதம் அதிகபட்சமாக ரூ.330/- படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இவர்கள் விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின், இத்தொகை அதிகபட்சமாக மாதம் ரூ.740/- படிப்பிற்கு ஏற்றவாறு பராமரிப்புப்படியாக வழங்கப்படுகிறது. இதுவன்றி, மாணவ மாணவிகளால் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் நேரடியாக வழங்கப்படுகின்றன.

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக், சட்டம், வணிக நிருவாக முதுகலைப் பட்டம், பட்டயக் கணக்கியல், உயிர் அறிவியல் மற்றும் இதர தொழில்நுட்பம் சார்ந்த

படிப்பினை மேற்கொள்ளும் மாணவ மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக புத்தக வங்கித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2,400/– முதல் ரூ.7,500/– வரை மதிப்பிலான புத்தகங்கள் இரண்டு பேருக்கு ஒரு செட் வீதம் வழங்கப்படுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மைய அரசின் போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை திட்டத்துடன் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(ஈ) போஸ்ட் மெட்ரிக் சிறப்பு உதவித் தொகைத் திட்டம்**

ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவியருக்கு, அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50000/–க்கு மிகாமல் இருப்போருக்கு மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் சிறப்பு உதவித் தொகைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி விடுதியில் தங்காது 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ரூ.65/- முதல் ரூ.125/– வரையில் பராமரிப்புப்படி மற்றும் கட்டாயக் கட்டணங்களுக்காக படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இதுவே விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின், மாதம் ரூ.115/– முதல் ரூ.280/– வரையில் படிப்பிற்கு ஏற்றவாறு இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

மாநில அரசின் சிறப்புப் படிப்பு உதவித் திட்டத்தின்கீழ், தொழிற் பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் பெற 10 ஆம் வகுப்பு தேர்ச்சி தேவையில்லாத இனங்களும் போஸ்ட் மெட்ரிக் படிப்பு எனக் கருதப்பட்டு, அதற்குரிய உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மேலும் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவியர்கள், தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இத்தொகை முழுவதும் இத்துறையால் அரசு தேர்வுத் துறைக்கு வழங்கப்படுகிறது.

மைய அரசு மற்றும் மாநில அரசின் இக்கல்வி உதவித் தொகைகள் அந்தந்த கல்வி நிறுவனத் தலைவர்கள் மூலமாக வழங்கப்படுகின்றன.





**6. உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை**

கல்விக் கடன் உதவித் தொகைத் திட்டம் மானியமாக மாற்றப்பட்டு "உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை" என வழங்கப்பட்டு வருகிறது. இம்மானியத்திற்குத் தகுதி பெற மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ், மாணவ மாணவியர்களுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு ரூ.6,500/–ம், முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்புக்காக ஆண்டொன்றுக்கு ரூ.7,000/–ம் வழங்கப்படுகிறது. மேற்படி உதவித் தொகை மருத்துவப் படிப்பு பயிலும் மாணவ மாணவியர்களைப் பொறுத்தவரை ஆண்டொன்றுக்கு ரூ.7,000/– ஆகும். இதில் 75% தொகை மானியமாகவும், 25% தொகை கடனாகவும் வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.775.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**7. வெளிநாடு சென்று பயில உதவித் தொகை**

சமீப காலங்களில் ஆராய்ச்சி மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பு நிலையில், குறிப்பாக, பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் போன்ற துறைகளில் வெளிநாடு சென்று மேற்படிப்பைத் தொடர இளைஞர்கள் விரும்புகின்றனர். அவர்களது எண்ணம் ஈடேறும்வகையில் இந்த உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பயன்பெற விரும்பும் பணியிலுள்ள மாணவ மாணவியர் அல்லது அவரின் பெற்றோர்/பாதுகாவலரின் மாத வருமானம் ரூ.12,000/–க்கு மிகாமலிருக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. பரிசுத் தொகைகள் (மாநில அளவில்)**

அரசுத் தேர்வுகளில் மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு அவர்களை ஊக்குவிக்க பல்வேறு பரிசுத் தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பத்தாம் வகுப்பு மற்றும்

[2006 ஆகஸ்ட் 24

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியர்களுக்கு மாநில அளவில் பொதுப் பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

| | | |
|---|---|---|
| 1 | பன்னிரண்டாம் வகுப்பு | பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ.25,000/– வீதம். |
| 2 | பத்தாம் வகுப்பு | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ.10,000/– வீதம். |
| 3 | பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு மாநில அளவில் (25 பாடங்கள்) | பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (25 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு பரிசு ரூ.2,000/– வீதம். |
| 4 | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் (முதல் ஐந்து பாடங்கள்) | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (5 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு பரிசு ரூ.1,000/– வீதம். |

**9. பரிசுத் தொகைகள் (மாவட்ட அளவில்)**

மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ



2006 ஆகஸ்ட் 24]

மாணவியர்களுக்கு பொதுப் பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன :—

| | | |
|---|---|---|
| 1 | பன்னிரண்டாம் வகுப்பு | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.3,000/– வீதம். |
| 2 | பத்தாம் வகுப்பு (3 பரிசுகள்) | |
| | முதல் பரிசு | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.1,000/– வீதம். |
| | இரண்டாம் பரிசு | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.500/– வீதம். |
| | மூன்றாம் பரிசு | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.300/– வீதம். |

**(அ) முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள்**

பன்னிரண்டாம் வகுப்பு என்பது ஒவ்வொரு மாணவ, மாணவியர் வாழ்விலும் முக்கியமான காலமாகும். இத்தேர்வில் அதிகமாக மதிப்பெண் பெறும் மாணவர்கள் மேற்படிப்பில் நல்ல பாடத்தைத் தேர்ந்தெடுத்து நல்ல எதிர்காலத்தை அமைக்க முடியும். இதனை ஊக்குவிக்க பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களில் முதல் ஆயிரம் பேருக்கும், மாணவிகளில் முதல் ஆயிரம் பேருக்கும் அவர்கள் மேற்படிப்பினைத் தொடர்கிறவர்களாய் இருப்பின், ஆண்டுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1,500/– வீதம், ஐந்து ஆண்டுகளுக்கு தகுதிப் பரிசு வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.60.00 இலட்சமாகும்.

### (ஆ) பரிசுத் தொகைத் திட்டம்

பரிசு கொடுப்பதும், பாராட்டு அளிப்பதும் மாணவ மாணவியருக்கு மிகப் பெரிய உந்து சக்தியினை ஏற்படுத்தும். இதன் மூலம் மாணவர்கள் நன்றாகப் படித்து, எளிதாக வேலை வாய்ப்பினைப் பெற இயலும். எனவே, மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும்பொருட்டு, இத்திட்டத்தின்கீழ் பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்பு, தொழிற்கல்வி படிப்புகளில் 60% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ மாணவியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, பரிசுத் தொகையாக ரூ.2,000/- முதல் ரூ.5,000/- வரையில் மொத்தம் 550 மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.18.50 இலட்சமாகும்.

### (இ) சிறந்த மாணவர்க்கான ஊக்கத் தொகை

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பொருட்டும், அவர்களது படிப்பினைத் தொடரும் பொருட்டும் இந்த ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ.800/-ம், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஓராண்டிற்கு ரூ.960/- வீதமும் அவர்கள் படிப்பினைத் தொடர்ந்தால் மட்டும் ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.8.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) காந்தி நினைவு ஊக்கத் தொகை

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண்கள் பெறும் இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அண்ணல் காந்தியடிகளின் நினைவாக இந்த ஊக்கத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஊக்கத் தொகை, முதல் வருடத்திற்கு ரூ.1,500/- வீதமும், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,000/- வீதமும் வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.3.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### (உ) தகுதி வழி வகை ஊக்கத் தொகை

ஒவ்வொரு மாவட்டத்திலும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர் மற்றும் மாணவி ஒருவருக்கும், பழங்குடியின மாணவர் மற்றும் மாணவி ஒருவருக்கும் அண்ணல் காந்தி நினைவு ஊக்கத் தொகை வழங்கப்படுவதுபோல் இவ்வகை ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.0.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. சிலேட்டுகள்

இத்துறை நடத்தும் பள்ளிகளில் பயிலும் ஒன்றாம் வகுப்பு மாணவ, மாணவியர்க்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்காக 2006–2007 ஆம் ஆண்டிற்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடு வழங்கும் நிதியிலிருந்து ரூ.2.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் சுமார் 31,000 மாணவ, மாணவியர் பயன்பெறுவர்.

## 11. இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்

பெற்றோர்களின் நிதிச் சுமையைக் கருத்தில் கொண்டும், அனைத்து மாணவர்களுக்கும் கல்வி புகட்ட வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும், 3 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவசமாகக் குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வித் துறைப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களைப் பொறுத்தமட்டில், 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவசக் குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன.

2006–2007 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு இதற்கென ரூ.500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடும், பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு ரூ. 1,819.88 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 24

## 12. சீருடைகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும், ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் ஆண்டொன்றுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் தைப்பதற்கான துணி இலவசமாக வழங்கப்படுகின்றன. இதுவரை பருத்தி மற்றும் பாலியஸ்டர் இணைந்த சீருடைகள் விநியோகிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது மாணவ மாணவியர்கள் தங்கள் அளவிற்கேற்ப தைத்துக்கொள்ளும்விதத்தில் துணிகள் மற்றும் தையற் கூலி மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.970.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் சுமார் 3,45,000 மாணவ மாணவிகள் பயன்பெறுவர்.

**தற்போது மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் சீருடைகளின் வடிவமைப்பில் மாறுதல் செய்து 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு சுடிதாரும், 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முழுக்கால் சட்டை (Full Pant) வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் இதற்காக கூடுதலாக ரூ.265.32 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

## 13. இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்

ப்ளஸ் 1 படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு 2006–2007 ஆம் ஆண்டில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட உள்ளன. இதற்காக மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்க 2006–2007 ஆம் நிதியாண்டில் ரூ. 980.57 இலட்சம் நிதி ஒதுக்கீடும், மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்க ரூ. 989.45 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 1,07,000 மாணவ மாணவியர்கள் பயன்பெறுவர்.

## 14. உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

ஒவ்வொருவருடைய அன்றாட வாழ்க்கையிலும் கணினி அறிவு ஒரு முக்கிய பங்கு ஆற்றுகிறது. இதற்காக கணினி அறிவியலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும்வகையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மேனிலைப் பள்ளிகளிலும் கணிப்பொறி அறிவியல் பாடப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன



2006 ஆகஸ்ட் 24]

2006 ஆம் ஆண்டில் கணிப்பொறி அறிவியலில் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களின் தேர்ச்சி 93% ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 15. விடுதிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்தும்பொருட்டு அவர்களை ஊக்கப்படுத்த விடுதி வசதிகள் தேவைப்படுகின்றன. தற்போது இத்துறையின்கீழ், ஆதி திராவிட மாணவ மாணவியர்களுக்காக 1,178 விடுதிகளும், பழங்குடியின மாணவ மாணவியர்களுக்காக 37 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 948 ஆதி திராவிட மற்றும் 27 பழங்குடியின விடுதிகள் அரசின் சொந்தக் கட்டடங்களிலும் 230 ஆதி திராவிட மற்றும் 10 பழங்குடியின விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும், இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் சுமார் 82,321 மாணவ மாணவியர்கள் தங்கி கல்வி பயிலுகின்றனர்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்கள் தங்கும் விடுதிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாத நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்விடுதிகள் நன்கு பராமரிக்கப்படும்வண்ணம் சிறப்புப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்

ஆசிரியர்களின் கல்வி மற்றும் கற்பிக்கும் திறனை மேம்படுத்துவது முக்கியமானதாகும். இதற்காக "அனைவருக்கும் கல்வி" என்ற "சர்வ சிக்ஷா அபியான்" திட்டத்தின்மூலம் பள்ளிக் கல்வித் துறையுடன் சேர்ந்து செயலாற்ற இத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் தரமும், வசதிகளும் உயர்வடையும். "அனைவருக்கும் கல்வி" எனும் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், ஒலி-ஒளி துணைக்கலங்கள் பயன்படுத்தி பாடம் கற்பிக்கும்வகையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மூலம் ஆசிரியர்களின் கல்வி மற்றும் கற்பிக்கும் திறன் வளர்ச்சி அடைகிறது. இதனால் மாணவர்களும் பயனடைகிறார்கள்.

## 17. இட ஒதுக்கீடு

[2006 ஆகஸ்ட் 24

இட ஒதுக்கீட்டு முறையை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தி வருவதன்மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குரிய அதிகாரம் கிடைக்க வழி வகுக்கிறது. இதன்மூலம் அவர்களுக்குரிய சமூக நீதியும் கிடைக்கிறது. எனவே, இட ஒதுக்கீட்டுப் பயன்கள் அம்மக்களுக்குச் சென்றடைய இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. அரசுப் பணியாளர் தேர்வு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின்மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி நியமனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சட்டப்படியான 18% மற்றும் 1% இட ஒதுக்கீட்டின்படியே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். இந்த இட ஒதுக்கீட்டின்படி தகுதிவாய்ந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பணிநாடுநர்கள் போதிய அளவில் கிடைக்கப்பெறாத பட்சத்தில், அவர்களுக்கான அந்தப் பணியிடங்கள் பின்னடைவு காலிப் பணியிடங்களாக அறிவிக்கப்பட்டு, அடுத்து வருகின்ற தேர்வுகள் அல்லது சிறப்புத் தேர்வுகள் மூலம் நிரப்பப்படுகின்றன.

சட்டப்படியான 18% மற்றும் 1% குறைவு ஏற்படுகின்ற இடங்களில் நுழைவு நிலையில் நேரடி நியமனம் செய்யவும், பணி மாறுதல் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைக் கொண்டு நிரப்புவதற்கும், தேவைப்பட்டால் இந்தப் பணியிடங்களுக்குரிய விதிமுறைகளை மாற்றி திருத்தங்கள் கொண்டு வந்து அதன்படி நியமனம் செய்வதற்கும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அவ்வப்போது ஆய்வு செய்து வருகிறது.

## 18. ஆதிதிராவிடர் துணைத் திட்டம் (முன்பு சிறப்பு உள்ளடக்கத் திட்டம் என்று அழைக்கப்பட்டது)

பல்வேறு திட்டங்கள்மூலம் ஆதி திராவிட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என அரசு கருதுகிறது. இதற்கேற்ப, ஆண்டு திட்ட நிதியில் மக்கள் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கப்பட வேண்டுமென மைய அரசு அறிவுறுத்தியுள்ளது. இத்திட்டமானது 21 செயலாக்கத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து, ஆதிதிராவிடர் துணைத் திட்டமானது, பகுக்கக்கூடிய (Divisible) மற்றும் பகுக்க இயலாத (Indivisible) திட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டு



2006 ஆகஸ்ட் 24]

வருகிறது. ஒவ்வொரு துறையிலும், ஒருங்கிணைக்கும் அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டு இத்திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

2006–2007 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் துணைத் திட்டமானது தமிழ்நாட்டில் புதுப்பொலிவு பெற்றுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டின் மொத்த திட்ட நிதி ஒதுக்கீடான ரூ.12,500/– கோடியில், பகுக்கக்கூடிய (Divisible) திட்டங்களின்கீழ் திட்ட வரவு செலவு இணைப்பு புத்தகத்தின்படி (Plan–Budget Link Book) ஆதி திராவிடர்களுக்கான துணை தலைப்பு 789–ன்கீழ், ரூ.1,126.89 கோடி ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டினைவிட மிகவும் அதிகமாகும். மேலும், பகுக்க இயலாத (Indivisible) திட்டத்தின்கீழ், ரூ.1,299.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2,426.31 கோடியாகும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2002–2003 முதல் 2005–2006 வரையிலான ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின் செலவின விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில ஆண்டு திட்ட ஒதுக்கீடு | திட்டமிடப்பட்ட ஆதி திராவிடர் துணை திட்ட (முன்பு சிறப்பு உள்ளடக்கத் திட்டம்) ஒதுக்கீடு | செலவினம் | | | திட்டமிடப்பட்ட ஆதி திராவிடர் துணை திட்ட ஒதுக்கீட்டுடன் செலவின விழுக்காடு | மாநில ஆண்டு திட்ட ஒதுக்கீட்டுடன் செலவின விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கக் கூடிய இனம் | பகுக்க இயலாத இனம் | மொத்தம் | | |
| 2002–03 | 575152.96 | 110373.55 | 40209.13 | 79069.95 | 119279.08 | 108.07% | 20.74% |
| 2003–04 | 700013.16 | 135370.65 | 61388.49 | 100125.28 | 161513.77 | 119.31% | 23.07% |
| 2004–05 | 800108.10 | 154343.79 | 59955.43 | 98766.25 | 158721.68 | 102.84% | 19.84% |
| 2005–06 | 910000.00 | 210455.00 | 55481.74 | 118203.08 | 173684.82 | 82.53% | 19.09% |

## 19. இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

பெரும்பாலான ஆதி திராவிடர், பழங்குடியின மக்கள் பொருளாதார நலிவின் காரணமாக வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்றனர். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் அடிப்படை வசதியுடன் கொடுத்தால், அவர்களுக்கு சமூக அந்தஸ்து உயரும் என்பதை உணர்ந்த அரசு, அடிப்படை வசதியோடுகூடிய வீட்டு மனை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவும் மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதற்கும் ரூ.1,100.09 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 20. சமுதாயக் கூடங்கள்

பல்வேறு சமூக நிகழ்ச்சிகள், குறிப்பாக சமுதாய விழாக்கள், கூட்டங்கள் மற்றும் திருமணங்கள் நடத்துவதற்கும் சமுதாயக் கூடங்கள் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு, ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக் கூடங்கள் கட்டப்படும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு சமுதாயக் கூடங்கள் கட்டித்தர ரூ.14.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 21. மயானங்கள் மற்றும் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தேவைப்படும் மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களும் தமது நிதியிலிருந்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருகின்றன. இதற்காக, குடிநீர் வசதிக்கு 15%-ம், இணைப்புச் சாலை வசதிக்கு 10%-ம் இத்துறையின் பங்குத் தொகையாக வழங்கப்படுகின்றன. ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு மயானம் மற்றும் மயானப் பாதைக்காக 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.72.94 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 22. ஈமச் சடங்குக்கு உதவித் தொகை

ஆதி திராவிடர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால், அவரின் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.500/-



வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.24,000/- ஆகும். ஆதி திராவிடர் ஈமச் சடங்கு நிதியுதவி வழங்க 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ. 283.26 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 23. சாதிச் சான்றுகள்

ஆதி திராவிடர்களுக்குரிய சாதிச் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களால் வழங்கப்படுகின்றன. அரசு ஆணை (நிலை) எண் 2137, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 11–11–1989–இன்படி அனைத்து பழங்குடியினருக்கும் சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம், உரிய வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவர்களுக்கு அரசியல் அமைப்பின்கீழ் அளிக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டை, போலியான சாதிச் சான்றுகள் அளித்து இதர இனத்தவர் கல்வி நிறுவனங்களில் சேர்தல், பொதுப் பணிகளில் நியமனம பெறுதல்மூலம் உண்மையான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அவ்வாறு அளிக்கப்பட்ட சான்றுகளின் மெய்த்தன்மையினை முறையாக ஆய்வுசெய்தல் இன்றியமையாததாகும். இதற்கென உச்ச நீதிமன்றத்தின் நெறிமுறைகளின் அடிப்படையில் அரசு, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்களில் ஒரு மானிடவியல் வல்லுநர் சேர்க்கப்பட்டுள்ளார். வட்டாட்சியர் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியர்களால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களை இக்குழுக்கள் ஆய்வு செய்யும்.

## 24. குடியுரிமைப் பாதுகாப்பு

### (அ) தீண்டாமை ஒழிப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் ஆகியவை சிறப்பாகவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கென காவல் துறை இயக்குநர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) அவர்கள் தலைமையின்கீழ் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

மேலும், இவ்விரு சட்டங்களைச் செயல்படுத்த முதல் நிலை சிறப்பு அமர்வு நீதிபதிகளைக் கொண்ட 4 சிறப்பு நீதிமன்றங்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மற்ற மாவட்டங்களில் குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்**

தீண்டாமையின தீமை குறித்து பொது மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. தீண்டாமை ஒழிப்புத் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் குறுந்திரைப்படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன.

**(இ) தீண்டாமை ஒழிப்பில் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்**

இத்திட்டத்தின்கீழ், பொதுமக்கள் நல்லிணக்கத்துடனும் அமைதியுடனும் வாழ ஊக்குவிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையைக் கடைப்பிடிக்காமல் பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையைக்கொண்டு அக்கிராமத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதற்காக 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.29.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**"மனித நேய வார விழா"** ஒவ்வோர் ஆண்டும் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள் வரை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படுகிறது. மேலும், வில்லுப்பாட்டு கலைஞர்கள் மூலம் பொதுமக்களுக்கு தீண்டாமை ஒழிப்பு குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது. இதற்காக 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.5.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சமபந்தி விருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 அல்லது அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களில் ஏற்பாடு செய்யப்படுகிறது.





**(ஈ) தலித் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டு நிறுவனம்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான, கலை, கலாச்சாரம், இலக்கியம் இவற்றைப் படைக்கும் திறனை ஊக்குவிக்கவும், இவர்கள் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்ளவும் "தலித் மற்றும் பழங்குடியினர் செயல்கள் நிறுவனம்" (DATA) என ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. தலித் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் சிறந்த படைப்புகளை வெளியிட ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 தலித் எழுத்தாளர்களுக்கும். தலித்துகளின் பிரச்சினை பற்றி எழுதும் தலித் அல்லாதவர் ஒருவருக்கும் ரூ.20,000/– வீதம் நிதியுதவி அளிக்க அரசு கருதியுள்ளது.

**25. (அ) கொத்தடிமை ஒழிப்பு**

கொத்தடிமை தொழிலாளர் முறையை அறவே ஒழிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. தேசிய அளவில் கொத்தடிமை முறையை ஒழிப்பதற்காக 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம், அதே ஆண்டு முதல் தமிழகத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கொத்தடிமைத்தனத்தில் சிக்கியுள்ளவர்களை விடுவித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை மாநிலத்தில் திறம்பட நிறைவேற்றிட அந்தந்த மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 13,051 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு ரூ.15.06 கோடி செலவில் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.110.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) கொத்தடிமைத் தடுப்பு மற்றும் மறுவாழ்வு மாதிரி திட்டம்**

கொத்தடிமைகள் அதிகமாக இருப்பதாக கண்டறியப்பட்ட திருவள்ளூர் மாவட்டத்தில் இத்திட்டம், செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதுடன், அவர்கள் மேலும் கடனாளியாக ஆவதைத் தடுப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. இம்மாவட்டத்தில் கொத்தடிமை முறையைத் தடுக்கும் விதத்தில் திட்டங்களைச் செயல்படுத்த

[2006 ஆகஸ்ட் 24

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர் தலைமையில் "திட்ட அறிவுரைக் குழு" ஒன்று செயல்பட்டு வருகிறது.

### 11. பழங்குடியினர் நலன்

பழங்குடியினர்களின் பொருளாதாரம், கல்வி மற்றும் சமூக நிலையை மேம்படுத்தி பழங்குடியினருக்கும், பழங்குடியினர் அல்லாதாருக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்குப் பழங்குடியினர் மேம்பாடு அவசியமாகிறது. பழங்குடியின மேம்பாட்டின் முக்கிய நோக்கம் இம்மக்களை பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டு நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதாகும். பழங்குடியினர் நலனுக்காக தனியே ஒரு இயக்ககம் 1-4-2000 முதல் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் நல இயக்ககம் பழங்குடியினர்கள் அதிகம் வாழும் 14 மாவட்டங்களில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் 36 வகை பழங்குடியினர்களில் 6 வகை பழங்குடியினர், அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பனியன், காட்டுநாயக்கன் ஆகியோர் பண்டைய பழங்குடியினர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர். மேற்கண்ட பழங்குடியினர் தவிர, மற்ற பழங்குடியினர்கள் பரவி வாழும் பழங்குடியினர்களாக அழைக்கப்படுகின்றனர். மொத்த மக்கட் தொகையில் 50%-க்கும் அதிகமாக பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதி, 7 மாவட்டங்களில் உள்ளது.

### 28. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில், தமிழக அரசு பழங்குடியினர் துணைத் திட்டத்தினை 1976-1977 முதல் செயல்படுத்தி வருகிறது. இதன்படி அனைத்து துறைகளும் தங்களது ஆண்டு திட்ட நிதி (Annual Plan Outlay) ஒதுக்கீட்டில், பழங்குடியின மக்கள்தொகை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப, நிதியினை ஒதுக்கீடு செய்து, வளர்ச்சித் திட்டங்கள் முழுமையாக பழங்குடியின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்வதாகும். 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் பழங்குடியின மக்கள் 6.51 இலட்சம் உள்ளனர். இத்திட்டமானது, 21 செயலாக்கத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டு திட்டத்திலிருந்து, பழங்குடியினர் துணைத் திட்டமானது, பகுக்கக்கூடிய (Divisible) மற்றும் பகுக்க இயலாத (Indivisible) திட்டங்களாக



006 ஆகஸ்ட் 24]

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துறையிலும், ஒருங்கிணைக்கும் அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டு, இத்திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், பழங்குடியினர் துணைத் திட்டமானது, தமிழ்நாட்டில் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டின் மொத்த திட்ட நிதி ஒதுக்கீடான ரூ.12,500/- கோடியில், பகுக்கக்கூடிய (Divisible) திட்டங்களின்கீழ், திட்ட வரவு செலவு இணைப்புப் புத்தகத்தின்படி (Plan-Budget Link Book) பழங்குடியினருக்கான துணைத் தலைப்பு 796-ன்கீழ் ரூ.23.68 கோடி, பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை விட அதிகமாகும். மேலும், பகுக்க இயலாத (Indivisible) திட்டத்தின்கீழ் ரூ.139.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.163.15 கோடியாகும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2002-2003 முதல் 2005-2006 வரையிலான பழங்குடியினர் துணைத் திட்டத்தின் செலவின விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட மதிப்பீடு | பழங்குடியினர் துணைத் திட்ட ஒதுக்கீடு | செலவினம் | | | ப.கு.தி. பொறுத்த செலவினத்தின் விழுக்காடு | மாநில திட்ட மதிப்பீட்டினைப் பொறுத்த செலவினத்தின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கக் கூடிய இனம் | பகுக்க இயலாத இனம் | மொத்தம் | | |
| 2002-03 | 575152.96 | 5941.03 | 2001.99 | 1427.01 | 3429.00 | 57.72% | 0.60% |
| 2003-04 | 700013.16 | 8606.00 | 3629.88 | 4869.70 | 8499.58 | 98.76% | 1.21% |
| 2004-05 | 800108.10 | 8406.42 | 3352.48 | 5014.46 | 8366.94 | 99.53% | 1.05% |
| 2005-06 | 910000.00 | 16728.94 | 2452.97 | 7730.37 | 10183.34 | 60.87% | 1.12% |

[2006 ஆகஸ்ட் 24

## 27. பழங்குடியினருக்கான அடிப்படைக் கட்டுமான அமைப்பு

### (அ) வீட்டுவசதித் திட்டம்

மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதியில் வாழும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, அரசு இம்மக்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி ஆண்டுதோறும் சமவெளிப் பகுதிகளில் ஒரு வீட்டிற்கு ரூ.34,000/- வீதமும், மலைப் பகுதிகளில் ரூ.36,500/- வீதமும் செலவினம் செய்து பழங்குடியினருக்கு வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. இத்திட்டத்தின் முழுச்செலவினமும் அரசால் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இத்திட்டத்திற்காக 2006–2007 ஆம் ஆண்டில், ரூ.16.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) குடிநீர் வசதி

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் குடிநீர் வசதி தேவைப்படும் இடங்கள் கண்டறியப்பட்டு, அதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதற்காக ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி வழங்குவதற்காக ரூ.32.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் தொடரப்படும்.

### (இ) பொருளாதார மேம்பாடு

பழங்குடியின மக்களின் விளை பொருட்களை விற்பனை செய்ய வகை செய்வதோடு மட்டுமின்றி, குறுகிய கால மற்றும் நீண்ட கால கடன்கள் வழங்குவதற்கும், பழங்குடியினருக்குத் தேவையான நுகர்பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்வதற்கும் பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMP SOCIETIES) ஏற்படுத்தப்பட்டன. தற்போது தமிழ்நாட்டில் 19 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

நான்கு தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் உதகமண்டலம், சங்கராபுரம், கொல்லிமலை, ஜவ்வாது மலைப்பகுதிகளிலும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும் வேலைவாய்ப்பில் வழிகாட்டும்வகையில் செயல்பட்டு வருகின்றன. பழங்குடியினர் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு 25 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 76 துணை சுகாதார நிலையங்களும், 7 சித்த



2006 ஆகஸ்ட் 24]

மருத்துவமனைகளும், 5 அரசு மருந்தகங்களும் மற்றும் ஒரு நடமாடும் சித்த மருத்துவ நிலையமும் பழங்குடியினர் பகுதியில் அவர்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டு வருகின்றன.

### (ஈ) குடும்ப வருவாய் ஈட்டித்தரும் திட்டங்கள்

பண்டைய பழங்குடியினர் மற்றும் பரவி வாழும் பழங்குடியினர் ஆகியோரின் குடும்ப வருவாய் ஈட்டித்தரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆடு அலகுகள் பழங்குடியினருக்கு வழங்கப்படுகின்றன. 2006–2007 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.10.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (உ) மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

பழங்குடியினர் பகுதியில் பின்வரும் மைய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

#### (i) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய உதவி

இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பழங்குடியினருக்கு வருவாய் ஈட்டித்தரும் திட்டத்திற்கு முதன்மையாகவும் இதில் ஒரு பகுதி (30% மிகாமல்) இந்த வருவாய் ஈட்டித்தரும் திட்டத்திற்கான அடிப்படை வசதிகளுக்காகவும் செலவிடப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டு ரூ.290.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டிற்கான ஊக்கத்தொகை ரூ.32.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு மைய அரசால் இத்திட்டத்திற்கென தற்காலிக ஒதுக்கீடாக ரூ.327.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### (ii) இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவுக் கூறு 275(1)–ன்கீழ் விடுவிக்கப்படும் நிதி

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 275(1)–ன்கீழ் வழங்கப்படும் நிதி பழங்குடியினர் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. விழுப்புரம் மாவட்டம், கல்வராயன்மலையில் உள்ள வெள்ளிமலையில் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், பழங்குடியினர் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்வதற்கு ரூ.231.00 இலட்சமும், ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப்

பள்ளிக்கான தொடர் செலவினங்களுக்கு ரூ.105.00 இலட்சமும் மைய அரசு வழங்கியுள்ளது. மேலும், ஒரு மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி 2006-2007 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது. மைய அரசு சேலம் மாவட்டம், கருமந்துறையில் மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்கு ரூ.1.00 கோடி நிதியினை விடுவித்துள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் தற்காலிக நிதியாக ரூ.251.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ரூ.135.00 இலட்சம் பழங்குடியினர் பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கும் மீதமுள்ள தொகை ரூ.116.00 இலட்சம் சிறுபாசன வசதிகள் அளிப்பதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iii) பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்கான மைய அரசின் நிதியுதவி

2005-2006 ஆம் ஆண்டில் மைய அரசு திட்டங்களின்கீழ், பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்காக 225 வீடுகள் கட்டித் தருவதற்கும் மற்றும் 400 பழங்குடியினருக்கு 8 மாவட்டங்களில் விழிப்புணர்வு பயிற்சி அளிப்பதற்கும் மைய அரசு ரூ.79.55 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக தற்காலிக ஒதுக்கீடாக ரூ.255.00 இலட்சம் நிதியினை மைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### (iv) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் அருங்காட்சியகம்

பழங்குடியினருக்காக அருங்காட்சியகம் ஒன்று உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் ரூ.200.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில், ரூ.120.00 இலட்சம் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பழங்குடியினர் திட்டங்களை ஆய்வு செய்தல், பழங்குடியினர் புள்ளிவிவர கணக்கெடுப்பு ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (v) ஜனஸ்ரீ பீமா யோஜனா (JBY)

பண்டைய பழங்குடியினரிடையே இறப்பு விகிதம் அதிகம் ஏற்படுவது சம்பந்தமான அறிக்கையின் பேரில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் மற்றும் அதற்கு சிறிதளவு மேலாக வாழும் 18 முதல் 58 வயது வரையுள்ள பண்டைய பழங்குடியினருக்கென ஒரு காப்பீட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் 8,000 பண்டைய பழங்குடியினருக்கு



ஆண்டுக்கான பிரீமியம் நபர் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் ஐந்தாண்டுகளுக்கு செலுத்துவதற்காக மைய அரசு ரூ.40.00 இலட்சம் அளித்துள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ரூ.80.00 இலட்சம் நிதியினை மைய அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் 16,000 பண்டைய பழங்குடியினர் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கான காலம் மூன்று ஆண்டுகளாகும். இறுதிக் கட்டத்தில் 31,000 பண்டைய பழங்குடியினர் வரை 2006-2007 ஆம் ஆண்டில் பயனடைவார்கள்.

## 28. பழங்குடியினருக்கான இதர திட்டங்கள்

### (அ) பழங்குடியினர் சுய உதவிக் குழுக்கள்

பழங்குடியினர் மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சுய உதவிக் குழுவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்த மாநிலத்தில் 3,410 சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு 51,544 பழங்குடியின பெண்கள் திறமையுடன் செயல்பட்டு வருகின்றனர்.

### (ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP)

நீலகிரியில் வாழும் பழங்குடியினரின் நலனுக்காக மட்டும் நீலகிரி மாவட்ட ஆட்சியரால் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.566.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR)

இந்திய மருத்துவக் கழக ஆராய்ச்சிக் குழுமத் திட்டப் பணிகள், காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பண்டைய பழங்குடியினரின் மருத்துவ நலன் கருதி அதற்கு வசதிகள் செய்யும் பொருட்டு பழங்குடியினர் நலப் பணியாளர்கள் மற்றும் தாய்ஸ் ஆகியோரைக் கொண்ட குழுவை நியமித்து அவர்களுக்கு இத்திட்டப் பணிகளுக்கான தொடர் பயிற்சி வழங்கப்படுகிறது.

## III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு துவக்கப்பட்டு, 1974 முதல் செயல்பட்டு வருகிறது.

இது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இக்கழகம் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் வளர்ச்சிப் பிரிவு ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டு செயல்படுகிறது. விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள், ஆசிரியர் குடியிருப்புகள், வகுப்பறைகள் போன்ற கட்டுமானப் பணிகளைத் தொழில்நுட்பப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. இக்கழகத்தின் வளர்ச்சிப் பிரிவு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தேவையின் அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது.

## 29. பொருளாதார மேம்பாட்டு செயல்பாடுகள்

### (அ) திட்டங்கள் செயல்முறையைப் பரவலாக்குதல்

மாவட்ட செயலாக்கத் திட்டம், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் அம்மாவட்டத்திலுள்ள ஆதி திராவிட மக்களின் தேவை மற்றும் தொழில் செய்வதற்கு அம்மாவட்டத்திலுள்ள வசதி வாய்ப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயனாளிகளின் தேர்வு பரவலாக்கப்பட்டு, வட்டார அளவில் தெரிவு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி

நடைமுறையிலுள்ள ஏனைய திட்டங்கள்மூலம் பயன்பெற இயலாத, மிகவும் நலிவடைந்த நிலையிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரது மேம்பாட்டிற்கென மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி தொடங்கப்பட்டு, இவர்கள் வருமானம் ஈட்டக்கூடிய தொழிலைத் தொடங்குவதற்கு நூறு விழுக்காடு மானியம் மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### (இ) சிறப்பு மாநில நிதியுதவித் திட்டம்

ஒவ்வோர் ஆண்டும் ஆதி திராவிடர் பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்த மைய அரசு ரூ.50.00 கோடி மானியம் வழங்குகிறது. இதில் இந்து ஆதி திராவிடர்கள் மட்டுமே பயனடைவார்கள். இது கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இல்லை. இதனைக் கருத்திற்கொண்டு, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் இச்சலுகைகள் இந்து



ஆதி திராவிடர்களுக்கு மட்டுமன்றி மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர்களுக்கும் கிடைத்திட தமிழகத்தின் வரலாற்றிலேயே முதன்முறையாக இந்த அரசு "சிறப்பு மாநில நிதியுதவித் திட்டம்" என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்திற்கென 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஈ) மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

தனி நபர் பயனாளிகளுக்கு மட்டும் திட்டங்கள் உதவுவது என்ற நிலைப்பாட்டினை மாற்றி தற்சமயம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மாவட்ட செயலாக்கத் திட்டத்தின் 75% நிதி ஒதுக்கீடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### (உ) நிலம் வாங்கும் திட்டம்

பெண்களுக்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட்டால், குடும்பத்தின் வாழ்க்கைத்தரம் உயர்வதுடன், சமுதாய மதிப்பும் உயரும். இந்த நிலம் வழங்கும் திட்டம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிருக்காக உருவாக்கப்பட்ட திட்டம். இத்திட்டத்தின்கீழ், 8,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் பயன்பெறும்வகையில் நிலம் வாங்க, நில மேம்பாடு மற்றும் சிறிய நீர்ப்பாசனம் மற்றும் கால்நடைப் பராமரிப்புக்காக 50% மானியமும் 50% வங்கிக் கடனும் அளிக்கப்படுகிறது. திட்டத்தின் மொத்த நிதி உதவியான ரூ.2.00 இலட்சத்தில், நிலம் வாங்க ரூ.1.00 இலட்சமும் நில மேம்பாடு, நீர்ப்பாசனம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு போன்றவற்றிற்கு ரூ.1.00 இலட்சமும் வழங்கப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ஏழைப் பெண்களுக்காக மட்டுமே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்துடன், இந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளின் விவசாயத்திற்காக மின் இணைப்புகள் வழங்குவதில் முன்னுரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பயனாளிகளுக்கு முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணத்தில் 75% விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### (ஊ) தனி நபர் பயனாளிகளுக்கான நிதி உதவி

தனி நபர் பயனாளிகளுக்கான திட்டத்தின்கீழ், தனி நபர்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ற சுய தொழில்கள் துவங்க நிதி உதவி வழங்கப்படுகிறது.

### (எ) வேலைவாய்ப்பளிக்கும் பயனுள்ள பயிற்சித் திட்டங்கள்

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெறும் வசதியை விரிவுபடுத்தும்பொருட்டு பல்வேறு தொழிற் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற் பயிற்சித் திட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட மாவட்ட தொழிற்பயிற்சி தேர்வுக் குழுவால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படுகின்றன. தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ், அதிக அளவிலான ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களின் வேலைவாய்ப்பு பெறும் ஆற்றலை வளர்க்கவும் தரமான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### (ஏ) சிறப்புப் பொருளாதாரத் திட்டங்கள்

"சிறப்புப் பொருளாதாரத் திட்டங்கள்" என்ற திட்டம் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பிழைப்புக்கு ஆதாரமாக நிரந்தர வருவாய் ஈட்டக்கூடிய குறிப்பிட்ட தொழில்முறை, மாவட்ட ஆட்சியர்களால் கண்டறியப்பட்டு அதற்கான நிதியுதவி செயல் திட்ட வடிவில் அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், ரூ.15.00 கோடி நிதியுதவி மானியத்துடன்கூடிய கடனாக வழங்கப்பட்டு, 6,000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் பயன்பெறுவர்.

### (ஐ) இளைஞர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டம்

"இளைஞர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டம்" (SEPY) என்ற திட்டத்தின்மூலம் மாவட்டத்திற்கு உரித்தான தொழில்முறைகள் கண்டறியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை வழிநடத்தும் முகமை மூலம் அவர்களால் நடத்தக்கூடிய சிறிய தொழில்கள் தொடங்க வழிவகை செய்யப்படும் இத்திட்டத்தின்கீழ், 4,000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்கள் பயனடையும் வகையில் ரூ.11.25 கோடி நிதி உதவி வழங்கப்படும்.

2006–2007 ஆம் ஆண்டில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதி திராவிட இளைஞர்களுக்கு, வருவாய் ஈட்டக்கூடிய சுய தொழில் தொடங்கவும், படித்த வேலையற்ற இளைஞர்கள், வேலைவாய்ப்பு



பெறும் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் தொழிற் பயிற்சி வழங்குதல் போன்ற திட்டங்களின்கீழ், 1.95 இலட்சம் ஆதி திராவிட இளைஞர்களுக்கு தாட்கோமூலம் ரூ.206.95 கோடி நிதியுதவி செய்யப்பட உள்ளது.

### (ஒ) தேசிய துப்புரவுப் பணியாளர் விடுவிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம்

மனிதக் கழிவை மனிதனே கையால் அள்ளும் கொடுமையை நீக்கி, அந்தப் பணியினை ஆற்றி வருபவர்களுக்குத் தகுதியான வேறு பணி வழங்கப்படும். இந்தப் பணியில் ஈடுபட்டிருந்ததாகக் கண்டறியப்பட்ட 10,000 நபர்களுக்கு ரூ.58.45 கோடி செலவில் வேறு பணிக்கான பயிற்சி வழங்கவும், மறுவாழ்வு அளித்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய துப்புரவுப் பணியாளர் மறுவாழ்வுத் திட்டம் முற்றிலும் சீரமைக்கப்பட்டு, துப்புரவுப் பணியாளர் மற்றும் அவர்களைச் சார்ந்து வாழ்பவரின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும்வகையில், அவர்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, வருமானம் ஈட்டக்கூடிய தொழிலை மேற்கொள்ளப் போதிய பயிற்சியும் பொருளாதார உதவியும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

### 30. முடிவுரை

10–06–2000 அன்று டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபம் திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் **"தமிழர்களாக இருப்போம்; எல்லோரும் மக்களாக இருப்போம்"** என்ற அறைகூவலை நனவாக்கும்பொருட்டு, திறமை வாய்ந்த மற்றும் செயலாற்றல் மிக்க மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆக்கப்பூர்வமான திட்டங்களைச் சீரிய முறையில் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளைக் கடைப்பிடித்து, இம்மக்களை வலிவோடும், பொலிவோடும் வாழவைக்க, முழு முயற்சியுடன் செயல்பட்டு வருகிறது.

IV நிதி ஒதுக்கீடு

2006–2007 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| வகை | கணக்குத் தலைப்பு | திட்டத்தில் சேராதது | திட்டம் | மைய அரசு பொறுப்பேற்புத் திட்டம் | மைய அரசு மற்றும் மாநில அரசு பங்கேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 2059–00 பொதுப்பணிகள் 2059–053 பராமரிப்பும் மற்றும் சரிசெய்தல் | 1000.00 | 0 | 0 | 0 | 1000.00 |
| 2 | 2225 01 ஆதி, பந மற்றும் இதர பிற்பட்ட வகுப்பினர் நலன் | 19579.39 | 14887.42 | 11412.50 | 332.49 | 46211.80 |
| | 02 பழங்குடியினர் நலன் | 2706.72 | 586.38 | 753.78 | 0 | 4046.88 |
| | 80 பொது | 1890.11 | 20.90 | 0 | 0 | 1911.01 |
| 3 | 2235 00 சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 மறுவாழ்வு | 0 | 0 | 0 | 225.00 | 225.00 |
| | 60 இதர சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள் | 110.00 | 0 | 0 | 0 | 110.00 |
| 4 | 2251 00 தலைமைச் செயலகம்–சமூகப் பணிகள் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 090 தலைமைச் செயலகம் | 277.40 | 0 | 0 | 0 | 277.40 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 5 | 4225 00 ஆதி திராவிடர், பழங்குடியினர் நலன் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த முதலீட்டுத் தொகை | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 ஆதி திராவிடர் நலன் | 0 | 1922.45 | 0 | 0.01 | 1922.46 |
| | 02 பழங்குடியினர் நலன் | 0 | 603.80 | 0 | 0.01 | 603.81 |
| 6 | 6225 00 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான கடன்கள் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 ஆதி திராவிடர்கள் நலன் | 0 | 25.00 | 0 | 0 | 25.00 |
| | மொத்தம்—அனுமதித்தது | 25563.62 | 18045.95 | 12166.28 | 557.51 | 56333.36 |
| | மொத்தம்—சாட்டியது (2225–01 ஆதி, பந மற்றும் இதர பிற்பட்ட வகுப்பினர் நலன்) | 0.01 | 450.00 | 0 | 0 | 450.01 |
| | பெரு மொத்தம் = அனுமதித்தது + சாட்டியது | 25563.63 | 18495.95 | 12166.28 | 557.51 | 56783.37 |

## 2006–07ஆம் ஆண்டிற்கான துறை தலைமை வாரியான வரவு–செலவு மதிப்பீடு குறித்த விவரம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்கள் | ஒதுக்கீடு | | |
|---|---|---|---|---|
| | | ஆதி திராவிடர் நலம் | பழங்குடியினர் நலம் | மொத்தம் |
| 1. | திட்டம் சேராதது | 22579.51 | 2706.72 | 25286.23 |
| 2. | திட்டம் | 17305.77 | 1190.18 | 18495.95 |
| 3. | மைய அரசு பொறுப்பேற்புத் திட்டம் | 11412.50 | 753.78 | 12166.28 |
| 4. | மைய அரசு மற்றும் மாநில அரசு பங்கேற்கும் திட்டங்கள் | 557.50 | 0.01 | 557.51 |
| | **மொத்தம்** | **51855.28** | **4650.69** | **56505.97** |



### இணைப்பு - 1
## ஆதி திராவிடர் மக்கள் தொகை (மாவட்ட வாரியாக)
(2001 கணக்கெடுப்பு)






இணைப்பு - 1 (அ)
ஆதி திராவிடர் மக்கள் தொகை %ல் (மாவட்ட அளவில்)
(2001 கணக்கெடுப்பு)






இணைப்பு - 1 (ஆ)
ஆதி திராவிடர் கல்வி எழுத்தறிவு பெற்றோர் %ல் (மாவட்ட அளவில்)
(2001 கணக்கெடுப்பு)

[2006 ஆகஸ்ட் 24





2006 ஆகஸ்ட் 24]



## இணைப்பு - 2 (ஆ)
## பழங்குடியினருள் எழுத்தறிவு பெற்றோர் % ல் (மாவட்ட அளவில்)
(2001 கணக்கெடுப்பு)




227431

அரசு மைய அச்சகம், சென்னை—600 079.